
# பொருளியல் நோக்கு

ஜூன் 1982


கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் கண்ணோட்டத்தில் வேலைவாய்ப்புகள் அளிப்பதே முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் பிரதான முன்னுரிமை அம்சமாகும். ஆரம்ப இலக்குகளை எட்டிப்பிடிக்க வில்லையாயினும் வேலைவாய்ப்புப் பெற்றவர்களின் எண்ணிக்கை இப்போது 22,000 தாண்டியுள்ளது. இப்பக்கங்களிலுள்ள படங்களில் காட்டப்படுவதைப் போல் இருபதுகளின் ஆரம்ப வயதுகளிலும் இருபது வயதுக்கும் குறைந்த பெண்களே பெரும்பாலும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுள்ளனர்.



சுங்கக் காரியாலயம், வங்கி அலுவலகங்கள், தபாலலுவலகம், கடைகள், வர்த்தக நிலையங்கள் பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுக் காரியாலயம் போன்ற பல முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள வசதிகளை உள்ளடக்கிய நவீன கட்டடம் (மேலே) ஊழியர்கள் முகாமையாளர் ஒருவரின் உரையைக் கேட்கின்றனர். (கீழே) சரியான தொழில் உறவுகளை வளர்ப்பதற்குத் தொழிற்சங்கங்களுக்குப் பதிலாக இணைப்பு ஆலோசனைச் சபைகள் வலயத்தில் உருவாக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளியல் நோக்கு

மலர் 8. இதழ் 3. ஜூன் 1982.

Appropriate Technology Services
121, POINT PEDRO ROAD
NALLUR, JAFFNA
No. 854

மக்கள் வங்கியின்
ஆராய்ச்சிப்பகுதி வெளியீடு:
தலைமைக்காரியாலயம்,
11 வது மாடி,
கொழும்பு 2,
ஸ்ரீ லங்கா.

## நிரல்கள்

2 நிகழ்ச்சிக் குறிப்பேடு

32 உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திக்கு இருந்து வரும் கட்டுப்பாடுகளும் அதன் எதிர்கால வாய்ப்புகளும்.

## விஷேச அறிக்கை

3 சுதந்திர வர்த்தக வலயம்

10 கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் முதலீடுகள்.

24 பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷனுக்காக வேலையும் பயிற்சியும்.

26 சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர் பற்றிய ஒரு சமூக வரைவு.

## சிறப்புக் கட்டுரைகள்

பிரேமச்சந்திர அத்துக்கோறளே 28 இறக்குமதிப் பிரதியீட்டிலிருந்து ஏற்றுமதி அபிவிருத்திக்கு மாறுதல்.

பொருளியல் நோக்கு கருத்துக்களையும், அறிக்கைகளையும், புள்ளிவிவரத்தரவுகளையும், உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதைக்குறிக் கோளாகக் கொண்டது.

பொருளியல் நோக்கு மக்கள் வங்கியின் ஒரு சமூகப் பணித்திட்டமாகும். எனினும் அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோக பூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக்கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக்கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரபலிப்பனவுமாகா. இத்தகைய கட்டுரைகளும், குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந் தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்துவதன் மூலமோ, விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ளலாம்.

## அடுத்த இதழில்

- ரூபவாஹினி: இலங்கையின் தவழும் தொலைக்காட்சி அடியெடுக்கிறது. இலங்கையில் விசேட தன்மைகளுடன் மூன்றும் உலக தொலைக் காட்சியின் சில அம்சங்கள்.
- வேலை வாய்ப்புப் பொருளாதார வளர்ச்சியும்
- இலங்கைக்கான பூரண சக்தித்திட்டமிடல்
- இலங்கையிலுள்ள சிரேஷ்ட செகண்டரி பாடசாலைகளில் விஞ்ஞானம் படிப்பதற்குரிய கல்விச் சந்தர்ப்பத்தின் சமத்துவத்தை அளவிடும் ஒரு மதிப்பீடும் தற்போதைய நிலைமையை உண்டாக்கிய சில காரணிகளும்.

## அட்டைப்படம்

அட்டைப்படம்—பாலித்த கன்னங்கர.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சிக் குறிப்பேடு

ஏப்ரல்

23 ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட பின்லாநது நாட்டுப் போராளர் குழுவொன்று கொழும்புக்கு விஜயம் செய்ததையடுத்து விடுக்கப்பட்ட ஓர் உத்தியோகபூர்வமான அறிவித்தலின்படி, காட்டியல் காட்டியல கைத்தொழில்கள், பால்பண்ணை அபிவிருத்தி, கிராமப் பகுதிகளுக்கு நீர்விநியோகம், சுகாதாரம், ஆரோக்கியம், வணிகப்பண்ட உதவி ஆகியவற்றில் குறித்துரைக்கப்படும் திட்டங்களுக்குப் பின்லாந்து 650 மில்லியன் ரூபா உதவி வழங்கவிருக்கிறது. பெரிய திட்டங்கள் உலக வங்கி, ஆசிய வங்கி, அரபு நிதியங்கள் ஆகியவற்றிலிருந்து நிதிகளைப் பெற வேண்டுமென வரையறுத்துவிடவும், கூட்டு முயற்சிகளில் உடனுழைக்க பின்லாந்து முதலீட்டாளர்களுக்கு ஊக்கமளிக்கவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

இவ்வருடம் இலங்கைக்கான உதவியாக 46 மில்லியன் டி.எப்.எல். (ஏறக்குறைய 370 மில்லியன் ரூபா) முற்றன நன்கொடையாக வழங்கப்படுமென்று நெதர்லாந்து உறுதி கூறியிருப்பதாக ஓர் உத்தியோகபூர்வமான அறிவித்தல் கூறியது. உதவியின் அளவு 1981ம் ஆண்டிலிருந்த அதே அளவினதாயிருந்த போதிலும், முழுத்தொகையும் கொண்ட உருவில் நெதர்லாந்திஞல் வழங்கப்படுவது இதுதான் முதல் முறையாகும். நன்கொடையின் ஒரு பகுதி வணிகப் பண்ட உதவியாயிருக்கும். எஞ்சிய தொகை ஒன்றிணைக்கப்பட்ட கிராமாபிவிருத்தி வேலைகள், கொழும்பில் சேரிகளையும் கொட்டில்களையும் அகற்றித் துப்புரவாக்கும் பணி, கடற்றெழில், சுகாதார சேவைகள் போன்ற இப்பொழுது நடைபெற்று வரும் ;அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்காகச் செலவிடப்படும்.

26 கொழும்பில் அமெரிக்க உடுதுணி; 'கோட்டா'க்கள் பற்றி அண்மையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் முடிவொன்றும் ஏற்படவில்லையென வர்த்தக—கப்பற்றுறை அமைச்சர் கூறினர். அமெரிக்கா இறக்குமதி செய்து வந்த ஆணகளுக்கும் பெண்களுக்குமான வியருறிஞ்சிகள் (சுவெட்டர்கள்) மீது ஒருதலைப்பட்சமாகத் தடை விதித்துள்ளது; அதை ஏற்றுக்கொள்ள நாம் தயாராயில்லை. இதற்கிடையில், ஐரோப்பிய பொருளாதார சமூகத்தின் ஆடை இறக்குமதி 'கோட்டா'க்கள் பற்றி ஜூன் மாதம் பிரஸல்ஸில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவிருக்கின்றன.

30 இலங்கைக்கும் சுவீடனுக்குமிடையே ஏற்பட்ட முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தமொன்று கொழும்பிலுள்ள ஜனதிபதி செயலகத்தில் கைச்சாத்திடபபட்டது. அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, சுவிட்ஸர்லாந்து, பெல்ஜிய—லக்ஸம்பர்க் பொருளாதார ஒன்றியம், சிங்கப்பூர், கொரியாக் குடியரசு ஆகியவற்றுடன் இதே போன்ற ஒப்பந்தங்கள் இப்பொழுது அமுலில் இருந்துவருகின்றன. இவ்வருடத்தின் முதல் காலாண்டில் 10.8 மில்லியன் கிலோ தேயிலை விளைச்சல் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை பதிவுசெய்துள்ளது; தென்னிந்தியாவின் தேயிலை உற்பத்தி ஜனவரி—பெப்ரவரி மாதங்களில் 3.2 மில்லியன் கிலோ வீழ்ச்சி கண்டுள்ளது; மலேசியா 0.6 மில்லியன் கிலோ தேயிலையை இழந்துள்ளது; கென்யாவின் உற்பத்தியில் 2.4 மில்லியன் கிலோ அதிகரிப்பு காணப்பட்டதெனத் தாகர்களின் அறிக்கைகள் கூறுகின்றன.

கடற்சட்ட மகாநாடு நியூயார்க்கில் கடற்சட்டம் பற்றிய ஒப்பந்தத்தை அங்கீகரித்தது. ஒப்பந்தத்தை ஆதரித்து 130 நாடுகளும் எதிர்த்து நான்கு நாடுகளும் (அமெரிக்கா, வெனிசூலா, துருக்கி, இஸ்ரவேல்) வாக்களித்தன. 17 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.

31 மத்திய வங்கி வெளியிட்டுள்ள 1981ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கைப்படி, இலங்கையின் பொருளாதாரம் 1981ஆம் ஆண்டில் மொத்தத் தேசியப் பொருளாக்கத்தில் 4.2 சதவிகித வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது முந்திய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 5.6 சதவிகித வளர்ச்சியை விடக் குறைவானதாகும். மொத்த உள்நாட்டுப் பொருளாக்கம் முந்திய வருடத்திலிருந்த அதே வளர்ச்சியை அஃதாவது 5.8 சதவிகித வளர்ச்சியைக் கண்டுள்ளது; ஆள்வீத மொ- தே. பொருளாக்கத்தில் 2.4 சதவிகித அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யும் கைத்தொழில்களின் உற்பத்தியளவு தோட்டத் துறையின் மேலான செயற்பாட்டினுலும் ஆடை ஏற்றுமதிகளாலும் 1980 ஆம் ஆண்டிலிருந்ததைவிட மிகத் துரிதமாக வளர்ந்தது. எனினும் கைத்தொழில் துறை முழுவதும் மின்சார சக்தித் தட்டுப்பாடுகளாலும் பெற்றேலியம் வடிசாலை மூடப்பட்டதனுலும் மோசமாகப் பாதிக்கப்பட்டு வந்தது. நிர்மாணம், வர்த்தகம், வங்கித் தொழில், மற்றும் சேவைகள் ஆகிய துறைகளில் வளர்ச்சி மந்தகதியை அடைந்தது. கட்டட நிர்மாணத் துறை வளர்ச்சியே காணவில்லை .எண்ணெய்ச் செலவினம் நாட்டின் பிரமாண்டமான வர்த்தகப் பற்றுக் குறையைப் பெருமளவுக்கு அதிகரித்துவிட்டதென்றும், 1981ஆம் வருட பெற்றேலியம் செலவினம் நாட்டின் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் 42 சத விகிதத்தை விழுங்கிவிட்டதென்றும் மத்திய வங்கியின் அறிக்கை குறிப்பிடுகிறது.

மே

5 தோட்டப் புனருத்தாரணத்துக்கும் பன்முகப்படுத்தும் திட்டங்களுக்கும் எஸ்.டி.ஆர். (விசேஷ எடுப்புரிமைத் தொகை) 7.8 மில்லியனுக்கு (20 மில்லியன் டாலர்) மேற்படாத கொடுகடனுக்கான ஒப்பந்தமொன்றைச் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்துடன் செய்வதற்கும், இப்பணத்தை அரச தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கும் ஜனதா பெருந்தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இத்திட்டத்துக்கு நிறைவேற்று முகவர்களாயிருக்கக் கூடிய தேயிலை சிறு காணிக்காரர் அபிவிருத்தி அதிகார சபைக்கும் மீண்டும் கடனுகக் கொடுப்பதற்குமான யோசனையொன்றுக்கு அரசாங்க அங்கீகாரம் வழங்கப்பட்டது.

அரசாங்கம் அங்கீகரித்துள்ள ஒரு யோசனையின்படி இலங்கை 80 மில்லியன் பிரெஞ்சு பிராங்குகளுக்கு (ஏறக்குறைய 312 எல்லியன் ரூபா) மேற்படாத ஒரு கலவன் கொடுகடனுக்கான ஒப்பந்தமொன்றைப் பிரெஞ்சு அரசாங்கத்துடன் செய்யவிருக்கிறது. இக் கடனிலிருந்து பிரதானமாகப் பாரிய கொழும்பு தொலைபன்னிப் பரிவர்த்தனை நிலையத்துக்குரிய மேலதிக தேவைகளை வழங்கல், கட்டுநாயக்க விமான நிலையத்துக்கான வளிமண்டலச் சாதனங்களை வழங்கல், இரத்மலானை வேலைக் களத்துக்கான தேவைகளை வழங்கல், இலங்கை மின்சார சபைக்கு 80 மெகாவாட் டீஸல் இயந்திரத்தை வழங்குவதற்கான செலவில் ஒரு பகுதி ஆகியவற்றிற்குப் பணம் கொடுக்கப்படும். ஆனுல் இந்தக் கொந்தராத்துகள் பிரெஞ்சு வழங்கல் கம்பெனிகளுக்கு வழங்கப்பட்டிருந்தால் மட்டுமே இப்படிச் செய்ய முடியும்.


6 ஹங்கேரிய மக்கள் குடியரசு சர்வதேச நாணய நிதியத்தில் ஓர் அங்கத்தவராகச் சேர்ந்தது. நிதியத்தில் புதிய அங்கத்தவரின் 'கோட்டா' (அனுமதிப் பங்கு) 375 மில்லியன் எஸ்.டி.ஆர்- ஆகும். (எஸ்-டி-ஆர்- என்பது விசேஷ எடுப்புரிமைப் தொகை. அமெரிக்க டாலர் சம்பந்தமாக ஒரு எஸ்- டி- ஆரின் பெறுமதி 1.2 டாலர். இது நாளுக்கு நாள் மாறுகிறது. 1981 ஜூன் 16ஆம் திகதி ஒரு எஸ்-டி-ஆர்- 22 ரூபா மதிப்புடையதாயிருந்தது.) சர்வதேச நாணய நிதியத்தில் இப்பொழுது மொத்தம் 146 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. ஹங்கேரிய மக்கள் குடியரசு சேர்க்கப்பட்டதுடன், நிதியத்தில் அங்கத்தவர்களின் மொத்தக் 'கோட்டா' 61,059,800,000 எஸ்-டி.ஆர். ஆக இருக்கிறது.

10 அபுதாபியிலுள்ள இஸ்லாமிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த மூவரைக் கொண்ட தூதுக்குழுவொன்று அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதறகாக, கொழும்புக்கு வந்து சேர்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வர்த்தக வலயம்



கட்டுநாயக்க கைத்தொழில் செய்முறை வலயம் நான்கு வருட செயற்பாட்டைப் பூர்த்தி செய்கின்றது. 1978ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து, அது 158 திட்டங்களை அங்கீகரித்திருக்கின்றது; இவற்றில் 82 திட்டங்கள் சம்பந்தமாக உத்தியோகபூர்வமான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. இவற்றுள் 47 திட்டங்களில் ஏற்கெனவே வர்த்தக உற்பத்தி ஆரம்பமாகிவிட்டது. இக்கருதுகோளைக் கண்டித்தவர்களும் உண்டு; இதை ஆதரித்தவர்களும் உண்டு. அதன் குறிக்கோள்களையும் காரிய சாதனைகளையும், அதனால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள செலவுகளையும் நன்மைகளையும் மதிப்பிடுவதற்கு இது ஏற்ற சமயமாகும். எனினும், போதிய புள்ளி விவரங்கள் சுலபமாகக் கிடைக்கக்கூடியனவாயில்லை. ஆயினும், இந்த விசேட அறிக்கையில், கிடைக்கும் புள்ளி விவரங்கள் வரலாற்று முறையான இயைபுக்குடன் பரிசீலனை செய்யப்படுகின்றன

புவியியல் ரீதியாக இலங்கை ஒரு சிறிய நாடாகும். சுதேச மூலப் பொருள்கள் குறுகலான இடங்களில் பரவலாகக் கிடைக்கக் கூடியனவாயிருக்கின்றன. அமெரிக்கா, சோவியத் ரஷ்யா, இந்தியா, சீனா போன்ற பெரியதில் அமைப்புகளின் விஷயத்தில் உள்ளது போலன்றி, இலங்கையைப் பொறுத்தவரை, பெரும்பாலும் பரிமாணக் காரணங்களினால், சுயநிறைவு முறையில் அபிவிருத்தியடைதல் (இது பெரும்பாலான பொருள்கள் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஓர் அபிவிருத்தி நிலையாகும்) சமது விருப்பத்துக்கு உட்பட்ட ஒரு காரியமாயில்லை. இத்தகைய நாடுகளில் கூட ஏற்றுமதிகளும் இறக்குமதிகளும் பொருளாதாரத்தின் ஒரு முக்கியமான அங்கமாகிவிடுகின்றன.

பொருளாதார ரீதியாகப் பிழைப்பாதார மட்டத்துக்கு மேல் முன்னேறவேண்டுமானால், இலங்கை ஏற்றுமதி—இறக்குமதித் துறைக்குள் பெருந்துணிவுடனும் பேருக்கத்தோடும் இறங்க வேண்டும். பண்டைக்காலத்திலே உணவுப் பொருள்கள் பெரும்பாலும் உள்நாட்டிலேயே விளைவிக்கப்பட்டதாலும், வரையறுத்த நுகர்ப் பொருள்களின் தேவை உள்நாட்டுக் கைவினைஞர்களால் பூர்த்தி செய்யப்பட்டதாலும், ஆளும் இராஜ பரிவாரங்களுக்கான பெரும்போகப் பொருள்களின் விஷயத்தைத் தவிர்த்து, ஏற்றுமதி—இறக்குமதி வியாபாரம் சிறு அளவிலேயே நடைபெற்றது. அராபியர் சம்பந்தப்பட்ட வாசனைத் திரவிய வர்த்தகத்துடன் ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்கவாறு அதிகரிக்கத் தொடங்கின. ஆனால், விரைவில் போர்த்துக்கீசியர் இவ்வர்த்தகத்தை வசப்படுத்தியதுடன் இந்நிலை மாறிவிட்டது. கறுவா போன்ற வாசனைத் திரவியங்களின் ஏற்றுமதி, டச்சுக்காரர்கள் தோட்டங்களை அமைக்கத் தொடங்கியதன் மூலம் படிப்படியாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரிட்டிஷாரின் வருகையுடன் ஒரு தோட்டப் பொருளாதாரத்துக்கு வழிவிட்டது. பிரிட்டனில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் ஆரம்ப அவத்தையில் மையத்துக்கும் சுற்றுவட்டத்துக்குமிடையே ஒரு சிறந்த தொழில் பிரிப்பு தோன்றியது, பிரிட்டனில் சுற்றுவட்டத்திலிருந்து வந்த தோட்டப் பொருள்களும் கனிப்பொருள்களும் மையத்திலிருந்து வந்த தொழிற்சாலை உற்பத்திப் பொருள்களுக்குப் பதில் கொடுக்கப்படத் தொடங்கின.

சுதந்திரம் பெற்ற சமயத்தில் (அதற்கு முன்புகூட) நாட்டிலுள்ள சகலவிதமான கருத்துக் கொண்டவர்களும் தோட்டப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட இந்தக் குறிப்பிட்ட இறக்குமதி—ஏற்றுமதிக் கட்டுக்கோப்பை மாற்றி, இறக்குமதிகளைப் பிரதியீடு செய்வதற்காக உள்நாட்டு உற்பத்தியைப் பன்முகப்படுத்தி, எதிர்காலத்தில் புதிய ஏற்றுமதிகளைத் தேடும் நம்பிக்கை கொள்ளவேண்டியதவசியமென்பதில் ஒற்றுமைப்பட்டனர். பின்னர், உதாரணமாக, கடந்த 50 வருடங்களில் விவசாயத் துறையிலே நெற்சாகுபடியின் கீழுள்ள ஏக்கர் பரப்பு பெருமளவில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. இதனுடன் உயர் விளைச்சல் தரும் புதிய ரகங்கள் சேர்க்கப்பட்டதன் விளைவாக, ஜனத்தொகை அதிகரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த போதிலும், அரிசியில் சுய நிறைவு ஒரு குறிப்பிட்ட அளவுக்குப் பெறப்பட்டுள்ளது.

இந்தப் பன்முகப்படுத்தலின் இரண்டாவது கட்டம், 1963ஆம் ஆண்டில் உலக வங்கி போன்ற வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனைக்கெதிராகக் கைத்தொழில்களைப் பெருமளவில் ஏற்படுத்தும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டமையாகும். இறக்குமதிகளை மாற்றீடு செய்வதற்கான கைத்தொழில் முயற்சிகளின் கட்டம் 1960களின் பிற்பகுதியில் தொடங்கப்பட்டது. இறக்குமதி செய்யப்பட்டு வரும் பொருள்களில் எத்தனை பொருள்களைச் சாத்தியமோ அத்தனை பொருள்களை உள்நாட்டில் உற்பத்தி செய்வதே இதன் நோக்கம். இது அச்சமயத்தில் நிலவிய சிந்தனை பிரயோகித்த பலத்த செல்வாக்கினால் உருவாக்கப்பட்ட ஓர் உபாயமாகும். அத்துடன், கைத்தொழில்மயமான நாடுகளுக்கும் இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்குமிடையே தெளிவாகத் தெரிந்த “ஒப்பியல் அனுகூலங்களி”னாலும் இதைக் கைக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இது இந்தியா, பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகளாலும், அதற்கு முந்திய ஒரு காலத்தில் சோவியத் யூனியனாலும் ஜப்பானாலும் பின்பற்றப்பட்ட ஒரு கொள்கையாகவுமிருந்தது. 1970களின் முற்பகுதியில் கைத்தொழில் மையத்திலுள்ள முக்கிய நாடுகளின் உள்நாட்டுப் பொருளாதாரக் கட்டுக்கோப்புகளில் மாற்றங்கள் ஏற்பட்டதன் காரணமாக, மையத்திலிருந்து மூலதனம் சுற்று வட்டத்திலுள்ள சில திட்டுகளுக்கு ஓடியது. ஏனென்றால், இத்திட்டுகள் (நாடுகள்) தங்களுடைய தொழிலாளர்கள் உத்தரவுகளுக்குப் பணிந்து நடப்பவர்கள் என்றும் குறைந்த சம்பளம் பெறுவோர் என்றும் எத்தகைய வரி விதிப்புகளும் இருக்காவென்றும் ஒரே விதமான ஊக்கச் சலுகைகளே நடைமுறையில் இருந்து வருமென்றும் உத்தரவாதமளித்தன. 60களின் பிற்பகுதியிலும் 70களின் முற்பகுதியிலும் இத்தகைய திட்டுகளில் (நாடுகள்) உடைகள், மின்னணு (இலத்திரன்)க் கைத்தொழில்களின் சில அம்சங்கள் போன்ற கைத்தொழில்கள் இட மாற்றம் செய்யப்பட்டதனால் புதிய தொழில் பிரிப்பு போலத் தோன்றிய ஒன்று தன்னைப் பலப்படுத்திக்கொள்ளத் தொடங்கியது. தொழில் கோணத்திலிருந்து நோக்குமிடத்து அப்படிச் செய்வது எவ்வளவோ அதிக இலாபத்தைத் தரக்கூடியதும் தொல்லை குறைந்ததுமாகுமென்பதே வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கூறிய நியாயம்.

பிரதானமாக மேற்கத்திய சந்தைகளுக்காகக் கைத்தொழில் ஏற்றுமதிகளில் நேரடியாக முதலீடு செய்யும் இந்த உபாயம் ஜப்



பான், தென்கொரியா, தைவான், போலந்து, ஹங்கேரி, ஹொங் கொங், சிங்கப்பூர் போன்ற இவ்வளவு வித்தியாசமான நாடுகளில் காணப்பட்டுள்ளது; பிற்குறித்த ஹொங் கொங், சிங்கப்பூர் ஆகிய இரு நாடுகளும் ஏற்றுமதிக்கான வெளிநாட்டு முதலீடுகளுக்குப் பிரதான உதாரணங்களாகக் கொள்ளப்படுகின்றன. எனினும், ஏற்றுமதித் திசை வழிப்படுத்திய நாடுகளின் உள்நாட்டுக் கட்டுக்கோப்புகளின் வெளித் தோன்றும் ஒற்றுமைகள் ஒருபுறமிருக்க, அக்கட்டுக்கோப்புகளில் எப்பொழுதும் பலத்த வித்தியாசங்கள் இருந்து வந்துள்ளன.

இவ்விதமாக, சித்திகரமாகக் கைத்தொழில்களை ஏற்படுத்தியுள்ள ஆசியாவிலிருக்கும் ஒரே ஒரு நாடான ஜப்பான் சுதந்திரப் பொருளாதாரம் எனப்படும் ஒரு பொருளாதாரத்தை எப்பொழுதுமே கொண்டிருந்ததில்லை. சட்டாபேரம் (சாகச வியாபாரம்) செய்யும் நோக்குள்ள மூலதனத்துக்கும் ஜப்பானிய தேசிய நலனுக்கு உகந்ததாயில்லாத மற்றும் வகையான முதலீடுகளுக்கும் ஜப்பான் ஒருபோதும் தனது கதவுகளைத் திறந்துவிட்டதேயில்லை. ஜப்பான் எப்பொழுதும் மறைமுகமான வேலிகளாலும், பொருளாதாரத்துக்கும் அரசாங்க அமைப்புக்கு மிடையேயுள்ள நெருங்கிய தொடர்பினாலும் பாதுகாக்கப்பட்டது. இதற்கு எம். ஐ. ரி. ஐ. உதாரணமாகும். இப்பாதுகாப்பு வேலிகள் நன்கு கணிக்கப்பட்ட ஒரு நீண்ட கால உபாயத்தின் பேரில் ஜப்பானிய உற்பத்தித் திறனையும் ஏற்றுமதிகளையும் கவனமாக முன்னேற்றியுள்ளன. இத்தகையதொரு ஜப்பானிய உபாயத்தின் வேர்கள் ஒரு நூற்றாண்டுக்கு அப்பால் மெய்ஜி அரச வம்சம் மீண்டும் அரசுகட்டிலேறிய காலம் வரை படர்ந்துள்ளன. மெய்ஜி அரச வம்சமே ஜப்பானைத் திறந்துவிட்டது.

ஏற்றுமதித் திசை வழிப்படுத்திய உபாயம் 1970களில், குறிப்பாக அமெரிக்காவினதும் ஐரோப்பாவினதும் பணச் சந்தைகளில் ரொக்கப் பணம் அதிக அளவில் புரண்டபோது, சில சோஷலிஷ்ட் நாடுகளிலும் பின்பற்றப்பட்டுள்ளதாகத் தோன்றுகிறது. கைத்தொழில்களை அமைக்கும் நோக்கங்களுக்காக போலந்து, ஹங்கேரி போன்ற நாடுகள் வர்த்தக வங்கிகளிலிருந்து பெருமளவிலான வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றன. இக்கைத்தொழில்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் இறுதியில் மேற்கத்திய சந்தைகளில் விற்கப்படுவதாயிருந்தன. மேற்கத்திய வங்கிகளின் நிதியளிப்பு வாயிலாகத் தொழில் நுட்பவியலை இடமாற்றஞ் செய்வதும், ஏற்றுமதிகள் மூலம் அதற்குப் பணம் கொடுப்பதுமே இக்கடன் வாங்கலின் நோக்கம். இந்த உபாயம் ஒரு பக்கத்தில் மேற்கத்திய வங்கியாளர்களுக்கும் மேற்கத்திய இயந்திர உற்பத்தியாளர்களுக்கும் மறு பக்கத்தில் போலந்து மக்களுக்கும் ஹங்கேரி மக்களுக்கும் நன்மை புரிவதாகத் தோன்றியது. போலந்தைப் பொறுத்தவரை, இவ்வுபாயம் பல சிக்கலான பிரச்சினைகளால் குலைந்துவிட்டது; அதே

வேளை ஹங்கேரியில் அது வெற்றி பெற்றதாகத் தோன்றுகிறது. இந்த உபாயத்தைப் பரீட்சித்துள்ள அல்லது பரீட்சித்துவரும் மற்றும் சோஷலிஸ்ட் நாடுகளில் சீனாவும் ஒன்றாகும். சுதந்திர வர்த்தக வலயம் போன்ற திட்டுகளுக்குப் பெரும்பாலும் ஹொங் கொங்—சீன மூலதனத்திலிருந்தே நிதியளிக்கப்பட்டு வருவதைச் சீனா கண்டறிந்துள்ளது.

இந்த ஏற்றுமதித் திசை வழிப்படுத்திய உபாயத்தைப் பயன்படுத்த முயன்றுள்ள மற்றும் நாடுகள் இலத்தீன்—அமெரிக்க நாடுகளாகும்.

இந்நாடுகள் மேற்கொண்டுள்ள பல்வேறு ஏற்றுமதித் திசைவழிப்படுத்திய உபாயங்களுக்கிடையே முக்கியமான வித்தியாசங்கள் இருக்கின்றன. ஜப்பானைப் பொறுத்த வரை, அது தனியார் மூலதனத்தினால் நிதியளிக்கப்பட்ட ஓர் ஏற்றுமதி உபாயமாயிருந்தது. ஆனால் அது அரசாங்கத்தினால் பலமாகக் கட்டுப்படுத்தப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டது. ஆதலால், அதை ஒரு "சுதந்திர ஏற்றுமதி—இறக்குமதிப் பொருளாதாரம்" என்று அழைக்க முடியாது. தைவான், ஹொங்கொங், சிங்கப்பூர் ஆகிய நாடுகளைப் பொறுத்தவரை, குறிப்பாக 60 களின் பிற்பகுதியும் 70களின் முற்பகுதியுமான முக்கிய வருடங்களில் மேற்கத்திய சந்தைகளை அடைவது சுலபமாயிருந்த போது அந்நிய பல்தேசிய நிறுவனங்களாலேயே பெருமளவில் முதலீடு செய்யப்பட்டது.

சோஷலிஸ்ட் நாடுகளைப் பொறுத்த வரை, சில நாடுகள் தங்களுடைய திட்டங்களின் செலவுகளைச் சமாளிப்பதற்காக மட்டுமே வங்கி நிதியளிப்பைக் கோரின; கூட்டு முயற்சிகளுக்காகச் சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலீடு செய்யுமாறு நேரடியான அந்நிய மூலதனத்துக்கு அழைப்பு விடுத்த நாடுகளைப் பொறுத்தவரை, அம்முயற்சிகள் எப்பொழுதும் சம்பந்தப்பட்ட நாட்டில் உள்ள சமூகத்துறையுடனான (அஃதாவது அரசாங்க அல்லது கூட்டுறவுத் துறை) முயற்சிகளாக இருந்தனவேயன்றி, தனியார் மூலதனத்துடனான முயற்சிகளாக இருக்கவில்லை. வெளிநாட்டு மூலதனத்தின் புவியரசியலை நோக்கும் போது இந்த அம்சங்கள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும். ஏனென்றால், இலங்கையிலுள்ள சுதந்திர வர்த்தக வலயத்தின் ஆதரவாளர்கள், எதிர்ப்பாளர்கள் ஆகிய இரு சாராராலும் இந்த அடிப்படை அம்சங்களைக் கவனத்திற்கெடுக்காமல் செம்மையற்ற அறிக்கைகள் அளவு மீறி விடுக்கப்படுகின்றன.

தற்சமயம், மேற்கத்திய நாடுகளில் ஏற்பட்டுள்ள தற்காலிக வியாபார ஒடுக்கம் அதிக இலாபம் பெறுவதற்காக வெளிநாடுகளில் முதலீடு செய்யும்படி அவற்றின் முதலீட்டாளர்களைப் பிடித்துத் தள்ளிக்கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. ஆனால் இந்த வியாபார ஒடுக்கத்துடன் சேர்ந்து அந்நாடுகளில் வேலையில்லாமையும் அதிகரித்துள்ளதால், உள்நாட்டு வேலைகளைக் காக்கவேண்டுமென்ற பாதுகாப்புவாதம் தோன்றியுள்ளது. உடைக் கைத்தொழில் விதிக்கப்பட்ட 'கோட்டா' முறையிலும், மற்றும் துறைகளில் காப்பு வரி முறைகளைப் புகுத்தும் முயற்சிகளிலும் இது தெளிவாகக் காணப்படுகிறது. இந்நாடுகளில் சிலவற்றிற்கு, ஒரு நீண்ட கால உபாயமாக, தங்களுடைய கைத்தொழில்களைப் புனரமைப்புச் செய்யவேண்டிய உத்தியோக பூர்வமான கடப்பாடு இருந்து வருகிறது. அப்பொழுதுதான் தொழிலாளர் செறிவுள்ள கைத்தொழில்களை மூன்றாம் உலகுக்கு விட முடியும். உதாரணமாக, ஐரோப்பியக் கைத்தொழில் இவ்வுபாயம் கையாளப்பட்டால், தொழிலாளர் செறிவுள்ள உற்பத்தியைச் சுற்று வட்டத்தில் விட்டுவிட்டு, உயர் தொழில் நுட்பவியல் சார்ந்த கைத்தொழில்களில் ஐரோப்பா முழுக்கவனம் செலுத்த முடியும். எனினும், கைத்தொழில்களின் புனரமைப்புச் சம்பந்தமான இந்த நன்னோக்கங்களும் ஓரளவு வாக்குச் சாதுரியமான அறிக்கைகளும் வெளியிடப்படும் அதே வேளையில் பரம்பரையாகத் தொழிலாளர் செறிந்திருந்த துறைகளின் தரம் ஐரோப்பாவில் உயர்த்தப்பட்டுள்ளது.

தனியார் துறை சம்பந்தமாக உறுதியான கட்டுப்பாடுடன வெளிநாட்டுத் தனியார் முதலீடுகளுக்கும் சம அளவு முக்கியத்துவம் அளித்த புதிய அரசாங்கமொன்று 1977ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டதையடுத்து, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காகச் சு. வ. வலயத் திட்டத்துக்கு உயர் முதலிடம் அளிக்கப்பட்டது. அப்போது பிரதமராயிருந்த கனம் ஜே. ஆர். ஜயவர்தன "ரப்பர் சீமான்கள் வரட்டும்" என்ற அழுத்தந் திருத்தமான சொற்றொடரை உபயோகித்தார். பின்னர், சுதந்திர வர்த்தக வலயத்தின் கட்புலனாகும் தன்மை வெகுவாக அதிகரித்துவிட்டது, அதன் 'வெற்றி' அரசாங்கத்துக்குச் சொந்தமான சகல பத்திரிகைகளிலும் சித்திரிக்கப்பட்டு வந்ததால் சு. வ. வலயத்தை ஆதரித்து அநேக அறிக்கைகள் விடுக்கப்படுகின்றன. எதிர்க்கட்சியினரால் சம உக்கிரத்துடன் அதை எதிர்த்து அறிக்கைகள் விடுக்கப்படுகின்றன. இந்த ஆய்வறிக்கையின் நோக்கம் பிரசாரத்தினதும் எதிர்ப்பிரசாரத்தினதும் திரைக்குப் பின்னால் போய்ப் பார்ப்பதுதான். உண்மை நிலைமையை அறிவது கடினம், ஏனென்றால் பா. தொ. பொ. கமிஷனின் தகவல்கள் உடனடியாகக் கிடைப்பதில்லை.

ஏற்றுமதிச் செய்முறை வலயம் என்பது முன்னரே இருந்துவரும் சுதந்திர துறைமுகங்கள் அல்லது சுதந்திரவர்த்தக வலயங்கள் என்பதிலிருந்து தோன்றியதொன்றாகும். அது அடிப்படையில் ஒரு நாட்டுக்குள்ளே பூகோள ரீதியாகத் தனியே பிரிக்கப்பட்ட ஒரு சிறிய பகுதியாகும். ஏற்றுமதி நோக்குள்ள கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு வெளிநாட்டு மூலதனத்தை ஈர்க்கும் நோக்கத்துக்காக இது அமைக்கப்படுகிறது. இவ்வலயங்களில் ; முதலீட்டாளர்களுக்குப் பொதுவாக மிக அனுகூலமான முதலீட்டு நிலைமைகளும் வர்த்தக நிபந்தனைகளும் வழங்கப்படுகின்றன. விருந்தோம்பும் நாட்டிலுள்ள மற்றும் கைத்தொழிலதிபர்கள் அனுபவிப்பதைவிட எவ்வளவோ சிறந்த நல உரிமைகளை இவர்கள் அனுபவிக்கின்றார்கள். ஐ. நா. கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனத்தின் அறிக்கையொன்று ஏற்றுமதிச் செய்முறை வலயம் பற்றிய கருது

கோளை விவரிக்கையில், "வெளிநாட்டுத் தொழில் முயற்சியாளர், உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர் ஆகிய இரு சாராருக்கும் தகுந்த பல ஊக்கச் சலுகைகளை வழங்குவதன் மூலம் ஒரு கைத்தொழில் பேட்டைக்குள்ளே நவீன உற்பத்தி இயந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலைகளை ஸ்தாபிக்கும் நடவடிக்கையை" அது உள்ளடக்குகிறதெனக் குறிப்பிட்டுள்ளது. "உற்பத்தி, இயந்திர இறக்குமதி மீதான தீர்வையிலிருந்து குறைந்தபட்ச யாக்கவரி விலக்குகள், அனுகூலமான விகிதங்களில் இலாபங்களை திருப்பியெடுத்துச் செல்லச் சுதந்திரம், நியாயமான கட்டணங்களில் மற்றும் வசதிகளும் சேவைகளும் ஆகியவற்றை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதற்கு" ஏற்பாடு செய்ய விசேஷ சட்டங்கள் இயற்றப்படுகின்றன

இன்று "சுதந்திர வர்த்தக வலயம்" எனும் சொற்றொடர் மூன்று பரந்த கருதுகோள்களை உள்ளடக்குவதற்காக விரிவாக்கப்பட்டுள்ளது—ஏற்றுமதிச் செய்முறை; வெளிக்கரை வங்கித்தொழில்; சரக்குகளை ஒரு கப்பலிலிருந்து இன்னொரு கப்பலுக்கு மாற்றுதல், சரக்குகளைப் பண்டசாலையில் வைத்தல், ஏற்றுமதி இறக்குமதி நிலைய வியாபாரம். எனினும், பொது வழக்கில், சுதந்திர வர்த்தக வலயம் என்பது ஏற்றுமதி செய்முறை நிலையத்துடன் ஒன்றிணைக்கப்பட்டுவிடுகிறது. சுதந்திர துறைமுகங்களும் சுசந்திர வர்த்தகப் பிரதேசங்களும் மிக நீண்ட காலமாக இருந்து வந்துள்ள போதிலும், ஏ. செ. நிலையம் ஒப்பியல் ரீதியாக ஒரு புதிய தோற்றப்பாடாகும். கடந்த 15 வருட காலத்தில் மட்டுமே ஏ. செ. நிலையம் என்ற இப்புதிய கருதுகோள் வெளித்தோன்றியுள்ளது.

இத்தகைய ஒரு நிலையம் 1958 ஆம் ஆண்டில் அயர்லாந்திலுள்ள ஷானொன் பகுதியில் அங்குள்ள விமான நிலையத்துக்குள்ளே ஸ்தாபிக்கப்பட்டது. அதன் வெற்றி, ஏ. செ. நிலையங்களை அமைப்பது பற்றிச் சிந்திக்க உலகத்திலுள்ள மற்றும் நாடுகளுக்கு ஒரு தூண்டுகோலாக அமைந்தது. ஆசியப் பிரதேசத்தில் தைவான், இந்தியா ஆகிய இரு நாடுகள் தாம் இக்கருதுகோளை முதன் முதலாகப் பரீட்சித்துப் பார்த்த நாடுகள்; தைவானின் காவோஸியூங் ஏற்றுமதிச் செய்முறை வலயம் முதலாவதாக 1965ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. 1970ஆம் ஆணடில் தைவான் மேலும் இரு வலயங்களை ஸ்தாபித்தது. அதேவருடத்தில் தென் கொரியா மாஸா சுதந்திர ஏற்றுமதி வலயத்தை நிறுவியது. 1972ஆம் ஆண்டில் பிலிப்பைன்ஸ், பட்டானில் ஒரு வலயத்தை ஸ்தாபித்தது. மலேசியா பினாங்கில் பயான் லேபாஸ் சுதந்திர வர்த்தக வலயத்தை ஸ்தாபித்தது. 70களின் முற்பகுதிக்குள் ஆறு ஆசிய நாடுகள்—தைவான், தென்கொரியா, பிலிப்பைன்ஸ், தென் வியட்னாம், மலேசியா, இந்தியா—ஏற்றுமதிச் செய்முறை வலயங்களை ஸ்தாபிக்க ஏற்கெனவே நடவடிக்கைகளை எடுத்துவிட்டன. எனினும் நான்கு வலயங்கள் மட்டுமே தொழிற்பட்டன; 1970களின் நடுப்பகுதியில் பாகிஸ்தான், இந்தோனீஷியா, தாய்லாந்து, இலங்கை போன்ற மற்றும் ஆசிய நாடுகள் ஏற்றுமதிச் செய்முறை நிலையங்களை அமைப்பது பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தன. 1970களின் போது ஏ. செ. வலயம் பற்றிய கருதுகோள் ஆசியாவுக்கு வெளியே கூட துரிதமாகப் பிரபலமடைந்துவிட்டது. ஆசியப் பிரதேசத்துக்கு வெளியேயுள்ள குறைந்தபட்சமாக மற்றும் 30 வளர்முக நாடுகள் ஏ. செ. வலயங்களை ஸ்தாபிப்பதில் அக்கறை காட்டின. ஏ. செ. வலயம் பற்றிய கருதுகோள் சர்வதேச மட்டத்தில் சுறுசுறுப்பாக வளர்க்கப்பட்டது. அத்துடன், ஷானொன் சுதந்திர விமான நிலைய அபிவிருத்திக் கம்பெனியைச் சேர்ந்த அலுவலர்கள் ஷானொனின் அனுபவத்தை வெளிநாடுகளில் சுறுசுறுப்பாகப் பரப்பினர். அவர்கள் பிரதானமாக ஐ. நா. கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனத்தின் வாயிலாக வே இதைச் செய்தனர். ஏற்றுமதிச் செய்முறை நிலையங்களை அமைப்பதற்காக உதவி பெறுவதில் காட்டப்பட்ட சிரத்தை எவ்வளவோ அதிகமாகத் தோன்றியதால், ஐ. நா. கை. அ. ஸ்தாபனம் தனது வருடாந்த அறிக்கையில், நிபுணத்துவ உதவிக்கான கோரிக்கை எப்பொழுதும் வழங்கலை மிஞ்சியேயிருந்ததெனக் குறிப்பிட்டது. ஆசியாவிலே தைவானின் காவோஸியூங் ஏ. செ. நிலையம் ஒரு முன்மாதிரியாகப் பயன்பட்டது. அதன் உதாரணம் அப்படியே பின்பற்றப்பட்டதுடன் மட்டுமன்றி இக்கருதுகோளில் அக்கறை காட்டிய மற்றும் நாடுகளுக்கும் அது பொருளுதவி செய்தது. உதாரணமாக, தென் கொரியா 1969ஆம் ஆண்டிலும் தென் வியட்னாம் 1972ஆம் ஆண்டிலும் அதன் உதவியை நாடின.

ஐ. நா. கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனமே, ஏ. செ. வலயம் பற்றிய கருத்தை வளர்த்து வரும் மத்திய நிலையமாகப் பணியாற்றியுள்ளது பூர்வாங்க பரிசீலனைகள், சாத்தியப்பாடு பற்றிய பரிசீலனைகள், மற்றும் பல்வேறு சேவைகளின் உருவத்தில் அது அக்கறையுள்ள நாடுகளுக்கு உதவி வழங்குகின்றது. ஏ. செ. வலயங்களை ஓர் உலகளாவிய முறையாகச் சர்வதேசியமயமாக்க அதுவே வேலை செய்து வந்துள்ளதாகத் தோன்றுகிறது. 1974ஆம் ஆண்டில் கொலம்பியாவிலே ஐ. நா. கை. அ. ஸ்தாபனத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டமொன்றில், பல்வேறு நாடுகளில் தொழிற்பட்டுவரும் சுதந்திர வர்த்தக வலயங்களைக் கொண்ட ஒரு சம்மேளனம் அமைக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. 1975ஆம் ஆண்டில் நிபுணர்களின் காரியக் குழுவொன்று உலக கைத்தொழில் சுதந்திர வலய சங்கத்தை ஸ்தாபிப்பதென்ற யோசனையை வியன்னாவிலுள்ள அதன் தலைமையகத்தில் உருவாக்கியது. ஏ. செ. வலயங்களை விருத்தி செய்வதற்குரிய நிலைமைகளை எளிதாக்குவதற்காக இந்த உ. கை. சு. வ. சங்கம் சர்வதேச ரீதியில் செயற்படுகின்றது. ஏ. செ. வலயம் பற்றிய கருத்தை வளர்த்துள்ள இன்னொரு முக்கியமான சர்வதேச ஸ்தாபனம் டோக்கியோவில் அமைந்துள்ள ஆசிய உற்பத்தித் திறன் ஸ்தாபனமாகும். ஆ. வி. ஸ்தாபனம் ஜப்பானிய உற்பத்தித் திறன் நிலையத்தின் சர்வதேசியமயமாக்கப்பட்ட ஓர் உருவமாகுமென விவரிக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய உற்பத்தித் திறன் நிலையமே ஜப்பானிய கூட்டுத்தாபனத்தின் வியாபார சீராக்கல் இயக்கங்களுக்கு 1950களிலும் 60களிலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருதவி செய்தது. பெரும் ஜப்பானிய வர்த்தக ஸ்தாபனங்கள் உலகெங்கும் வெற்றியீட்டுவதற்கு இந்த இயக்கங்களே உதவின.

## இலங்கையிலுள்ள ஏற்றுமதிச் செய்முறை வலயத்தின் வளர்ச்சி

1977ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அரசாங்கம் மாறியதற்குப் பின்பு, பொருளாதாரக் கொள்கைகளில் ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. அதுவரை இருந்து வந்த கட்டுப்பாடுகளும் வரையறுப்பு நிபந்தனைகளும் ஒழிக்கப்பட்டு, குறிப்பாக வர்த்தகம், கொடுப்பனவுகள் சம்பந்தமாகத் தாராளக் கொள்கைகள் புகுத்தப்பட்டன. புதிய ஏற்றுமதி அபிவிருத்திக்கான உபாயம் இரு அடிப்படை மூலகங்களைக் கொண்டுள்ளது:

(அ) ஏற்றுமதி நோக்குள்ள தனியார் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது;

(ஆ) இறக்குமதிகளை மாற்றீடு செய்வதைவிட பாரம்பரியமற்ற ஏற்றுமதிகளை அதிக கவர்ச்சியுள்ளதாக்குதல்.

இந்நோக்கத்துக்காகத் தேவையான ஸ்தாபனங்களை அமைக்க வேண்டியிருந்தது; தேவையான கொள்கைகளை உருவாக்கவேண்டியிருந்தது. ஏற்றுமதி நோக்குள்ள வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல்—பெருக்குதல் சம்பந்தமான பணி இரு ஸ்தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது: பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷனின் கீழ் ஏற்றுமதிச் செய்முறை வலயங்கள் தொழிற்பட வேண்டும்; பா. கொ. பொ. கமிஷனைச் சாராத சகல வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் தேவையான சேவைகளை வழங்கும் வேலைக் கடமை வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டியிடம் ஒப்படைக்கப்பட்டது. பா. கொ. பொ. கமிஷன் ஒரு புதிய ஸ்தாபனம்; பா. கொ. பொ. கமிஷன் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. கட்டுநாயக்காவிலுள்ள கொழும்பு சர்வதேச விமான நிலையத்துக்குப் பக்கத்தில் ஒரு வலயத்தை ஸ்தாபிக்க அது உடனடியாக நடவடிக்கை எடுத்தது.

இந்தக் கருதுகோள் இலங்கைக்குப் புதியதல்ல. ஏற்றுமதிச் செய்முறை வலயமொன்றை அமைக்கும் நோக்கம் பற்றி 1974—75ஆம் ஆண்டளவில் கடந்த அரசாங்கத்தினால் தீவிரமாக ஆலோசிக்கப்பட்டது. ஐ. நா. கைத்தொழில் அபிவிருத்தி ஸ்தாபனம் 1974ஆம் ஆண்டுக்குரிய தனது வருடாந்த அறிக்கையில், ஏற்றுமதிச் செய்முறை வலயமொன்றை அமைக்க உதவி கோரி இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளதெனக் குறிப்பிட்டுள்ளது. அப்போதிருந்த அரசாங்கத்தின் மந்திரி சபை உப கமிட்டியொன்று இந்த யோசனை பற்றி ஆலோசித்தது. ஆனால் கூட்டரசாங்கத்தைச் சேர்ந்த சில மந்திரிகள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்பிரச்சினை சம்பந்தமாக ஒரு முடிவுக்கு வருவதில் அந்த அரசாங்கத்தில் ஏகோபித்த கருத்து நிலவவில்லை.

எனினும், அப்போதிருந்த அரசாங்கம் தனியார் வெளிநாட்டு முதலீடுகளை எதிர்க்கவில்லை. வெளிநாட்டு மூலதனத்துக்கு அழைப்பு விடுக்கும் வெள்ளையறிக்கையொன்றைக் கூட அது வெளியிட்டது. "நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் தனியார் வெளிநாட்டு முதலீடுகள் ஆற்ற வேண்டிய ஒரு முக்கியமான பங்குண்டு" என்பதை உணருவதாகவும் அவ்வறிக்கையில் சொல்லப்பட்டது. இலாபங்களைத் தாய்நாட்டுக்கு அனுப்புதல், மூலதனத்தைத் திருப்பியெடுத்துச் செல்லல், ரோயல்டி கொடுப்பனவுகள், தொழில் நுட்பக் கட்டணங்கள் போன்ற அநேக வசதிகளையும் அது அளிக்க முன்வந்தது. 1972ஆம் ஆண்டுக்கும் 1976ஆம் ஆண்டுக்குமிடையே கைத்தொழில்களை அமைப்பதற்காக (தைத்த ஆடைகள் சம்பந்தமாக 13 கைத்தொழில்கள்) வெளிநாட்டு மூலதனம் பங்குகொள்ளும் ஏறக்குறைய 30 புதிய முதலீட்டுத் திட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. கொள்கையைப் பொறுத்த ஒரு விஷயம் என்ற முறையில், இப்புதிய முயற்சிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் ஏற்றுமதிச் சந்தைக்கும் ஆகக் கூடிய வெளிநாட்டு நாணயத்தைச் சம்பாதிப்பதற்கும் அனுப்பப்பட வேண்டும் என்று விதிக்கப்பட்டது. அச்சமயத்தில் அரசாங்கத்தினால் அமுல் செய்யப்பட்டு வந்த 'சோஷலிஸ்ட்' சட்டங்களும் 'தேசியமயமாக்கும்' சட்டங்களும் பொதுவாக வெளிநாட்டு முதலீட்டாளர்களை வெளியே நிறுத்திவிட்டன.

ஆனால், 1977ஆம் ஆண்டு ஜூலை மாதத்துக்குப் பின் இத்திசையில் செய்யப்பட்ட கொள்கை மாற்றங்கள் மிகவும் ஆக்கபூர்வமானவையாக இருந்தன. தனியார் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் வெளிநாட்டு வர்த்தகத்துக்கும் சாத்தியமான பரிபூரண ஊக்கம் அளிக்கப்படுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இறக்குமதிகளுக்கு இருந்துவந்த கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டு, தாராளமான இறக்குமதிகள் அனுமதிக்கப்படுவதால், வர்த்தகம் விரிவடைவதற்கு உதவும் என்பது மட்டுமன்றி, அதன்பயனாக மூலப் பொருள்களும் இயந்திர சாதனங்களும் உதிரிப் பாகங்களும் தங்கு தடையின்றி வந்து சேருவதால், கைத்தொழிலதிபர்கள் தங்களுடைய உற்பத்தித் திறனை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு வசதி ஏற்படுவதுடன் மேலதிக உற்பத்தித் திறனைச் சிருஷ்டிக்கவும் ஏதுவாயிருக்குமென்று புதிய கொள்கை வற்புறுத்தியது. அத்துடன், வெளிநாட்டுத் தனியார் முதலீடுகள், மூலதனம், தொழில் நுட்பவியல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தை வசதி சம்பந்தமான தேவைகளை நிறைவாக்குவதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி முயற்சிகளில் ஒரு முக்கியமான பங்கெடுக்குமென்றும் எதிர்பார்க்கப்பட்டது. இந்த நோக்கத்துக்கான பிரதான காரகராகச் செயலாற்ற அரசாங்கத்தின் "முன்னணித் திட்டங்களில்" ஒன்றுக, பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷன் அமைக்கப்பட்டது.

1978ஆம் வருட 4ஆம் இலகக பா. கொ. பொ. பொ. க. சட்டம் இந்த ஸ்தாபனத்தின் குறிக்கோளகளைக் கீழ்க்கண்டவாறு விளக்கியது:

(அ) இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை உண்டாக்கி, வளர்த்தல;

(ஆ) இலங்கையிலுள்ள பொருளாதாரத்தின் அடித்தளத்தை விரிவாக்கிப் பலப்படுத்தல்;

(இ) இலங்கைக்குள்ளே வெளி நாட்டு முதலீடுகளுக்கு ஊக்கமளித்து, பெருக்குதல;

(ஈ) வெளிநாட்டு நாணயச் சம்பாத்திய வழிகளைப் பன்முகப்படுத்தலும் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களை ஆதரித்தலும;

(உ) இலங்கைக்குள்ளே கைத்தொழில், வர்த்தக முயற்சிகள் ஸ்தா பிக்கப்படுவதற்கும் அபிவிருத்தி செய்யப்படுவதற் கு ம் ஊக்கமூட்டி வளர்த்தல்;

(ஊ) (ஏற்றுமதிச் செய்முறை வலயத்தினுடையதென) 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ;அதிகாரப் பரப்பின் விவகாரங்களை நிர்வகித்தல்,

மேற்குறித்த குறிக்கோள்கள் கட்டுநாயக்காவிலுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் ;குறிக்கோள்களைவிட விரிவாயிரு ப் பதைத் தவிர்க்க முடியாது. ஏனென்றல், மு. ஊ. வலயத்தின் குறிக்கோள்கள் (1) ஏற்றுமதி நோக்குள்ள வெளிநாட்டு முதலீடுகளைப் பெருக்குதல். (2) வேலை வாய்ப்புகளை சிருஷ்டித்தலும் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களை அதிகரித்தலும் என மிகக் குறிப்பாக வரைவிலக்கணம் செய்யப்பட்டன.

இலங்கை ஏற்றுமதிச் செய்முறை வலய அரங்குக்குள் பிந்திப் பிரவேசித்ததன் விளைவாக இரு பெரும் தடைகளை எதிர்நோக்கியது. தென் கொரியா, தைவானிலிருந்து மலேசியா, இந்தியாவரை ஸ்தாபிதமாகியுள்ள வலயங்களிலிருந்து பலத்த போட்டி தோன்றியது. அதே சமயத்தில், 1970 களின் முடிவிலும் 80களின் முற்பகுதியிலும் உலகெங்கும் ஏற்பட்ட வர்த்தக ஒடுக்க நிலைமைகளால் பெரிய பல்தேசிய கம்பெனிகள் புதிய முதலீட்டு முயற்சிகளை மேற்கொள்வது தடைப்பட்டது. அதன் விளைவாக, முதலீடுசெய்வதற்கான ஊக்கிகள் மிகுந்த கவர்ச்சியூட்டுவனவாக இருக்க வேண்டியிருந்தது. அத்துடன், கீழ்க்கண்டவை போன்ற அடிப்படைத் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தன.

(அ) விருந்தோம்பும் நாடு புவியியல் ரீதியாக நல்ல இடத்தில் அமைந்திருத்தல்;

(ஆ) போதிய பொருளாதார சுதந்திரம்;

(இ) அரசியல், சமூக ஸ்திரம்;

(ஈ) தொழிலாளர் உயர் தரத்தினராகவும் ஆனல் குறைந்த சம்பளம் பெறுவோராகவும் இருக்க வேண்டும்;

(உ) வலயத்தை முகாமை செய்வதற்குத் திறமைவாய்ந்தப்பலம் பொருந்திய நிர்வாக ஸ்தாபனங்கள்;

(ஊ) நிதி உறுதிப்பாடும் ஸ்திரமான உள்நாட்டுச் சந்தையும்;

(எ) போதிய அரசிறை—நாணய ஊக்கிகள்;

(ஏ) நல்ல நெடுஞ்சாலைகள், இருப்புப் பாதைகள், கடல், விமான நிலைய வசதிகள் உட்படச் சிறந்த உள்ளமைப்பு.

(ஐ) குறைந்த செலவில் தடைப்படாத மின்சார, நீர், மூலப் பொருள் விநியோகம்.

1978ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் ஆரம்ப மாதங்களிலும் இவ் வசதிகளில் பெரும்பாலானவை இருக்கவில்லை. ஏனென்றல், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் வசதிகளை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அதுவரை இருந்து வந்த இறக்குமதிக் கட்டுப்பாடுகளும் நாணயப் பரிவர்த்தனைக் கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. வர்த்தகம் கொடுப்பனவுகள் சம்பந்தமான கட்டுப்பாடுகள் அகற்றப்பட்டன. 1978ஆம் வருட 4ஆம் இலக்க பா. கொ. பொ. க. சட்டம் இயற்றப்பட்டதுடன், இலங்கையில் முதல் முறையாக வெளிநாட்டு முதலீடுகளின் பாதுகாப்புக்குச் சட்டபூர்வமான உறுதியளிக்கப்பட்டது. பா. கொ. பொ. கமிஷனுக்கும் வலயத்திலுள்ள எந்த முயற்சிக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட எந்த ஒப்பந்தத்தின் வியாக்கியானம் சம்பந்தமாகவும் ஏதாவது தகராறு தோன்றினல், அது, ஒரு சம்பிரதாயத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள முதலீட்டுத் தகராறுகளைத் தீர்ப்பதற்கான சர்வதேச மையத்துக்கு அனுப்பப்பட வேண்டுமென்று பா. கொ. பொ. க. சட்டத்தின் 26ஆம் பிரிவு விதிக்கின்றது. இப் பிரிவு இருந்துவந்த போதிலும், பா. கொ. பொ. கமிஷனுக்கும் எந்த முயற்சிக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் சரத்துகளை வியாக்கியானம் செய்வது சம்பந்தமாகத் தோன்றும் சகல தகராறுகளும் சர்வதேச வர்த்தக சபையின் இணக்கம்—மத்தியஸ்தம் பற்றிய விதிகளின் கீழ் முடிவாகத் தீர்க்கப்படவேண்டியுள்ளன.

முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தங்களும் தனித்தனி நாடுகளுடன் கைச்சாத்திடப்பட்டன. முதலில் அமெரிக்காவுடனும் மேற்கு ஜெர்மனியோடும் இந்த ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன. இலங்கையுடன் பொருளாதார உறவுகளை வைத்திருக்கும் மேலும் பல நாடுகளுக்கு இரட்டை வரி நிவாரண ஒப்பந்தங்களும் விஸ்தரிக்கப்பட்டன.

முதலீட்டாளர்களிடையே அதிக நம்பிக்கையை உண்டாக்குவதற்காக, பா. கொ. பொ. கமிஷன் தயாரித்த உத்தியோகபூர்வமான ஒப்பந்தத்தின் 10ஆம் பிரிவு கூறுகிறபடி, தேசியப் பாதுகாப்பு அல்லது பந்தோபஸ்து நலனை முன்னிட்டு அல்லாமல் மற்றப்படி 1971ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க வர்த்தக முயற்சி (சுவீகரிப்புச்) சட்டமும் 1974ஆம் வருட 19ஆம் இலக்க கம்பெனியின் (விசேட ஏற்பாடு) சட்டமும் எந்தப் பிரதேச





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிக்கும் அல்லது லைசென்ஸ் பெற்ற முயற்சிக்கும் பொருந்தாவென அறிவிக்கப்பட்டது.

தொழிலாளர் உயர்தரத்தினராகவும் குறைந்த சம்பளம் பெறுவோராகவும் இருத்தல், காவோவியூங் முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தின் பெரும் 'கவர்ச்சி அம்சங்களில்' ஒன்றாக இருந்து வந்துள்ளது. மக்களிடையே எழுத்தறிவு உயர்ந்திருக்கும் நிலை; வினைத்திறன்களைப் பெற அவர்களுக்குள்ள இயல்பான ஆற்றல்; வேற்றிடங்களுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் குறைவாயுள்ள சம்பள விகிதம்—இவ்வகையான நிலைமைகளைத்தான் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தேடிக்கொண்டிருக்கிறார்கள். பா. கொ. பொ. கமிஷனைப் பற்றி வெளிவந்துள்ள பிரசுரங்களில் மிகுதியானவை இந்த அம்சத்தை எடுத்துக் காட்டியுள்ளன. உதாரணமாக, 1981 ஜூன் 31ஆம் திகதிய 'எகனுமிஸ்ட்' சஞ்சிகை இலங்கை பற்றிய ஒரு விசேஷ பரிசீலனையில் விமர்சித்துள்ளதாவது: "ஓரளவு தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கான சம்பளங்கள் இன்னும் மாதமொன்றுக்கு 50 அமெரிக்க டாலருக்குக் குறைவாயிருப்பதால், முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள தொழிற்சாலைகளில் சில அலகுச் சம்பளச் செலவுகளை ஹொங்கொங்குடன் ஒப்பிட்டுப் பார்த்து, இதில் இலங்கை வெற்றிபெற்றுவிட்டதெனத் தீர்மானித்துக்கொண்டிருக்கிறார்கள்."

ஆசியப் பிரதேசத்தில் சம்பள விகிதங்கள் இன்னும் மிகக் குறைவாயிருப்பதாகச் சொல்லப்பட்டபோதிலும், பா. கொ. பொ. கமிஷன் அதிகாரிகள் குறைந்தபட்ச சம்பள விகிதமொன்றை அமைத்துள்ளனர். ஓரளவு தேர்ச்சிபெற்ற தொழிலாளியின் சம்பளம் நாளொன்றுக்கு 1.50 அமெரிக்க டாலருக்குக் கீழேயும், தேர்ச்சி பெறாத தொழிலாளியின் சம்பளம் நாளொன்றுக்குச் சுமார் 1 அமெரிக்க டாலராகவும் இருப்பதாகக் கூறப்பட்டது. கீழ்க்கண்ட அட்டவணை 11 ஆசிய நாடுகளில் 1980 ஆம் ஆண்டு முற்பகுதியிலிருந்த மாதச் சம்பளங்களின் ஒப்பியல் நிலையைச் சற்றே எடுத்துக் காட்டுகின்றது:

ஆசியாவில் குறைந்த செலவில் உற்பத்தி

(தற்போதைய சராசரி மாதாந்த உற்பத்திச் சம்பளம்)

| | அமெரிக்க டாலர் |
|---|---|
| இலங்கை | 35 |
| இந்தோனீஷியா | 40 |
| இந்தியா | 55 |
| சீனு | 57 |
| தாய்லாந்து | 6[illegible] |
| மலேசியா | 100 |
| பிலிப்பைன்ஸ் | 100 |
| தைவான் | 100 |
| தென் கொரியா | 130 |
| சிங்கப்பூர் | 16[illegible] |
| ஹொங் கொங் | 240 |

வெளிநாட்டாருக்குச் சொந்தமான தொழிற்சாலைகளில்—225 அமெரிக்க டாலர்

ஆதாரம்: "மேற்கத்திய இயந்திரங்களைப் பெற ஆசியாவில் புதிதாக முயல்வோர்" பற்றி "பிஸினஸ் வீக்" சஞ்சிகையில் வெளியான விசேட அறிக்கை: மார்ச் 17, 1980.

வலயத்தை முகாமை செய்வதற்குத் திறமைவாய்ந்த—பலம் பொருந்திய நிர்வாக ஸ்தாபனமொன்றை அமைப்பது இன்னொரு தேவையாக இருந்தது.

1978ஆம் வருட 4ஆம் இலக்க பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷன் சட்டம் பா. கொ. பொ. கமிஷன் சிருஷ்டிக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்ததுடன், இலங்கையில் ஏற்றுமதி நோக்குள்ள வெளிநாட்டு முதலீடுகள் செய்யப்படுவதற்கு ஊக்கமூட்டுவதற்காகத் தேவையான ஊக்கிகளைப் புகுத்த கமிஷனுக்கு விரிவான அதிகாரங்களையும் அளித்தது. கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயமும் முழு முதலீட்டு ஊக்குவிப்பு முயற்சியும் தனியொரு முகவரின்—பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷன் — பொறுப்பில் விடப்பட்டன. கமிஷனது அதிகாரத்தின் கீழ் எல்லை குறிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட பகுதியை அபிவிருத்தி செய்வதற்கும் பா. கொ. பொ. க. இலங்கை அரசியலமைப்பின் 44(2)ஆம் பிரிவுடன் சேர்ந்து 1978அம் ஆண்டு 4ஆம் இலக்க பா. கொ. பொ. க. சட்டத்தின் 24ஆம் பிரிவின் கீழ் இயற்றப்பட்ட ஒழுங்கு விதிகள் வலயப் பிரதேசத்தை "வரிகளிலிருந்து புகலிடம்" அளிக்கும் பிரதேசமாக்கிவிட்டன. பா. கொ. பொ. க முயற்சிகளுக்கு முன்னெப்போதுமில்லாதவாறு வழங்கப்பட்ட இந்த வரிச் சலுகைகள் உலகத்தின் வேறெந்தப் பகுதியிலுமுள்ள வலயங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை ஒத்தனவாயுள்ளன. வலய நாடுகளிடையே இலங்கை காலந்தாழ்த்தியே வலயத்தை அமைத்ததனால் இவ்வரிச்சலுகைகளை வழங்குவது அத்தியாவசியம் எனக் கருதப்பட்டது.

நிதி உறுதிப்பாடும் வசதிகளும் இன்னோர் அத்தியாவசியத் தேவையாயிருந்தது. வெளிக்கரை வங்கித் தொழிலை நோக்கி வங்கித்தொழில் துறையின் தொழிற்பாடுகளை முடுக்கிவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதே வேளையில் கொழும்பில் தொழிற்படுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு பெரிய சர்வதேச வங்கிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. கொழும்பில் ஒரு வெளிக்கரை வங்கித் தொழில் நிலையத்தை அபிவிருத்தி செய்து, இலங்கையை ஒரு சர்வதேச நிதி மையமாக்கும் இறுதிக் குறிக்கோளைச் சாதிப்பது சம்பந்தமான ஒரு நடவடிக்கையாக 1979ஆம் ஆண்டு மே மாதத்தில் ஒரு வெளிநாட்டு நாணயவங்கித் தொழில் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

பா. கொ. பொ. க. திட்டங்களுக்கு ரூபா நிதியளிக்கப்படுவதற்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை. ஏனென்றால் இது இலங்கைக்குள் வெளிநாட்டு மூலதனம் பாய்வதற்கு ஊக்கமூட்டும் இலட்சியத்துக்கு மாறாக இருக்கும். ஆதலால், வெளிநாட்டு மூலதனத் தேவைகளை நிறைவாக்குவதற்காக, இலங்கையில் வெளிக்கரை வங்கித் தொழில் நிலையங்கள் அமைக்கப்பட்டன. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் நிலையங்களை நடத்துவதற்கு இலங்கையிலுள்ள சகல வர்த்தக வங்கிகளுக்கும் தகுதியுண்டு. குறிக்கப்பட்ட வெளிநாட்டு நாணயங்களில் இலங்கையில் வதியாதோருடன் வெளிக்கரை வங்கித் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் வர்த்தக வங்கிகள் அனுமதிக்கப்படுகின்றன.



Appropriate Technology Services
121, POINT P. CFO ROAD
NALLUR, JAFFNA
No.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டுநாயக்கா முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் முதலீடுகள்

1981ஆம் ஆண்டு முடிவில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக் குழு (கமிஷன்) 154 திட்டங்களை அங்கீகரித்துவிட்டது. இத்திட்டங்கள் 1978ஆம் ஆண்டிலிருந்து 1981 ஆம் ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டவையாகும். மிகப் பெருந்தொகையான அங்கீகாரங்கள் 1978ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டனவென்று 1982 மே மாத ஆரம்பத்தில் கிடைத்த செய்திகளிலிருந்து தெரிய வருகிறது. 1978ஆம் ஆண்டில் தான் கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயமும் அதன் தாய் ஸ்தாபனமான பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷனும் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டன. பா. கொ. பொ. கமிஷன் ஆரம்பிக்கப்பட்டு முதல் ஒன்பது மாதங்களில் 52 திட்டங்களை அங்கீகரித்தது. இத்திட்டங்கள் 1,625 மில்லியன் ரூபா முதலீடு செய்யும் நிலைச் சக்தி கொண்டவையென மதிப்பிடப்பட்டது.

1979ஆம் ஆண்டு முடிவுக்குள் அங்கீகாரங்களின் தொகை 89 உக்கு அதிகரித்துவிட்டது; அத்துடன், முதலீட்டின் மதிப்பிடப்பட்ட மட்டமும் 2,666 மில்லியன் ரூபாவுக்கு உயர்ந்துவிட்டது. இதில் 2,000 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை வெளிநாட்டு முதலீடாக இருந்தது. இந்த 89 அங்கீகாரங்களில், 41 திட்டங்கள சம்பந்தமாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன; 1979ஆம ஆண்டு முடிவுக்குள், 5,833 தொழிலாளரை வேலைக்கமர்த்தியிருந்த 13 தொழிற்சாலைகள் உறபத்தி செய்யத் தொடங்கிவிட்டன. 1980 ஆம் ஆண்டில், 1,873 மில்லியன் ரூபா மொத்த முதலீடு செய்யுமென மதிப்பிடப்பட்ட மேலும் 42 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன. ஆனால் 1981ஆம் ஆண்டில் அங்கீகாரங்கள் 17 உக்கு வீழ்ச்சியடைந்துவிட்டன.

மேலும், 1981ஆம் வருடம் டிசம்பர் மாதம் வரை உள்ளமைப்பு வேலைகளில் பெருமளவு நிறைவேற்றப்பட்டுவிட்டன. சாலைகள், நீர்ச் சேவைகள், மின்சக்தி, தந்திப் போக்குவரத்து, வாகனப்போக்குவரத்து வசதிகள் சம்பந்தமான வேலைகள் பெருமளவு முன்னேறிவிட்டன. தொழிற்சாலைகளுக்கு நிரந்தர நீர் விநியோக, மின்சார, தொலைபன்னி, தொலையச்சு (டெலக்ஸ்) வசதிகள் வழங்கப்பட்டுவிட்டன; இதே வேளையில் க. மு. ஊ. வலயத்தின் பிரதான வாசலில் சுங்க வசதிகளையும் சுங்கப் பண்டசாலை வசதிகளையும் ஏற்படுத்துவதற்கான கட்டட வேலைகள் நடைபெற்று வந்தன. ஒரு நிர்வாகக் கட்டடத்துக்கான பெரும் பகுதி கூட பூர்த்தியுறும் தறுவாயிலிருந்தது; 1981ஆம் ஆண்டு முடிவில் க.மு.ஊ. வலயத்தில் மொத்தம் 146 ஏக்கர் பரப்பு முதலீட்டாளர்களுக்குக் குத்தகைக்கு விடப்பட்டுவிட்டன; 42 தொழிற்சாலைகளில் உற்பத்தி ஏற்கெனவே தொடங்கிவிட்டது; மற்றும் 15 தொழிற்சாலைகளில் கட்டட வேலைகள் பல்வேறு கட்டங்களில் நடைபெற்றுக்கொண்டிருந்தன. 1982ஆம் ஆண்டு மே மாத ஆரம்பத்தில் பா. கொ. பொ. கமிஷன் பத்திரிகைகளில் வெளியிட்ட விளம்பரமொன்று, 47 தொழிற்சாலைகள் தொழிற்பட்டு வருவதாகவும் மற்றும் 15 தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருவதாகவும் வலயத்தில் 21,500 பேருக்கு மேற்பட்டோர் நேரடியாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதாகவும் கூறியது.

ஆரம்ப கட்டங்களில் பெரும்பான்மையான அங்கீகாரங்கள் கைத்தொழில் இனத்தில்—"துணி வகைகள், உடு துணிகள், தோல் பொருள்கள்"—வழங்கப்பட்டன. முதல் மூன்று ஆண்டுகளில் மொத்தம் 131 திட்டங்களில் 59 திட்டங்கள் வரை இவ்வகையான கைத்தொழில்களை அமைப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டன. க. மு. ஊ. வலயத்தின் ஆரம்ப கட்டங்களில் நெசவுத் துணி வகைகளிலும் தைத்த உடைகளிலும் இவ்விதம் வெள்ளம் போல் முதலீடு செய்யப்பட்டதற்குக் காரணம் உண்டு. கவர்ச்சியான அமெரிக்கச் சந்தையில் ஹொங் கொங்கையும் மற்றும் கிழக்காசிய நாடுகளையும் சேர்ந்த உற்பத்தியாளர்கள் மீது 'கோட்டா'க்கள் (அனுமதிப் பங்குகள்) இறுக்கப்பட்டு வந்தன; ஆனால் இலங்கை அது வரை வர்த்தகத் தடைகளை எதிர்நோக்கவில்லை. எனவே, இந்நிலைமையைப் பயன்படுத்திக்கொள்ள, பிரஸ்தாப உற்பத்தியாளர்கள் முடிவு செய்ததே அத்தகைய முதலீடுகளுக்குக் காரணம். எனினும், இலங்கையிலிருந்து தைத்த ஆடை ஏற்றுமதிகள் அமெரிக்கச் சந்தைக்குள் திடீரெனப் பாய்வதைக் கண்ட அமெரிக்க அதிகாரிகள் இலங்கையின் ஏற்றுமதிகள் மீது ஏதேனுமொரு வகைக் கட்டுப்பாடு விதிக்கவேண்டியதவசியமென்பதில் கவனஞ் செலுத்தினர். முன்னரே முதலீடு செய்து தொழிற்சாலைகளை அமைத்து, ஆறுதலான ஏற்றுமதிச் சந்தையை அனுபவித்து வந்த உள்நாட்டு உடை உற்பத்தியாளர்கள் இப்பொழுது பாதிக்கப்பட்டனர். ஆதலின், இதையொட்டி உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அவர்கள் அரசாங்க அதிகாரிகளை நெருக்கினர். மேலும் க. மு. ஊ. வலயம் தைத்த ஆடைகளைச் சார்ந்திருக்கும் நிலையைக் குறைத்துக் கொள்ள வேண்டிய அவசியமும் தெளிவாகி வந்தது. எனவே, பா. கொ. பொ. கமிஷன் இத்தகைய திட்டங்களுக்கு மேலும் அங்கீகாரமளிக்கும் நடவடிக்கைக்கு ஊக்கமளிக்காதிருக்கத் தொடங்கியது. எனினும், இத்துறையில் ஏற்கெனவே அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் சம்பந்தமான ஒப்பந்தங்கள் தொடர்ந்து கைச்சாத்திடப்பட்டு வந்தன. 1981ஆம் ஆண்டு முடிவுவரை மொத்தம் 75 திட்டங்கள் சம்பந்தமாக உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவற்றில் 39 ஒப்பந்தங்கள் இவ்வினத்தைச் சேர்ந்தவை.

வார்த்த உலோகப் பொருள்கள், வாகனப் போக்குவரத்துச் சாதனங்கள் ஆகிய இனத்தில் அங்கீகாரங்கள் இரண்டாவது இடத்தை வகித்தன முதல் நான்கு வருடங்களில் 25 அங்கீ





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரங்கள் வழங்கப்பட்டன. எனினும், இவற்றினிடையே 13 அங்கீகாரங்கள் சம்பந்தமாக மட்டுமே இக்காலத்தில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன; மற்றும் பிரதான இனங்களில் அடிப்படை உலோகப் பொருள்கள் சம்பந்தமாக 22 அங்கீகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன; இரசாயனப் பொருள்கள், பெற்றோலியம், நிலக்கரி, றப்பர், பிளாஸ்திக் பொருள்கள் சம்பந்தமாக 20 அங்கீகாரங்கள் வழங்கப்பட்டன. இவ்விரு இனங்களில் ஒவ்வொன்றின் சம்பந்தமாகவும் 1981ஆம் ஆண்டு முடிவு வரை 8 ஒப்பந்தங்கள் மட்டுமே கையொப்பமிடப்பட்டுள்ளன. நான்கு வருட காலத்தில் இவ்வினங்கள் சம்பந்தமாக வழங்கப்பட்ட அங்கீகாரங்களின் தொகை 131; இவை தொடர்பாகக் கையெழுத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் தொகை 68.

இத்திட்டங்களின் செய்யப்பட்டுள்ள முதலீட்டின் மட்டமும் தன்மையும் அர்த்தபுஷ்டியுள்ளனவாகும். நான்காண்டு காலத்தில் திட்டங்களின் சகல இனங்களிலும் செய்யப்பட்டுள்ளதாக மதிப்பிடப்படும் மொத்த முதலீடுகளின் தொகை 5,787 மில்லியன் ரூபா. 1978ஆம் ஆண்டில் 1,625 மில்லியன் ரூபாவும், 1979ஆம் ஆண்டில் 1,071 மில்லியன் ரூபாவும், 1980ஆம் ஆண்டில் 1,873 மில்லியன் ரூபாவும், 1981ஆம் ஆண்டில் 2,223 மில்லியன் ரூபாவும் முதலீடு செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டது. சம்பந்தப்பட்ட வருடங்களில் இவற்றில் அடங்கியுள்ள வெளிநாட்டு முதலீடுகளின் தொகை—1978ஆம் ஆண்டில் 1,202 மில்லியன் ரூபா; 1979ஆம் ஆண்டில் 771 மில்லியன் ரூபா; 1980ஆம் ஆண்டில் 1,315 மில்லியன் ரூபா; 1981ஆம் ஆண்டில் 896 மில்லியன் ரூபா. நான்கு வருட காலத்திலும் வெளிநாட்டு முதலீடுகளின் விகிதாசாரம் இடையறாது குறைந்து வந்துள்ளது. இது இக்காலத்தில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகளில் சராசரியாக 72 சதவிகிதமாயிருந்தது. சம்பந்தப்பட்ட வருடங்களைப் பொறுத்த வரை, மொத்த முதலீடுகளில் இந்தச் சராசரி 1978ஆம் ஆண்டில் 80.1 சதவிகிதமாகவும், 1979 ஆம் ஆண்டில் 74.1 சதவிகிதமாகவும், 1980ஆம் ஆண்டில் 71.9 சதவிகிதமாகவும், 1981ஆம் ஆண்டில் 60.2 சதவிகிதமாகவும் இருந்தது. இப்போக்கு நெசவுத் துணி வகைகள், உடு துணிகளின் துறையில் மிகத் தெளிவாகக் காணப்படுகிறது. இத்துறையிலே நான்கு வருடங்களில் அஃதாவது 1978ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டுவரையுள்ள காலத்தில், வெளி நாட்டு முதலீட்டின் சதவிகிதம் 1978ஆம் ஆண்டில் 58.2 சதவிகிதமாகவும், 1979ஆம் ஆண்டில் 61.4 சதவிகிதமாகவும், 1980ஆம் ஆண்டில் 28.3 சதவிகிதமாகவும், 1981ஆம் ஆண்டில் 13.5 சதவிகிதமாகவும் இருந்துள்ளது.

## திட்ட அங்கீகாரங்களும் உண்மையான முதலீடுகளும்

உள்நாட்டுக் கைத்தொழில் திட்ட அங்கீகாரங்கள் எடுத்துக்காட்டும் நிலைமை நாட்டில் நடைபெறும் கைத்தொழில் முயற்சிகளைப் பற்றி எப்பொழுதும் ஒரு திரிந்த கருத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கூட்டு முயற் முதலீடுகள் உள்நாட்டு சிகள், வெளிநாட்டு முதலீட்டு முயற்சிகளின் விஷயத்தில் இந்த நிலைமை மாறாமல் ஒரே மாதிரியாகவே இருந்து வந்துள்ளது. 1981ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் முடிவடைந்த நான்கு வருட காலத்திலும் 154 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டன; வெளி நாட்டு முதலீடுகள் ஆகிய இரண்டும் சேர்ந்த மொத்த முதலீடுகள் 5.4 பில்லியன் ரூபாவரை அல்லது 5,377 மில்லியன் ரூபாவரை உயர்ந்திருந்ததாக மதிப்பிடப்பட்டது. எனினும், 1981ஆம் ஆண்டு முடிவில் இருந்தவாறு, 761 மில்லியன் ரூபா முதலீட்டைக் கொண்டவையென மதிப்பிடப்பட்ட 41 திட்டங்கள் மட்டுமே வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன; 195 மில்லியன் ரூபா முதலீட்டைக் கொண்டவையென மதிப்பிடப்பட்ட மற்றும் 4 திட்டங்கள் பரீட்சார்த்த உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. இந்த 45 திட்டங்களில் 40 திட்டங்கள் க.மு.ஊ. வலயத்திற்குள்ளே இருந்தன. 1982ஆம் ஆண்டு மே மாத ஆரம்பத்தில், 47 தொழிற்சாலைகள் தொழிற்பட்டு வருவதாகவும், மற்றும் 15 தொழிற்சாலைகள் ஒன்றில் பரீட்சார்த்த உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றன அல்லது கட்டப்பட்டு வருகின்றனவென்று தெரிவிக்கப்பட்டது.

அதே சமயத்தில் வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டியும் இந்த நான்கு வருட காலத்தில் வெளிநாட்டு மூலதனம் முதலீடு செய்யப்படக் கூடிய அநேக திட்டங்களை அங்கீகரித்தது. 1981ஆம் ஆண்டுடன் முடிவடைந்த நான்கு வருடங்களில் 12.9 பில்லியன் ரூபா அல்லது 12,930 மில்லியன் ரூபா மொத்த முதலீட்டைக் கொண்டவையென மதிப்பிடப்பட்ட 433 திட்டங்களை வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டி அங்கீகரித்துள்ளது. வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டுள்ள தொழிற்சாலைகளின் உண்மையான தொகை பெருமளவு குறைவாக இருந்த போதிலும், இந்த அங்கீகாரங்களின் தொகை மீண்டும் நம்பிக்கையூட்டும் நிலைமையை எடுத்துக் காட்டுவதாயுள்ளமை கவனிக்கத்தக்கதாகும். ஓர் உத்தியோகபூர்வமான பரிசீலனையிலிருந்து, 1981 ஜூன் 30ஆம் திகதிவரை 1,326 மில்லியன் ரூபா மொத்த முதலீட்டைக் கொண்டவையென எதிர்பார்க்கப்பட்ட 134 திட்டங்கள் மட்டுமே தொழிற்பட்டுக் கொண்டிருந்தனவென்று தெரிகிறது. (அஃதாவது, அக்கட்டம்வரை, அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களில் 30 சத விகிதம் மட்டுமே தொழிற்பட்டன; மதிப்பிடப்பட்ட முதலீட்டில் ஏறக்குறைய 10 சத விகிதமே முதலீடு செய்யப்பட்டது.)

பா. கொ. பொ. கமிஷனல் அங்கீகரிக்கப்பட்ட 154 திட்டங்களில், 50 அங்கீகாரங்கள் வரை (கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு) ஒன்றில் நீக்கப்பட்டன. அல்லது வாபஸ் பெறப்பட்டன; மேலும் 7 திட்டங்கள், ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட பின் நீக்கப்பட்டன. இவ்விதமாக, அங்கீகரிக்கப்பட்ட 154 திட்டங்களில், 64 திட்டங்கள் சம்பந்தமாக இறுதியில் கட்டடங் கட்டும் வேலைகள் ஆரம்பமாயின. அவற்றில் 45 திட்டங்கள் சம்பந்தமாகக் கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு, வர்த்தக உற்பத்தி ஆரம்பமாயிற்று. 1981ஆம் ஆண்டு முடிவு வரை 75 திட்டங்கள் சம்பந்த

மாக ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. எனினும், 7 ஒப்பந்தங்கள் பின்னர் நீக்கப்பட்டன. இந்த நாலு வருட காலத்தில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் தொகையில் ; எந்தக் குறிப்பிட்ட போக்கும் காணபபடவில்லை. முதல் வருடத்தின் ஒன்பது மாதங்களில் 29 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன; 1979 ஆம் ஆண்டில் 12 ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டன; 1980 ஆம் ஆண்டில் 25 ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன; 1981 ஆம் ஆண்டில் 9 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன; இத் திட்டங்களிலிருந்து செய்யப்பட்ட மொத்த முதலீடு 1978ஆம் ஆண்டில் 263 மில்லியன் ரூபாவாகவும், 1979 ஆம் ஆண்டில் 619 மில்லியன் ரூபாவாகவும், 1980 ஆம் ஆண்டில் 1,267 மில்லியன் ரூபாவாகவும் 1981 ஆம் ஆண்டில் 418 மில்லியன் ரூபாவாகவும் மாறுபட்டது. இத் தரவுகளிலுள்ள ஒரு மிகக் குறிப்பிடத் தக்க அம்சம் யாதெனில், இநத நாலு வருட காலத்தில் அலகொன்றுக்குச் செய்யப்பட்ட முதலீட்டின் பரிமாணமாகும்; ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட திட்டங்களில் சராசரி முதலீடு 1978 ஆம் ஆண்டில் 9.1 மில்லியன் ரூபாவாகவும், 1979 ஆம் ஆண்டில் 51.8 மில்லியன் ரூபாவாகவும், 1980ஆம் ஆண்டில் 50.7 மில்லியன் ரூபாவாகவும், 1981 ஆம் ஆண்டில் 46.5 மில்லியன் ரூபாவாகவும் இருந்தது. வெளிநாட்டு முதலீட்டைப் பொறுத்தவரை கூட நான்கு வருடங்களில் ஒவ்வொரு வருடமும் விகிதாசாரம் வேறுபட்டுள்ளது. 1978 ஆம் ஆண்டில் அது மொத்த முதலீட்டில் ஏறக்குறைய 46 சதவிகிதமாயிருந்தது; 1979ஆம் ஆண்டில் அது மொத்த முதலீட்டில் 84 சதவிகிதமாயிருந்தது; 1980 ஆம் ஆண்டில் அது மொத்த முதலீட்டில் 74;சதவிகிதமாயிருந்தது; 1981 ஆம் ஆண்டில் அது மொத்த முதலீட்டில் 61 சதவிகிதமாயிருந்தது. அலகொன்றுக்கு முதலீட்டின விகிதாசாரம் 1979 ஆம் ஆண்டில் மிக உயர்வாக இருந்தபோதிலும், முதலீட்டின் அளவு 1980 ஆம் ஆண்டில் ஓர் உச்ச நிலையை அடைந்தது. 1978 ஆம் ஆண்டில் 29 அலகுகள் ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டபோது, அலகொன்றுக்கு மொத்த சராசரி முதலீடு 9 மில்லியன் ரூபாவாக இருந்தது. அதே சமயத்தில் அலகொன்றுக்கு சராசரி வெளிநாட்டு முதலீடு 4 மில்லியன் ரூபாவாக இருந்தது 1979 ஆம் ஆண்டில் 12 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டபோது, அலகொன்றுக்குச் சராசரிமொத்த முதலீடு 51.6 மில்லியன் ரூபாவாகவும், சராசரி வெளிநாட்டு முதலீடு 43.9 மில்லியன் ரூபாவாகவுமிருந்தன. 1980 ஆம் ஆண்டில், கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களின் தொகை 25க்கு அதிகரித்தது. சராசரி மொத்த முதலீடு சற்றே 50.2 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்தது. அதே சமயத்தில் அலகொன்றுக்கு வெளிநாட்டு முதலீடு 37.7 மில்லியன் ரூபாவுக்கு வீழ்ச்சியுற்றது. 1981 ஆம் ஆண்டில், 9 திட்ட ஒப்பந்தங்களில் அலகொன்றுக்குச் சராசரி மொத்த முதலீடு 46.2 மில்லியன் ரூபாவாக இருந்த அதே வேளையில் அலகொன்றுக்கு வெளிநாட்டு முதலீடு 28.4 மில்லியன் ரூபாவாக இருந்தது.

முதலீட்டின் கூட்டு மொத்த மட்டத்துடன் ஒப்பிடுகையில். முதல் இரு வருடங்களில் தைத்த உடைக் கைத்தொழில்கள் அதிக உயர்வான முதலீட்டு மட்டத்தைக் கொண்டிருந்தன. ஆனல் அடுத்த இருவருடங்களில் தைத்த உடைக் கைத்தொழில்களில் வெளிநாட்டு முதலீட்டின் விகிதாசாரம் மொத்த முதலீடுகளின் கூட்டு மொத்தச் சராசரிக்குக் கீழே விழுந்துவிட்டது. இவ்விதமாக 1978 ஆம் ஆண்டுமுதல் 1981 ஆம் ஆண்டு வரையுள்ள நாலு வருடங்களில் தைத்த உடைத் திட்டங்களில் செய்யப்பட்ட முதலீடு கூட்டு மொத்த முதலீட்டில் முறையே 69 சதவிகிதமாகவும் 29 சதவிகிதமாகவும் 39 சதவிகிதமாகவும் 19 சதவிகிதமாகவும் இருந்தது; அதே சமயத்தில் இந்த நாலு வருடங்களில் செய்யப்பட்ட கூட்டு மொத்த வெளிநாட்டு முதலீட்டைப் பொறுத்த வரை, தைத்த உடைத் திட்டங்களில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் விகிதாசாரம் முறையே 60 சதவிகிதமாகவும், 24 சதவிகிதமாகவும், 40 சதவிகிதமாகவும் 25 சதவிகிதமாகவும் இருந்தது. நான்கு வருட காலத்தில் செய்யப்பட்ட மொத்த முதலீடு 2, 567 மில்லியன ரூபா: இதில் வெளிநாட்டு முதலீட்டின் பங்கு 1,840 மில்லியன் ரூபா; இது வெளிநாட்டு முதலீட்டின் 71.7சதவிகித மட்டத்தைக காட்டுகிறது.

அட்டவணை-4 இலிருந்து, அடிப்படை உலோகப் பொருள்கள், வார்த்த உலோகப் பொருள்கள், வாகனப் போக்குவரததுச் சாதனங்கள், இரசாயனப பொருள்கள் சம்பந்தமான திட்டங்களில் செய்யப்பட்ட வெளிநாட்டுமுதலீட்டின் விகிதாசாரம் நெசவுத துணிவகைகள் தைத்த உடைகள் சம்பந்தமான துறையில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீட்டின் விகிதாசாரத்தைவிட உயர்வாயிருந்ததென்பது தெளிவாகிறது.1980ஆம் ஆண்டு வரை தொடர்ந்து அதிகரித்து வந்து, அதன பின் 1981 ஆம் ஆண்டில் வீழ்ச்சியுற்ற முதலீட்டு மட்டத்தின் போக்கும் இந்த அட்டவணையிலிருந்து தெரிகிறது. மொத்த முதலீடுகள் 1980 ஆம் ஆண்டிலிருந்ததை விட 67 சதவிகிதம் குறைவாயிருநதன. 1980ஆம் ஆண்டில் 1,267 மில்லியன் ரூபாவாக இருந்த மொத்த முதலீடுகள் 1981ஆம் ஆண்டில் 418 மில்லியன் ரூபாவுக்குக் குறைந்துவிட்டன. இநத வீழ்ச்சி வெளிநாட்டு முதலீட்டைப் பொறுத்த வரை இன்னும் அதிகமாகக்கூட இருந்தது. வெளிநாட்டு முதலீடு 1981ஆம் ஆண்டில் 73 சதவிகிதம் வீழ்ச்சியுற்றது. 1980ஆம் ஆண்டில் 942 மில்லியன் ரூபாவாக இருந்த வெளிநாட்டு முதலீடு 1981ஆம் ஆண்டில் 254 மில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்தது.

நெசவுத் துணிகள். உடுதுணிகள், தோல் பொருள்கள் துறையிலுள்ள திட்டங்களே மிக அதிகமான தொழிலாளர்களைக் கொண்டனவாக இருந்தன. மொத்தத் தொழிலாளர்களான 19,000 பேரில் ஏறக்குறைய 90 சதவிகிதத்தினர் இத்திட்டங்களில்தான் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். மொத்தம் 461 மில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்ட உலோகமல்லாத கனிப் பொருள் திட்டங்களின் துறையில் இரு திட்டங்களில் மிக அதிகமான மூலதனம் முதலீடு செய்யப்பட்டதாகத் தோன்றியது. அலகொன்றுக்குச் சராசரியாக 213 மில்லியன் ரூபா முத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை—6

அங்கீகரிக்கப்பட்ட பா. கொ. பொ. கமிஷன் முயற்சிகளில் மூலதன உருவாக்கம்

1980ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி வரை

| இனம் | வெளிநாட்டுக் கூறு | மொத்தத்தில் சதவிகிதம் | உள்நாட்டுக் கூறு | மொத்தத்தில் சதவிகிதம் | மொத்தம் | மொத்தத்தில சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| நிலையான மூலதனம் | 1635.7 | 81 6 | 452.8 | 64.8 | 2088.5 | 77.3 |
| மொத்தத்தில் சதவிகிதம் | 78.3 | | 21.7 | | 100.3 | |
| தொழிற்படு மூலதனம் | 367.7 | 18.4 | 245.9 | 35.2 | 613.6 | 22.7 |
| மொத்தத்தில் சதவிகிதம் | 59.9 | | 40.1 | | 100.0 | |
| மொத்தம் | 2003.4 | 100.0 | 698.7 | 100.0 | 2702.1 | 100.0 |
| மொத்தத்தில் சதவிகிதம் | 74.1 | | 25.9 | | 100.0 | |

லீடு செய்யப்பட்டிருந்தது. இரசாயனத்துறை, அடிப்படை உலோகத்துறை, வார்த்த உலோகப் பொருள்கள் துறை ஆகியவற்றிலுள்ள திட்டங்களில் மற்றத் துறைகளிலுள்ள திட்டங்களை விட அதிக மூலதனச் செறிவு காணப்பட்டது.

முதலீட்டின் அமைப்பும் நிதியளித்தலும்

1980ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை முதலீடுகளின் அமைப்பையும் நிதியளித்தலையும் பற்றிய தரவுகள் இங்கு பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கீழே உள்ள அட்டவணை—6இல், எதிர்பார்க்கப்பட்ட மொத்த முதலீடுகளும், நிலையான—தொழிற்படு மூலதனம் தொடர்பாக அவற்றின் உள்நாட்டு—வெளிநாட்டு அமைப்பும் எடுத்துக் காட்டப்படுகின்றன:

மேலுள்ள அட்டவணையுடன் ஒப்பிடுகையில் அட்டவணை—7, 1981 ஆம் ஆண்டு முடிவில் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருந்த பெருந்தொகையான முயற்சிகள் சம்பந்தமாகச் சாத்தியமான மூலதன உருவாக்கம் தொடர்பான நிலையை எடுத்துக் காட்டுகிறது. இப்படி ஈடுபட்டிருந்த 38 கம்பெனிகளில் 28 கம்பெனிகள் இங்கு கவனத்துக்கு எடுக்கப்படுகின்றன. அந்த 28 கம்பெனிகளுக்கிடையே உடைக் கைத்தொழில் வகித்த ஒப்புமுறையான நிலை கூறு வாரியாகவும் சதவிகித வாரியாகவும் எடுத்துக் காட்டப்படுகிறது.

மொத்த வெளிநாட்டு மூலதனத்தில் 80.4 சதவிகிதம் நிலையான மூலதன உருவாக்கத்துக்கு இருக்க வேண்டுமென்றும், இந்த மொத்தத் தொகையில் 68.1 சதவிகிதம் உடைப் பொருள் கைத்தொழிலில் நிலையான மூலதனமாக முதலீடு செய்யப்பட வேண்டுமென்றும் கருதப்பட்டது. உள்நாட்டு மூலதனத்தில் 66.6 சதவிகிதம் நிலையான மூலதனமாக இருக்க வேண்டுமென்றும் 33.4 சதவிகிதம் தொழிற்படு மூலதனமாக இருக்க வேண்டுமென்றும் கருதப்பட்டது. இங்கு கூட நிலையான உள்நாட்டு மூலதனக் கூறு மொத்தத்தொகையில் ஒப்பியல்ரீதியாக அதிகமாயிருந்துள்ளது.

எதிர்பார்க்கப்பட்ட மூலதன முதலீடுகளுக்கு எவ்வாறு நிதியளிக்கப்படும் என்பது அட்டவணை—8இலும் அட்டவணை—9இலும் காட்டப்பட்டுள்ளன. வெளிநாட்டு வட்டாரங்களிலிருந்தும் உள்நாட்டு வட்டாரங்களிலிருந்தும் வரும் உரிமைப் பங்கு முதலுக்கும் கடன் முதலுக்கும் இடையேயுள்ள வித்தியாசங்கள்,

அட்டவணை—7

1981ஆம் ஆண்டு முடிவில் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டிருந்த தொழில் முயற்சிகளின் மூலதன உருவாக்கம்

| இனம் | வெளிநாட்டு மூலதனம | மொத்தத்தில் சதவிகிதம் | உள்நாட்டு மூலதனம் | முழுமொத்தத்தில் சதவிகிதம் | மொத்தம் | மொத்தத்தில் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| நிலையான மூலதனம் | 154.7 | 80.4 | 94.8 | 74.5 | 249.5 | 66.6 |
| சதவிகிதம் | 62.0 | — | 38.0 | — | 100.0 | 26.7 |
| ஆடைப் பொருள்கள் | 131.0 | 68.1 | 83.5 | 64.1 | 21.5 | 58.6 |
| சதவிகிதம் | 61.6 | — | 38.9 | — | 100.0 | — |
| மற்றும் பொருள்கள் | 23.7 | 12.3 | 11.3 | 10.4 | 35.0 | 7.9 |
| சதவிகிதம் | 67.7 | — | 32.3 | — | 100.0 | — |
| தொழிற்படு மூலதனம் | 37.7 | 19.6 | 47.3 | 25.5 | 85.3 | 33.4 |
| சதவிகிதம் | 44.2 | — | 55.8 | — | 100.0 | — |
| ஆடைப் பொருள்கள் | 32.0 | 16.6 | 41.8 | 22.0 | 73.8 | 29.4 |
| சதவிகிதம் | 43.3 | — | 56.6 | — | 100.0 | — |
| மற்றும் பொருள்கள் | 5.7 | 3.0 | 5.8 | 3.5 | 11.8 | 4.1 |
| சதவிகிதம் | 48.3 | — | 49.1 | — | 100.0 | — |
| மொத்தம் | 192.4 | 100.0 | 142.4 | 100.0 | 334.8 | 100.0 |
| சதவிகிதம் | 57.5 | — | 42.5 | — | 100.0 | — |
| ஆடைப் பொருள்கள் | 163.0 | 8.47 | 125.3 | 86.1 | 288.3 | 88.0 |
| சதவிகிதம் | 56.5 | 15 3 | 32.3 | — | 100.0 | — |
| மற்றும் பொருள்கள் | 29.4 | — | 17.1 | 13.4 | 46.5 | 12.0 |
| சதவிகிதம் | 63.2 | — | 36.8 | — | 100.0 | — |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29ஆம் திகதிவரை
அங்கீகரிக்கப்பட்ட தொழில் முயற்சிகளுக்கு நிதியளிப்பு

| இனம் | வெளிநாட்டு மூலதனம் | மொததத்தில் சதவிகிதம் | உள்நாட்டு மூலதனம் | மொத்தத்தில் சதவிகிதம் | மொத்தம | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| உரிமைப்பங்கு முதல் | 440.3 | 21.0 | 279.5 | 43.4 | 719.8 | 26.2 |
| மொத்தத்தில் சதவிகிதம் | 61.2 | | 38.8 | | 100.0 | |
| உள்நாட்டு மூலதனம் | 1659.4 | 79.0 | 364.9 | 56.6 | 2024.3 | 73.8 |
| மொத்தத்தில் சதவிகிதம் | 82.0 | | 18.0 | | 100.0 | |
| மொத்தம் | 2099.7 | 100.0 | 644.4 | 100.0 | 2744.1 | 100.0 |
| மொத்தத்தில் சதவிகிதம | 76.5 | | 23.5 | | 100.0 | |

அவற்றின் பருமன் அவற்றின் சதவிகிதங்கள் ஆகிய இரண்டிலும் காட்டப்படுகின்றன:

மொத்த நிதியளிப்பில் ஏறக்குறைய முக்கால் பகுதி வங்கிகளையும் நிதி ஸ்தாபனங்களையும் நாடுவதன் மூலம் திரட்டப்படவிருந்தது. ஏறக்குறைய கால் பகுதி மட்டுமே உரிமைப்பங்கு முதலாகவோ அல்லது பங்கு முதலாகவோ திரட்டப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. பங்கு மூலதனத்திலும் கடன் நிதிகளிலும் பெரும் பகுதி வெளிநாட்டு வட்டாரங்களிலிருந்து வரவிருந்தது.

மொத்த வெளிநாட்டு நிதிகள் சம்பந்தமாக வெளிநாட்டுக் கடன் நிதிகளின் முக்கியத்துவம்,மொத்த உள்நாட்டு நிதிகள் சம்பந்தமாக அதன் முக்கியத்துவத்தைவிட உயர்வானதாயுள்ளது. உள்நாட்டு நிதிகளில் 43 சதவிகிதம் உரிமைப் பங்கு முதல் வாயிலாகத் திரட்டப்படுமென எதிர்பார்க்கப்பட்டது. மொத்தக் கடன் நிதியளிப்பில் 82 சதவிகிதம் வெளிநாட்டு வட்டாரங்களிலிருந்தும் 18 சதவிகிதம் உள்நாட்டு வட்டாரங்களிலிருந்தும் திரட்டப்படவிருந்தது.

மேற்சொன்ன நிலையுடன் ஒப்பிடுகையில், வர்த்தகத் தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருந்த அக்கம்பெனிகள் நிதியளிப்பு சம்பந்தமாக எவ்வாறு நடந்துகொண்டனவென்பதை நாம் அவதானிக்கலாம். ஆடைப் பொருள் கைத்தொழிலின் ஒப்பியல் நிலையும் அட்டவணை—அஇல் காட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீட்டின் மூலங்கள்

கட்டுநாயக்க ஏற்றுமதிச் செயமுறை வலயத்தில் செய்யப்பட்ட வெளிநாட்டு முதலீடுகளின் பிரதான மூலம் ஆசியப் பிரதேசத்திலேயே அமைந்திருந்தது. ஆரம்பத்திலிருந்தே தைத்த ஆடைகள் பால் காட்டப்பட்ட விசேட விருப்புக்கேற்பவே இப்படியிருந்தது. இந்த நாடுகளிலுள்ள ஆடை, நெசவுத் துணிகளின் உற்பத்தியாளர்கள், குறிப்பாக ஹொங்கொங்கிலுள்ளவர்கள் தங்களுடைய அதிகரித்துவரும் தொழிற்பாட்டுச் செலவுகளை வெட்டவும் அமெரிக்காவும் ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளும் தங்கள் மீது விதித்திருந்த 'கோட்டா' கட்டுப்பாடுகளைத் தந்திரமாக முறியடிக்கவும் சந்தர்ப்பங்களைத் தேடிக்கொண்டிருந்தனர். கட்டுநாயக்க ஏற்றுமதிச் செய்முறை வலயத்தைப் போன்ற வாய்ப்பையே அவர்கள் தேடிக் கொண்டிருந்ததாகத் தோன்றியது. 1980ஆம் ஆண்டு பெப்ரவரி மாத முடிவில் அங்கீகரிக்கப்பட்டிருந்த வெளிநாட்டு உடனுழைப்புடன் கூடிய 86 கைத்தொழில்களில் 46 கைத்தொழில்கள் வரை ஆசியப் பிரதேசத்தைச் சேர்ந்தவையாகவே இருந்தன. இந்த முதலீட்டுத் திட்டங்களில் 13 ஹொங் கொங்கிலிருந்தும், 11 இந்தியாவிலிருந்தும், 5 ஜப்பானிலிருந்தும், 3 தாய்லாந்திலிருந்தும் வந்தன. ஆசியப் பிராந்தியத்துக்கு வெளியே மிகப் பெருந்தொகையான திட்டங்கள், ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கப் பிரதேசத்திலிருந்தும் வந்தன. கட்டுநாயக்க ஏற்றுமதிச் செய்முறை வலயத்தில் சிரத்தை காண்பித்து வந்த பெரிய பிரதேசம் அமெரிக்காவாக இருந்தது. இந்நாட்டிலிருந்து வந்த 11 25 திட்டங்கள் வரை, மேற்கு

1981 ஆம் ஆண்டு முடிவில் ஏற்றுமதிகளில் ஈடுபட்டிருந்த
தொழில் முயற்சிகளுக்கு நிதியளிப்பு

| இனம் | வெளிநாட்டுக் கூறு | மொத்தத்தில் சதவிகிதம் | உள்நாட்டுக் கூறு | மொத்தத்தில் சதவிகிதம் | மொத்தம் | முழு மொத்தத்தில் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 120.5 | |
| உரிமைப்பங்கு முதல் | 65.8 | 32.8 | 54.7 | 44.3 | 100.0 | 37.2 |
| சதவிகிதம் | 54.6 | | 45.4 | | 103.9 | |
| ஆடைகள் | 54.2 | 27.0 | 49.7 | 40.3 | 100.0 | 32.1 |
| சதவிகிதம் | 52.2 | | 47.8 | | 16.6 | |
| மற்றும் பொருள்கள் | 11.6 | 5.8 | 5.0 | 4.0 | 100.0 | 5.2 |
| சதவிகிதம் | 69.9 | | 30.1 | | 283.7 | |
| கடன் மூலதனம் | 135.0 | 67.2 | 68.7 | 55.7 | 100.0 | 62.8 |
| சதவிகிதம் | 66.3 | | 33.7 | | 179.1 | |
| ஆடைகள் | 121.3 | 60.4 | 57.8 | 46.8 | 100.0 | 55.2 |
| சதவிகிதம் | 67.7 | | 32.3 | | 24.6 | |
| மற்றும் பொருள்கள் | 13.7 | 6.8 | 10.9 | 8.9 | 100.0 | 7.6 |
| சதவிகிதம் | 55.7 | | 44.3 | | 324.2 | |
| மொத்தம் | 200.8 | 100.0 | 123.4 | 100.0 | | 100.0 |
| முழுமொத்தத்தில் | | | | | 100.0 | |
| சதவிகிதம் | 61.9 | 87.4 | 38.1 | 87.1 | 283.0 | 87.3 |
| ஆடைப் பொருள்கள் | 175.5 | | 107.5 | | 100.0 | |
| சதவிகிதம் | 62.0 | 12.6 | 38.0 | 12.9 | 41.2 | 12.7 |
| மற்றும் பொருள்கள் | 25.3 | | 15.9 | | 100.0 | |
| சதவிகிதம் | 61.4 | | 38.6 | | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பாவிலிருந்து (17 திட்டங்கள் ஐரோப்பிய பொருளாதார சமூகப் பிரதேசத்திலிருந்தும் 8 திட்டயோசனைகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. 86 திட்டங்களில். 1980ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் வரை அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்களில் பெரும் பகுதி உடை உற்பத்திக் கைத்தொழில்களாகவே இருந்ததிலிருந்து முதலீட்டாளர்கள் இதில் எவ்வளவு சிரத்தை காட்டினரென்பது தெளிவாகத் தெரிந்தது; 86 திட்டங்களில் 53 திட்டங்கள் வரை இத்துறையில் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள 86 கைத்தொழில்களில் வெளிநாட்டு உடனுழைப்பை நாடிய கைத்தொழில்களுக்கு ஆசியப் பிரதேசத்திலிருந்தே அது மிக அதிக அளவில் கிடைத்தது; தனிப்பட்ட நாடுகளிடையே ஹொங் கொங் தான் மிகப் பெருந் தொகையான கைத்தொழில்களுக்கு உடனுழைப்பை நல்கியது. ஒரு பிரதேசம் என்ற முறையில் ஆசியாவுக்கே இதில் பிரதான இடம். ஆசியாவைத் தொடர்ந்து ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஒரு நாடென்ற முறையில் அமெரிக்கா இரண்டாவது இடத்தையே வகித்தது. 1981ஆம் ஆண்டு முடிவில் ஏற்றுமதி செய்த நாடுகள் சம்பந்தமான நிலைமையும் இதைப் போலவே இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட ஆடைப் பொருள் கைத்தொழில்கள் சம்பந்தமாகவும் வர்த்தக உற்பத்தியிலும் இதே நிலைதான்; மொத்தப் புள்ளி விபரங்களின் ஒழுகலாறு ஆடைப் பொருள் கைத்தொழில்களின் ஒழுகலாற்றையே பெருமளவுக்குச் சார்ந்திருந்ததென்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

நூறு சதவிகித வெளிநாட்டு உரிமைப்பங்கு, உடைமை அனுமதிக்கப்பட்ட போதிலும், கிட்டத்தட்ட சகல அங்கீகாரங்களும் கூட்டு முயற்சிகளாகவே இருந்தன. மேலும், திட்ட யோசனைகளில் சுமார் 50 சதவிகிதம் ஆசியப் பிரதேசத்திலிருந்து வந்த போதிலும், முதலீட்டு நிதிகளில் பெரும் பகுதியும் மத்தியகிழக்கு, மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய பிரதேசங்களிலிருந்தே வந்தது. முதலீட்டாளர்களிடையே பல்தேசிய நிறுவனங்களைச்சேர்ந்த எந்தப் பிரபல முதலீட்டாளர்களுமில்லை, எனினும், பின்னர் பெரிய அமெரிக்க மின்னணு உற்பத்தியாளர்கள் வருவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. முதலாவதாக வந்த மின்னணுவியல்—பல்தேசியக் கம்பெனி மோட்டோரோலா ஸெமி—கண்டக்டர்ஸ் (குறை கடத்திகள்) என்னும் ஸ்தாபனமாகும். அந்தக் கம்பெனி 1980ஆம் ஆண்டு அக்டோபர் 20ந் திகதியன்று 22 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புள்ள திட்டமொன்றுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபோது, 100 சதவிகித வெளிநாட்டு உடைமை, இலாபங்களைக் கட்டுப்பாடின்றி இடமாற்றஞ் செய்ய வசதி, முதல 10 வருடங்களுக்கு எந்த வரிகளும் விதிக்கப்படாத அனுகூலம் போன்ற ஆகக்கூடிய நன்மைகள் அந்நிறுவனத்துக்கு அளிக்கப்படுமெனக் கூறப்பட்டது. ஆனால் 1982ஆம் ஆண்டு மே மாதம் வரை கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் மோட்டோரோலா முதலீடு செய்து வருவதற்கான அறிகுறிகளெதுவும் தென்படவில்லை. எனினும், ஹரிஸ் ஸெமி—கண்டக்டர்ஸ் கூட்டுத் தாபன லிமிடெட் ஓஃவ் யூ.எஸ்.ஏ என்னும் இன்னொரு பெரிய அமெரிக்க உற்பத்தி நிறுவனம் இத்திசையில் திட்டமான நடவடிக்கைகளை எடுத்திருந்தது. ஹரிஸ் நிறுவனம் கட்டுநாயக்காவில் தனது தொழிற்சாலையைக் கட்டுவதற்கான வேலைகளை ஆரம்பித்துவிட்டதுடன் ஏறக்குறைய 2,000 ஊழியர்களை வேலைக்கமர்த்தவும் திட்டமிட்டுக்கொண்டிருந்தது.

சுதந்திர வர்த்தக வலயத்தை அமைக்கத் திட்டமிடப்பட்ட போது, கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் அளிக்கப்பட்டுவரும் கவர்ச்சியான ஏற்பாடுகளைப் பெரிய மேற்கத்திய பல்தேசியக் கூட்டுத்தாபனங்களும் பெரிய ஜப்பானிய பல்தேசியக் கூட்டுத்தாபனங்களும் அனுகூலப்படுத்திக்கொள்ளுமென எதிர்பார்க்கப்பட்டது. இங்கு முதலீடு செய்யுமாறு அவற்றைத் தூண்ட முடியு

கட்டுநாயக்க ஏற்றுமதிச் செய்முறை வலயக் கைத்தொழில்களின் உடனுழைப்பு நிலை

| பிரதேசம்/நாடு | 1980-2-29 இல் இருந்தவாறு அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்கள் | | | 1981-12-31 இல் இருந்தவாறு வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்ட கைத்தொழில்கள் | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆடைப் பொருள்கள் | மற்றும் பொருள்கள் | மொத்தம் | ஆடைப பொருள்கள் | மற்றும் பொருள்கள் | மொத்தம் |
| அமெரிக்கா | 6 | 5 | 11 | 5 | 1 | 6 |
| ஐரோப்பிய பொருளாதார சமூகம் | 10 | 7 | 17 | 7 | 2 | 9 |
| ஐரோப்பிய சுதந்திர வர்த்தக சங்கம் | 5 | 3 | 8 | 0 | 2 | 2 |
| மத்திய கிழக்கு | 1 | 1 | 2 | 1 | 1 | 2 |
| ஆசியா | 16 | 17 | 42 | 11 | 8 | 14 |
| ஜப்பான் | 2 | 3 | 5 | 0 | 1 | 1 |
| ஹொங்கொங் | 7 | 6 | 16 | 8 | 2 | 10 |
| தாய்லாந்து | 1 | 2 | 3 | 1 | 0 | 1 |
| இந்தியா | 6 | 5 | 11 | 1 | 0 | 1 |
| மலேசியா | 0 | 1 | 1 | 1 | 0 | 1 |
| சுவிட்ஸர்லாந்து | 5 | 1 | 6 | 1 | 0 | 1 |
| பிஜி | — | — | — | 0 | 1 | 1 |
| உடனுழைப்பில்லாதவை | 0 | 0 | 0 | 1 | 1 | 2 |
| மொத்தம் | 53 | 33 | 86 | 26 | 11 | 37 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மென்ற நம்பிக்கையுடன் இலங்கையிலிருந்து அநேக குழுக்கள் இந் நாடுகளுக்குச் சென்றன. எனினும், நாளதுவரை, முதலீட்டு—வேலை வாய்ப்பு இலக்குகள் அத்துடன் கைத்தொழில் வகைகள் ஆகிய இவ்விரண்டு சம்பந்தமாகவும் இந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை. ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தைத்த உடைக் கட்டத்திலிருந்து மின்னணுவியல் (இலத்திரனியல்) கட்டத்துக்கு மாறும் நடவடிக்கை இன்னும் கைக்கொள்ளப்படவில்லை

### இறக்குமதிகளும் ஏற்றுமதிகளும்

1981ஆம் ஆண்டில் பா. கொ. பொ. கமிஷனில் பதிவு செய்து கொண்ட 60 உக்கு மேற்பட்ட தொழில் நிறுவனங்கள் நிலையான இயந்திர அமைப்புகளையும் இயந்திர சாதனங்களையும் தளபாடங்களையும் மூலப் பொருள்களையும் துணைக்கருவிகளையும் மற்றும் பொருள்களையும் இறக்குமதி செய்து கொண்டிருந்தன. 1978ஆம் ஆண்டில் பா.கொ.பொ.க. திட்டங்கள் இறக்குமதி செய்த பொருள்களின் கன அளவு 58 மில்லியன் ரூபா பெறுமதியுடையன. இது 1979ஆம் ஆண்டில் 253 மில்லியன் ரூபாவிலிருந்து 1980ஆம் ஆண்டில் 516 மில்லியன் ரூபாவுக்கும் 1981 ஆம் ஆண்டில் 1,266 மில்லியன் ரூபாவுக்கும் துரிதமாக ஏறிக் கொண்டேயிருந்தது.

மறு பக்கத்தில், 1979ஆம் ஆண்டில் 152 மில்லியன் ரூபா பெறுமதியுடையனவாயிருந்த ஏற்றுமதிகளின் கன அளவு 1980ஆம் ஆண்டில் 529 மில்லியன் ரூபாவுக்கும் 1981ஆம் ஆண்டில் 1,163 மில்லியன் ரூபாவுக்கும் அதிகரித்தது. பா.கொ.பொ.க. திட்டத்தின் பெரும் பகுதியாக அமைந்திருந்த தைத்த ஆடைகள் 1981ஆம் ஆண்டில் மொத்தம் 882 மில்லியன் ரூபாவைச் சம்பாதித்தன. உற்பத்தியில் ஈடுபட்டிருந்த 37 திட்டங்களில் 24 திட்டங்கள் தைத்த உடை உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன. தைத்த ஆடைகள் பிரதானமாக ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளுக்கும் ஸ்காந்தி நேவிய நாடுகளுக்கும் கனடா, துபாய், ஹொங் கொங் ஆகிய தேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன.

பா.கொ.பொ.க. தொழில் முயற்சிகளால் 1981ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட மற்றும் பொருள்கள்—டயர்கள், ரப்பர் நூல், மரத்தாலாய விளையாட்டுக் கருவிகள், தலைமயிர் உயர்த்திகள், தூரிகைகள், ரப்பர் தகடுகள், ரப்பர் வார்கள், மீன்பிடி உபகரணங்கள், அயன மண்டலத் தாவரங்கள், வெட்டிப்பட்டை தீட்டப்பட்ட நவரத்தினங்கள், முந்திரிப் பருப்பு (கசுக்கொட்டை), தேயிலைப்பைகள், ஆபரணங்கள் ஆகியன. ஒரு தொழில் நிறுவனம் சர்வதேச விமானங்களில் வரும் பிரயாணிகளுக்கு உணவு பானங்கள் ஆகியவற்றைப் பரிமாறும் சேவைகளைச் செய்தது.

1981ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட பிரதான பொருள்களில், ரப்பரினாலாய 'மாஸ்டர் பெச்' 22.2 மில்லியன் ரூபா வருமானத்தைக் கொண்டுவந்தது; மின்சார உபகரணங்கள் 20.2 மில்லியன் ரூபா; முந்திரிப் பருப்பு 14.7 மில்லியன் ரூபா; ரப்பர் நூல் 10.3 மில்லியன் ரூபா. மற்றெல்லாப் பொருள்களின் ஏற்றுமதிச் சம்பாத்தியமும் 10 மில்லியன் ரூபாவுக்குக் கீழேயிருந்தது—தேயிலைப் பைகள் 9.3 மில்லியன் ரூபா, பித்தளை வில் வளையங்கள் 0.4 மில்லியன் ரூபா. மீன்பிடி உபகரணங்களும் 8.5 மில்லியன் ரூபாவைச் சம்பாதித்தன.

ரப்பர் டயர்களையும் ரப்பர் நூலையும் தவிர்த்து, மற்றப் பொருள்களில் பெரும்பாலானவை அமெரிக்காவுக்கும் மேற்கு ஐரோப்பாவுக்கும் வடக்கு ஐரோப்பாவுக்கும் அனுப்பப்பட்டன. ரப்பர் நாலுக்கான சந்தையாக ஹொங் கொங்கே பெருமளவுக்கு விளங்கியது. ரப்பர் டயர்கள் பெல்ஜியத்துக்கும் சிங்கப்பூருக்கும் மலேசியாவுக்கும் தாய்லாந்துக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. மற்றும் வணிகப் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்ட சந்தைப் பகுதிகள் கீழே தரப்படுகின்றன:

மீன்பிடி உபகரணங்கள்—நோர்வே
ரப்பர் பட்டைகள்—அமெரிக்கா
நவரத்தினக்கற்கள்—அமெரிக்கா
ஆபரணங்கள்—மேற்கு ஜெர்மனி, சுவிட்ஸர்லாந்து
முந்திரிப்பருப்பு—நியூஸிலாந்து
அயனமண்டலத் தாவரங்கள்—நெதர்லாந்து, டென்மார்க், நோர்வே
தூரிகைகள்—மேற்கு ஜெர்மனி
மின்சாரக் கருவிகள்—அமெரிக்கா
மரத்தாலாய விளையாட்டுக் கருவிகள்—பிரிட்டன்
பித்தளை வில்வளையங்கள்—ஜப்பான்

1979ஆம் ஆண்டுமுதல் 1981ஆம்ஆண்டுவரையுள்ள காலத்தில் ஏற்றுமதி செய்யப்பட்ட பிரதான பொருள்களின்அமைப்பு கீழேதரப்படுகிறது:

### கட்டுநாயக்க ஏற்றுமதிச் செய்முறை வலய ஏற்றுமதிகளின் அமைப்பு

| | கைத்தொழில் | ஏற்றுமதிகள் 1979 ஆம் ஆண்டு | மொத்தத்தில் சதவிகிதம் | ஏற்றுமதிகள் 1980 ஆம் ஆண்டு | மொத்தத்தில் சதவிகிதம் | ஏற்றுமதிகள் 1981 ஆம் ஆண்டு | மொத்தத்தில் சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | உடைகள் | 145.1 | 95.4 | 489 8 | 93.4 | 1003.6 | 90.4 |
| 2. | மீன்பிடி உபகரணங்களும் துணைப் பொருள்களும் | 5.1 | 3.4 | 11 4 | 2.2 | 8.5 | 0.8 |
| 3. | ரப்பர் நூல் | 1.2 | 0.8 | 12.6 | 2.4 | 10.3 | 0.9 |
| 4. | நவரத்தினக் கல் வெட்டு | 0.7 | 0.4 | 1.9 | 0.2 | 0.6 | 0.1 |
| 5. | தேயிலை பொதிப்படுத்தல் | — | — | 3.8 | 0.7 | 9.3 | 0.8 |
| 6. | முந்திரிப் பொருள்கள் | — | — | 4.8 | 0.9 | 14.7 | 1.3 |
| 7. | மாஸ்டர் பெச் | | | | | 22.2 | 2.0 |
| 8. | மின்சார உபகரணங்கள் | | | | | 20.2 | 1.8 |
| 9. | மற்றும் பொருள்கள் | | | | | 21.1 | 1.9 |
| 10. | மொத்தம் | 152.1 | 100.0 | 524.3 | 100.0 | 1110.5 | 100.0 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைப் பொருள்களின் ஏற்றுமதிப் பெறுமதி துரிதமாக வளர்ந்துள்ளபோதிலும், சதவிகித அடிப்படையில் அதன் முக்கியத்துவம் குறைந்துவிட்டது; 1979ஆம் ஆண்டில் 95.4—96.4 சதவிகிதமாயிருந்த அது 1981ஆம் ஆண்டில் 90.4 சதவிகிதத்துக்குக் குறைந்துவிட்டதென்பதை இந்த அட்டவணை எடுத்துக் காட்டுகிறது. புதிய பொருள்கள் முன்னணிக்கு வந்ததே இதற்குக் காரணம். இதே சமயத்தில் தற்போதுள்ள மற்றும் பொருள்களில் சிலவற்றின் உற்பத்தி துரிதமாக விரிவடைந்து வந்தது.

கீழ்க்கண்ட அட்டவணையில், நாட்டின் உற்பத்தித் துறையினது மொத்த ஏற்றுமதிகளின் பெறுமதி, நாட்டின் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியம் தொடர்பாக கட்டுநாயக்க ஏற்றுமதிச் செய்முறை வலய ஏற்றுமதிகளின் முக்கியத்துவம் தரப்படுகிறது:

ஏற்றுமதி உபரி

1981ஆம் ஆண்டு முடிவிலிருந்தவாறு, நான்கு வருடங்களில் (1978 ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு வரை) நிகர இறக்குமதிகள் ஏற்றுமதிச் சம்பாத்தியங்களை விட இன்னும் உயர்வாகவே இருந்து வந்தன. 1978ஆம் ஆண்டிலிருந்து 1981ஆம் ஆண்டு வரையுள்ள காலத்தில் 60 தொழில் முயற்சிகளின் இறக்குமதிகளுடைய பெறுமதி 2,063 மில்லியன் ரூபாவாயிருக்க, 1979ஆம் ஆண்டுக்கும் 1981ஆம் ஆண்டுக்குமிடையே 41 தொழில் முயற்சிகள் செய்த ஏற்றுமதிகளின் பெறுமதி 1,845 மில்லியன் ரூபாயிலிருந்தது. திட்ட அமுல் அமைச்சு வெளியிட்ட 'செயற்பாடுகள்' என்னும் பிரசுரத்தில் இப்புள்ளி விவரங்கள் தரப்பட்டுள்ளன.

கட்டுநாயக்க ஏற்றுமதிச் செய்முறை வலயத்தின் ஏற்றுமதிச் செயற்பாடு இக்கைத்தொழில்களிலிருந்து சேர்ந்த பெறுமதியைத் தெளிவாக எடுத்துக் காட்டுவதாயில்லை. இது, இக்காலத்தில் உள்நாட்டு மூலவளங்களுக்கு அளிக்கப்பட்ட நிதிகளின் ஒப்பியல் பெறுமதிகளையும் அத்துடன் உள்நாட்டுத் தொழிலாளர்களுக்கும் பொருள்களுக்கும் செய்யப்பட்ட கொடுப்பனவுகளையும் பொறுத்திருக்கும். 1980, 1981 ஆகிய இரு வருடங்களிலும் செய்யப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதி 1,674 மில்லியன் ரூபாவாயிருந்தது. இறக்குமதிகளில் கீழ்க்கண்ட பொருள்கள் அடங்கியிருந்தன—

அட்டவணை—14

| | 1980<br>மில்லியன் ரூபா |
|---|---|
| மூலதனப் பொருள்கள் | 118.2 |
| இடைத்தரப் பொருள்கள் | 392.6 |
| வகைப்படுத்தாதவை | 5.1 |
| மொத்தம் | 515.9 |

| | 1981<br>மில்லியன் ரூபா |
|---|---|
| மூலதனப் பொருள்கள் | 306.1 |
| இடைத்தரப் பொருள்கள் | 848.1 |
| வகைப்படுத்தாதவை | 4.0 |
| மொத்தம் | 1158.2 |

ஏற்றுமதிகளின் வாயிலாக அடையப்பட்ட நிகர ஆதாயங்களை மிகவும் அண்ணளவாகக் கணக்கிடுவதாயின், உற்பத்தி நிகழ்வுப் போக்கில் பொதுவாக நேரடி உள்ளீடுகளாயிருக்கும் இடைத்தரப் பொருள்களையும் வகைப்படுத்தாத பொருள்களையும் முற்றுகக் கழிக்க வேண்டியிருக்கும். செலவில் மூலதனப் பொருளையும் சேர்க்க வேண்டியிருக்கும்; தேய்மானத்துக்கும் கடனழிவுக்கும் 10 சதவிகிதம் வரக் கூடுமென மதிப்பிடப்படுகிறது. இவ்விதம் கணக்கிடப்பட்ட ஆதாயம் கீழே தரப்படுகிறது:

அட்டவணை—15

| (மில்லியன் ரூபா கணக்கில்) | ஏற்றுமதிகளின் பெறுமதி |
|---|---|
| 1980 | 524.3 |
| 1981 | 111 0.5 |

| | இறக்குமதிகளின் பெறுமதி |
|---|---|
| 1980 | 409.5 |
| 1981 | 882.7 |
| | உபரி |
| 1980 | 114.8 |
| 1981 | 227.8 |

1980, 1981 ஆகிய இரு வருடங்களுக்கும் தொழிலாளர்கள், உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்கள், வெளிநாட்டு உடனுழைப்பாளர் ஆகியோரிடையே பங்கிடப்படுவதற்குக் கிடைக்கக் கூடியதாயுள்ள உபரித் தொகை முறையே 114.8 மில்லியன் ரூபாவும் 227.8 மில்லியன் ரூபாவுமாகும். இது ஒரு மிக விரிவான, பரீட்சார்த்த கணக்கீடாகக் கருதப்பட வேண்டும்.

வேலை நிலைமை

அங்கீகரிக்கப்பட்ட சகல திட்டங்களும் தொழிற்பட்டிருந்தால், அவற்றில் ஏறக்குறைய 55,000 பேர் வேலைக்கமர்த்தப்பட்டிருப்பார்கள். ஒவ்வொரு வருடமும் அளிக்கப்பட்ட அங்கீகாரங்களின்படி இந்தச் சாத்தியமான வேலை வாய்ப்புகளைப் பற்றிய பகுப்பொன்று கீழுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. வேலை வாய்ப்பு

உற்பத்தித் துறையின் ஏற்றுமதிகள், நாட்டின் மொத்த ஏற்றுமதிகள் சம்பந்தமாக க. ஏ. செ. வலயத்தின் ஏற்றுமதிகள்

| | 1 | 2 | 3 | 4 | |
|---|---|---|---|---|---|
| வருடம் | க.ஏ.செ.வ- ஏற்றுமதிச் சம்பாத்தியம் (மில்லியன் ரூபாவில்) | உற்பத்தித் துறையின் ஏற்றுமதிச் சம்பாத்தியம் | இலங்கையின் மொத்த ஏற்றுமதிச் சம்பாத்தியம் | 3 இன் சதவிகிதமாக 2 | 4 இன் சதவிகிதமாக 2 |
| 1979 | 152.1 | 3602.1 | 15582 | 4.2 | 1.0 |
| 1980 | 524.3 | 5361.7 | 17799 | 9.8 | 2.0 |
| 1981 | 1110.5 | 6459.8 | 19540 | 17.2 | 5.7 |

ஆதாரங்கள்:
பா. கொ. பொ. கமிஷன்,
திட்ட அமுல் அமைச்சு,
இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை — X111

ஆடைப் பொருள்களின் ஏற்றுமதிகள் — கா. ஏ. செ. வலயமும் இலங்கையும் மொத்தம்

| வருடம் | கா.ஏ.செ. வலய ஏற்றுமதிகளின் பெறுமதி | வளர்ச்சி விகிதம் | இலங்கையினது ஏற்றுமதிகளின் பெறுமதி | வளர்ச்சி விகிதம் | மொத்த ஏற்றுமதிகளில் 1 சதவிகிதமாக கா.ஏ.செ. வலய ஏற்றுமதிகள |
|---|---|---|---|---|---|
| 1979 | 145.1 | — | 1105.0 | — | 13.1 |
| 1980 | 489.8 | 389.8 | **1810.3** | 63.8 | 27.1 |
| 1981 | 1003.6 | 104.9 | 2975.8 | 64.4 | 33.7 |

களில் பெரும்பாலானவை நெசவுத் துணிகள், உடுதுணிகள். தோல் பொருள்கள் ஆகியவற்றின் துறையிலும், அடுத்து இரசாயனப் பொருள்கள், பெற்ரோலியம், நிலக்கரி, ரப்பர், பிளாஸ்திக் பொருள்கள் ஆகியவற்றின் துறையிலும், அடுத்து அடிப்படை உலோகப் பொருள்கள் துறையிலும் வார்ப்பு உலோகப் பொருள்களின் துறையிலும், போக்குவரத்துச் சாதனங்களின் துறையிலும் சிருஷ்டிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த இடாப்பிலிருந்து அநேக அங்கீகரிக்கப்பட்ட கம்பெனிகள் நீக்கப்பட்டதன் விளைவாக, நேரடியாக வேலைக்கமர்த்தப்படுவரென எதிர்பார்க்கப்பட்ட தொகையில் ஏறக்குறைய 37,000 விழுந்துவிட்டது. இது ஆதியில் மதிப்பிடப்பட்ட தொகைக்கு 32.7 சதவிகிதம் குறைவாகும். 1981 ஆண்டு முடிவில் சில பிரதான இனங்களில் வர்த்தக உற்பத்திக் கட்டத்திலிருந்த க.ஏ.செ. வலயக் கைத்தொழில்களின் உண்மையான வேலை வசதி நிலைமை கீழே உள்ள அட்டவணையில் தரப்படுகிறது:

மேலுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கைத்தொழில் திட்டங்களில் வேலைக்கமர்த்தப்பட்டவர்களுக்கு மேலதிகமாக, வலயத்துக்கு வெளியே கைத்தொழிலல்லாத தொழில் முயற்சிகளிலும் பா. கொ. பொ. க. தொழில் முயற்சிகளிலும் மற்றும் 2,000 உக்கு மேற்பட்டோர் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர். இவ்விதமாக, 1981 ஆம் ஆண்டு டிசம்பர் மாத முடிவில் வேலைக்கமர்த்தப்பட்டோரின் மொத்தத் தொகை 19,921 என்று உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டது.

1980ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பா. கொ. பொ. கமிஷன மேற்கொண்ட ஒரு பரிசீலனையிலிருந்து, முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலில்லாத தொழிற்சாலைகளிலிருந்து முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திலுள்ள தொழிற்சாலைகளுக்குத் தொழிலாளர்கள் குறிப்பிடத்தக்கவாறு பெயரவில்லையென்று தெரிய வநதது. ஏனென்றால், சம்பள விகிதங்களிலும் வேலை நிலைமைகளிலும் இத தொழிற்சாலைகளில் எந்தப் பெரிய முரண்பாடுகளும் இருக்கவில்லை. தொழிலாளருக்கும் அதிகாரிகளுக்குமிடையே உள்ளன்புள்ள உறவுகளை வளர்ப்பதற்காக வலய அதிகார சபை விசேஷ கைத்தொழில் உறவுகள்—ஆவணிப் பகுதியொன்றையும் சிருஷ்டித்துள்ளது. இந்தப் பகுதி தொழில் சட்டங்களும் கைத்தொழில் உறவுகளும் அனுசரிக்கப்படுகின்றனவாவென்பதைக் கண்காணிப்பதுடன் தனது நடவடிக்கைகளைத் தொழில் திணைக்களத்துடன் ஒருமுகப்படுத்தியும் வருகின்றது.

உள்ளமைப்புச் செலவுகள்

வலயத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள உள்ளமைப்பு வசதிகளில முதலீடு செய்யப்பட்ட பொது நிதிகளிலிருந்து உண்டாக்கப்பட்டுள்ள வருமானத்தைப் பற்றி எந்தத் தெளிவான மதிப்பீடும் செய்யப்படவில்லை.

வலயத்தை ஸ்தாபிப்பதற்கும் தொழிற்படுத்துவதற்குமான செலவுகளைக் கீழ்க்கண்டவாறு விரிவான அளவில் வகைப்படுத்தலாம்: உள்ளமைப்புகளுக்கும் மற்றும் கட்டட வேலைகளுக்கும் அரசாங்கம் செய்த முதலீடு; வலயத்தில் தொழிற்சாலைகளை அமைப்பதற்காக உள்நாட்டுத் தொழில் முயற்சியாளர்கள் செய்த முதலீடு; பராமரிப்புச் செலவுகள், விலக்களிக்கப்பட்ட வரிகள்: காணிகளினதும் கட்டடங்களினதும் மிஞ்சிய பெறுமானம். மறு பக்கத்தில் பொருளாதார நன்மைகள் விரிவான அளவில் கீழ்க்கண்டவற்றை உள்ளடக்கும்: தொழிலாளர்களுக்கு மீளக் கொடுக்கப்பட்ட பணம் (சம்பளங்கள் முதலியன); அரசாங்கச் சொத்துக்கள் மீது கிடைத்த ஆதாயம (வாடகை வட்டி); ஏற்றுமதிச் செய் முறை வலய நிர்வாகத்தினதும் அதன் ஆதரவு முகவர் நிலையங்களினதும் நிகர வருவாய; திரட்டப்படத்தக்க வரி.

பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷனின் உள்ளமைபபுக்காக மூலதனப் பாதீட்டு (வரவு செலவுத் திட்டம்) வாயிலாக வழங்கப்பட்ட பணத்தொகை 240 மில்லியன—300 மில்லியன் ரூபா எனமதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொகைக்குக் கிட்டத்தட்டச் சமமான ஒரு தொகையை மற்றும் அரசாங்கத் திணைக்களங்களும் முகவர் நிலையங்களும் செலவிட்டிருக்கலாம். 1980ஆம் ஆண்டில பா. கொ. பொ. கமிஷன் உண்மையில் செலவிட்ட தொகை 97 மில்லியன ரூபா; ஏனைய அரசாங்கத் திணைக்களங்கள் செலவிட்ட தொகை 32 மில்லியன் ரூபா. பா. கொ. பொ. கமிஷனுக்கு அரசாங்கம் நேரடியாக வழங்கிய மானியம் 1978ஆம் ஆண்டில் 13.6 மில்லியன் ரூபா, 1979ஆம் ஆண்டில் 18.6 மில்லியன் ரூபா, 1980ஆம் ஆண்டில் 117.8 மில்லியன் ரூபா. இது தவிர, இக்காலத்தில், பா. கொ. பொ. கமிஷன் காணிக் குத்தகைகளிலிருந்தும லைசென்ஸ் கட்டணங்களிலிருந்தும் [illegible] மில்லியன் ரூபாவைப் பெற்றது.

1981—85 உக்கான பொதுத் துறை முதலீட்டுத் திட்டம், 1984 ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு வருடமும் பா. கொ. பொ. கமிஷனுக்கு 60 மில்லியன் ரூபா நேரடிச் செலவுகள் ஏற்படுமென்று மதிப்பிடுகிறது; இதேவேளை பா. கொ. பொ. கமிஷனின் உள்ளமைப்

1981 டிசம்பர் 31 ஆம் திகதியன்று இருந்தவாறு கா. ஏ. செ. வலயக் கைத்தொழில்களில் வேலைவாய்ப்பு நிலைமை

| இனம் | மொத்த வேலை வசதிகள் | சதவிகிதம் | வெளிநாட்டு வேலை வசதிகள் | சதவிகிதம் | உள்நாட்டு வேலை வசதிகள் | சதவிகிதம் |
|---|---|---|---|---|---|---|
| 1. ஆடைப் பொருள்கள் | 15,698 | 88.1 | 138 | 89.1 | 15,560 | 88.1 |
| 2. மீன்பிடி உபகரணங்களும் துணைக் கருவிகளும் | 199 | 1.2 | 1 | 0.6 | 198 | 1.1 |
| 3. ரப்பர் நூல் | 101 | 0.6 | 2 | 1.3 | 99 | 0.6 |
| 4. நவரத்தினங்களை வெட்டல் | 141 | 0.8 | 2 | 1.3 | 139 | 0.9 |
| 5. மின்சாரப் பொருள்கள் | 186 | 1.6 | 4 | 2.6 | 282 | 1.6 |
| 6. மற்றும் பொருள்கள் | 1,365 | 7.7 | 8 | 5.1 | 1,357 | 7.7 |
| மொத்தம் | 17,813 | 100.0 | 155 | 100.0 | 17,658 | 100.0 |

புகள் மீது ஏனைய திணைக்களங்கள் செலவிடக்கூடிய தொகை 1981ஆம் ஆண்டில் 36 மில்லியன் ரூபாவாகவும் 1982ஆம் ஆண்டில் 167 மில்லியன் ரூபாவாகவும் இருக்குமென மதிப்பிடப்படுகிறது.

மேலே திரல்படுத்தப்பட்டது போல், ஏனைய செலவுகள் வலயத்தை நடத்துவதற்குரிய நடப்புச் செலவுகளையும் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்கும், ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகளைப் பராமரிப்பதற்கும் உரிய செலவுகளையும் உள்ளடக்கும்.

பொருளாதாரத்துக்கு ஏற்படக்கூடிய இன்னொரு வகைச் செலவினம் காணிகளினதும் கட்டடங்களினதும் மீதான எஞ்சிய பெறுமதியாகும். இது "பயன்கள் காணிகள் சம்பந்தமாக வலயத்திலுள்ள தொழில் முயற்சிகளிலிருந்து அறவிடப்படும் விலைகளுக்கும் அந்த உள்ளீடுகளின் சமூக வாய்ப்புச் செலவுகளுக்குமிடையே இருக்கக்கூடிய எந்த வேற்றுமையின் அளவில்" இருந்து எழும் என்று கூறப்படுகிறது. இதற்குக் காட்டப்பட்டுள்ள ஓர் உதாரணம், 50,000 லீட்டருக்கு 1 ரூபா வீதம் நீர் வழங்கப்படுவதாகும் அல்லது பயன்களுக்குத் தற்போதிலிருந்து வரும் கட்டணங்கள் சமீப வருடங்களில் அவற்றை வழங்குவதற்கு வேகமாக அதிகரித்து வரும் செலவுகளுக்கேற்றவாறு யதார்த்தமாக இல்லாதிருந்திருக்கலாம். தற்போது அமுலிலுள்ள ஒப்பந்தங்களில் அநேகம் கைச்சாத்திடப்பட்டதற்குப் பின்னர் காணிகளின் பெறுமதிகள் கூட கடுமையாக மாறிவிட்டன. ஆதியில் ஏக்கர் ஒன்றுக்கான 99 வருட குத்தகைக்கு 300,000 ரூபா கொள்முதல் விலையாகவும், ஏக்கர் ஒன்றுக்கு 8,000 ரூபா வருடாந்தக் கட்டணங்களாகவும் இருந்தன. இந்தச் செலவுகள் முறையே 600,000 ரூபாவாகவும் 25,000 ரூபாவாகவும் உயர்ந்துள்ளதாகக் கூறப்பட்டது. இது மாற்று உபயோகங்களில் காணிகளின் சமூகப் பெறுமானத்தைப் பிரதிபலிக்கின்றது.

வலயம் ஏற்படுத்தியுள்ள பொருளாதாரத் தாக்கத்தைப் பற்றிய உண்மையான நிலையை விரிவான அளவில் ஆராய முடியாது. ஏனென்றால், இது சம்பந்தமான அடிப்படைத் தரவுகள் மதிப்பீட்டுக்குக் கிடைக்கக் கூடியனவாயில்லை.

வலயத்துக்கு முதலீட்டாளர்களைக் கவர்வதில் பூர்வாங்க வெற்றி பெறப்பட்டுள்ளதை முன்னிட்டு, வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க இதுவரை வழங்கப்பட்டு வந்துள்ள ஊக்கிகள் அனைத்தையும் மீளாய்வு செய்வதற்கு இது நல்ல தருணமாகுமென யோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, உள்ளமைப்புகள் மீது ஓர் அதிகரித்த செலவுக் கட்டணத்தை வசூலிக்கும் நோக்கத்துடன் கொள்கைச் சீராக்கங்கள் செய்வதென உத்தேசிக்கப்பட்டுள்ளது. சகல பா. கொ. பொ. க. கம்பெனிகளுக்கும் முழுச் செலவு அடிப்படையில் வருடாந்தக் கட்டணங்கள் உயர்த்தப்படவேண்டுமென்றும், உள்ளமைப்புகள் பயன்கள் மீதான சகல செலவுகளும் குத்தகைத் தொகைகள் முதலியனவும் ஏதாவதொரு பொருத்தமான விலைக் கோவையுடன் கட்டப்படவேண்டுமென்று யோசனை கூறப்பட்டுள்ளது. இப்பொழுது வலயம் "உண்மையில் தொழிற்பட்டுவரும் ஒரு வர்த்தக முயற்சி"யாக இருக்கிறதெனச் சொல்லப்படுவதால், இலங்கைக்கு நன்மைகளின் பாய்ச்சலை அதிகரிக்கக்கூடிய கொள்கைச் சீராக்கங்களைச் செய்வதற்குத் தக்க நியாயங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது.

## முடிவுரை

சுதந்திர வர்த்தக வலயம் சம்பந்தமாக உள்ளமைப்பின் செலவுகள், வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கெதிராக உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகள் (உள்நாட்டு முதலீட்டாளர்கள் பெரும்பாலான அம்சங்களில் தனியார்களேயாவர்), வைத்துக் கொள்ளப்பட்ட இலாபங்கள், சேர்க்கப்பட்ட பெறுமதி, சந்தைகளை அடைவதற்குள்ள வசதிகள், வேலைக்கமர்த்தப்பட்டுள்ளோரின் தொகை, ஊழியர்களின் வேலை நிபந்தனைகளும் நியதிகளும் அத்துடன் இதே போன்ற பாதைகளில் இறங்கியுள்ள மற்றும் நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தல் போன்ற காரணிகளை நாம் இதுவரை ஆராய்ந்துள்ளோம்.

இதில் எத்தனையோ முகவர் நிலையங்கள் சம்பந்தப்பட்டுள்ளதால் உள்ளமைப்பின் செலவைச் சரியாகக் கூற முடியாது. ஆனால் அண்ணளவாக மதிப்பிடுவதெனில் அது 500 மில்லியன் ரூபாவாக இருக்கும். சுதந்திர வர்த்தக வலயத்தில் செய்யப்பட்ட முதலீடுகளுக்கு (அஃதாவது வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டியால் அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகள் போன்றவை) அளிக்கப்பட்ட சலுகைகள் சு. வ. வலயத்துக்கு வெளியே செய்யப்பட்ட முதலீடுகளுக்கு அளிக்கப்பட்டதைவிட அதிகமாகும். எனினும், வெ. மு. ஆ. கமிட்டி சு. வ. வலயத்தைவிட அதிகமான திட்டங்களை அங்கீகரித்திருப்பதாகத் தோன்றுகிறது— (1978 ஆம் ஆண்டுக்கும் 1981 ஆம் ஆண்டுக்கு

மிடையே வெ. மு. ஆ. கமிட்டி 12.9 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட முதலீட்டைக் கொண்ட 433 திட்டங்களை அங்கீகரித்தது. இதற்கெதிராக பா. கொ. பொ. கமிஷன் 5.5 பில்லியன் ரூபா மதிப்பிடப்பட்ட முதலீட்டைக் கொண்ட 158 திட்டங்களையே அங்கீகரித்தது.) வெளிநாட்டு முதலீடு தேவைப்படுமாயின் 'ஒரு நாட்டுக்குள் ஒரு நாடு' என்று சில சமயங்களில் வர்ணிக்கப்படுவதை நிறுவ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்க மாட்டாது என இது சூசகமாகத் தெரிவிக்கின்றது. சு. வ. வலய முதலீடுகள் செய்யப்பட்டுள்ள துறைகளில் அஃதாவது ஆடைத் துறையில் தொழில்நுட்ப முறைகளைக் கொண்டிருந்த உள்நாட்டுக் கைத்தொழில் அதிபர்களுக்குக் குறைவான ஊக்கச் சலுகைகளே அளிக்கப்பட்டுள்ளன. ஏனென்றால், அவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்ட காலகட்டங்கள் பெரும்பாலும் 1960 களிலேயே நிகழ்ந்தன. மேலும், இலங்கையிலே உள்நாட்டிலும் சு. வ. வலயத்திலுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு வெளிநாட்டிலும் கிடைக்கக்கூடிய நிதிகள் சம்பந்தமான வட்டி விகிதங்களில் ஒப்பியல் வித்தியாசங்கள் உள்ளன. (சு. வ. வலயத்திலுள்ள வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெருமளவுக்குக் குறைவான தொழில்நுட்ப முறைகளே தேவைப்படும் ஆடைத் துறையில் ஈடுபட்டுள்ளனர். உயர் வட்டி விகிதங்கள் நிலவும் பணச் சந்தையில் போட்டியிட வேண்டியிருக்கும் உள்நாட்டு உற்பத்தியாளர்களைவிட இவர்களுக்குக் குறைவான வட்டி விகிதங்களின் வசதி கிடைக்கின்றது. உள்நாட்டுக் கைத்தொழில் அதிபர்களுக்கு எதிராக, சு. வ. வலயத்திலுள்ள முதலீட்டாளர்களுக்கு மிகப் பெரிய சலுகைகள் சு. வ. வலயத்தில் பெரும் முதலீடுகள் செய்யப்பட்டுள்ள துறையிலேயே அஃதாவது ஆடைக் கைத்தொழிலிலேயே அளிக்கப்பட்டுள்ளன. ஆடைக் கைத்தொழில் குறைந்த அளவில் தொழில்நுட்ப முறைகள் கையாளப்படும் ஒரு கைத்தொழில். கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக இலங்கையரான கைத்தொழிலதிபர்கள் இதன் உற்பத்தியிலும் இதைச் சந்தைப்படுத்துவதிலும் ஒப்பியல் ரீதியாகப் போதிய தேர்ச்சி அடைந்திருக்கிறார்கள். ஆடைகளின் ஏற்றுமதிகளைப் பொறுத்தவரைதான் 'கோட்டா'க்கள் சம்பந்தமாக மேற்கில் உயர்ந்து வரும் வேலையின்மையுடன் வடக்குக்கும் தெற்குக்குமிடையே முக்கிய பேரம் பேசுதல் நடைபெற்று வந்துள்ளது. இந்தக் குறைவான தொழில்நுட்பவியல் துறையிலேதான் சு. வ. வலயம் இலங்கைக் கைத்தொழில் அதிபர்களுக்குரிய சந்தைகளாக இருக்கக்கூடியதிலிருந்து இலங்கைச் சந்தையை இழுத்திருக்கிறது.

சு. வ. வலயத்தில் எதிர்பாாக்கபடும் வேலைவசதிகள் பற்றிய உத்தியோகபூர்வமான அறிக்கைகளில் தரப்பட்ட விவரங்கள் வேறுபட்டுள்ளன. 100,000 பேருக்கு வேலைவசதி கிடைக்குமென்று ஆரம்பத்தில் கூறப்பட்டது. 1982 ஆம் ஆண்டு முடிவில் 35,000 பேருக்கு வேலைவசதி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும், 1983 ஆம் ஆண்டில் 50,000 பேருக்கு வேலை கிடைக்குமென்றும மிகச் சமீபத்தில் சொல்லப்பட்டது. வேலைவசதிகள் சம்பந்தமாக ஆரம்பத்தில் பேருற்சாகத்துடன் வெளியிடப்பட்ட புள்ளிவிவரம் வெட்டித் திருத்தப்பட்டுள்ளதெனபதில் சந்தேகமில்லை. ஆனால், இந்த வேலைவசதிகளே பெருமளவுக்கு ஆடைக் கைத்தொழிலில்தான் கிடைத்துள்ளனவென்பது கவனிக்கப்பட வேண்டும். இன்று சு. வ. வலயத்தில் வேலைக்கமர்த்தப்பட்டோரில் கிட்டத்தட்ட 90 சதவிகிதத்தினர் ஆடைக் கைத்தொழில் துறையிலேதான் உள்ளனர். தொழில்நுட்ப முறைகள், சந்தைகள் ஆகிய இரண்டின அடிப்படையிலும் ஆராயுமிடத்து, இலங்கைக் கைத்தொழிலதிபர்

1981 டிசம்பர் 31ஆம் திகதியன்று இருந்தவாறு பா. கொ. பொ. கமிஷனல் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களின் தொகையும் உத்தேசிக்கப்பட்ட முதலீடுகளும்

| இனம் | அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள (தொகை) | | | | வெளிநாட்டு முதலீடு (மில்லியன் ரூபா) | | | | மொத்த வெளிநாட்டு (மில்லியன் ரூபா) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 78 | 79 | 80 | 81 | 78 | 79 | 80 | 81 | 78 | 79 | 80 | 81 |
| 1. உணவும் பானங்களும் புகையிலையும் | | | | | | | | | | | | |
| 2. நெசவுத்துணிகள், உடுதுணிகள், தோல்பொருள்கள் | 1 | 1 | 3 | 1 | 2 | 29 | 28 | 174 | 5 | 26 | 49 | 454 |
| 3. மரமும் மரப்பொருள்களும் | 31 | 18 | 10 | 4 | 621 | 244 | 342 | 154 | 914 | 639 | 468 | 198 |
| 4. கடதாசியும் கடதாசிப் பொருள்களும் | — | 1 | 2 | 1 | — | — | 16 | 89 | — | 1 | 20 | 120 |
| 5. இரசாயனப் பொருள்களும் பெற்றோலியமும் நிலக்கரியும் | 1 | 1 | — | — | 6 | 3 | — | — | 7 | 5 | — | — |
| ரப்பரும் பிளாஸ்திக் பொருள்களும் | 7 | 2 | 8 | 3 | 47 | 24 | 134 | 23 | 75 | 43 | 204 | 30 |
| 6. உலோகமல்லாத கனிப் பொருள்கள் | 2 | 2 | 48 | 1 | 497 | 61 | — | 18 | 383 | 68 | — | 35 |
| 7. அடிப்படை உலோகப் பொருள்கள் | 3 | 7 | 1 | 4 | 10 | 91 | 446 | 73 | 10 | 159 | 588 | 102 |
| 8. வார்த்த உலோகப் பொருள்களும் போக்குவரத்துச் சாதனங்களும் | 7 | 5 | 11 | 2 | 19 | 27 | 205 | 263 | 25 | 50 | 295 | 419 |
| 9. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் என்.ஈ.எஸ். | — | — | 8 | 1 | — | — | 19 | 102 | — | — | 32 | 106 |
| 10. மொத்தம் | 52 | 37 | 0 | 17 | 1302 | 771 | 1190 | 896 | 1625 | 1041 | 1656 | 1464 |



Appropriate Technology Services
121, POINT-- C ROAD
NALLUR, -- -NA
No.____
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பா. பொ. பொ. கமினுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்ட கைத்தொழில் நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடு 1978—1981

| இனம் | கைச்சாத்தான ஒப்பந்தங்கள் நிறுவனங்களின் தொகை | | | | வெளிநாட்டு முதலீடு (மில்லியன் ரூபா) | | | | மொத்த முதலீடு (மில்லியன் ரூபா) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 78 | 79 | 80 | 81 | 78 | 79 | 80 | 81 | 78 | 79 | 80 | 81 |
| 1. உணவும் பானங்களும் புகையிலையும் | 1 | — | 0 | — | 2 | — | 0 | — | 5 | — | — | — |
| 2. நெசவுத்துணிகளும் உடுதுணிகளும் தோல்பொருள்களும் | 20 | 9 | 8 | 2 | 73 | 126 | 330 | 56 | 182 | 180 | 499 | 79 |
| 3. மரமும் மரப்பொருள்களும் | — | — | 1 | — | — | — | 1 | — | — | — | 2 | — |
| 4. கடதாசியும் கடதாசிப் பொருள்களும் | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| 5. இரசாயனப் பொருள்களும் பெற்றோலியமும் நிலக்கரியும் ரப்பரும் பிளாஸ்திக் பொருள்களும் | 3 | — | 3 | 2 | 22 | — | 81 | 26 | 37 | — | 124 | 43 |
| 6. உலோகமல்லாத கனிப் பொருள்கள் | — | 2 | — | 1 | — | 388 | — | 18 | — | 426 | — | 35 |
| 7. அடிப்படை உலோகப் பொருள்கள் | 1 | 1 | 4 | 2 | 9 | 8 | 382 | 12 | 9 | 13 | 492 | 23 |
| 8. வார்த்த உலோகப் பொருள்களும் போக்குவரத்துச் சாதனங்களும் | 4 | — | 8 | 1 | 16 | — | 80 | 33 | 30 | — | 118 | 42 |
| 9. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் என்.ஈ.எஸ். | — | — | 1 | 1 | — | — | 18 | 109 | — | — | 32 | 418 |
| 10. மொத்தம் | 29 | 12 | 25 | 9 | 122 | 522 | 942 | 254 | 263 | 619 | 267 | 196 |

கள் நல்ல தேர்ச்சித் திறனைக் காட்டியுள்ள ஒரேயொரு கைத்தொழில் ஆடைத் துறையாகவே இருந்தது. ஆதலால், போதிய திடசித்தத்துடன் செயற்பட்டிருந்தால், அதே வேலை வசதிகளைச் சு. வ. வலயத்துக்கு வெளியே சிருஷ்டித்திருக்க முடியும் என்று முடிவு செய்வது நியாயமற்றதாயிருக்க மாட்டாது. உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களின் பேச்சாளர் ஒருவர் கூறியபடி, சு. வ. வலயத்துக்கு வெளியே அதைவிட அதிகமான வேலைவசதிகளைக்கூட வழங்கியிருக்க முடியும்.

வேலை நிலைமைகளைப் பொறுத்தவரை, நல்லதும் கெட்டதும் கலந்திருப்பதாகத் தோன்றுகிறது மற்றும் சு. வ. வலயங்களிலுள்ள வேலைநிலைமைகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் சு. வ. வலயத்தில் உள்ள நிலைமைகள் சற்றே நல்லனவாயிருப்பதாகத் தோன்றுகிறது. சில கம்பெனிகள் உள்நாட்டு ஆடைக் கைத்தொழில் உற்பத்தியாளர்களைவிட நல்ல வசதிகளை வழங்கி வருவதாகத் தோன்றுகிறது. ஆனால் ஆடைக் கைத்தொழில் உற்பத்தியாளர்களில் சிலர் மிட்டாய்க் கடை நடத்துவோரின் மனப்போக்குக்கு அப்பால் செல்லவில்லை. எனினும், பெரும்பாலான சு. வ. வலயங்களில் பொதுவாகக் காணப்படும் பழக்கமான சுகாதார அபாயங்கள் இங்கும் இருந்து வருகின்றன. இந்த அபாயங்களில், பெண் ஊழியர்களின் கண் பார்வை துரிதமாகச் சீர்கெடுவது, சுதந்திர வர்த்தக வலயங்களிலும் முதலாளித்துவ நாடுகளிலும் மட்டுமன்றி இந்நூற்றுண்டின் ஆரம்ப தசாப்தங்களில் இருந்துவந்த டெய்லர் முறை தயக்கமின்றி முழுமனதுடன் ஏற்கக்கொள்ளப்பட்டிருக்கும் சகல கைத்தொழில்மயமான நாடுகளிலும்கூட (சோவியத் யூனியன் உட்பட) உள்ள இறுக்கமாக நிரல்படுத்திய தொழிற்சாலை நிலைமைகளில் பொதுவாக ஏற்படும் உளவியல் ரீதியான நெருக்கல்கள் ஆகியனவும் அடங்கும்.

ஒரு பரிசீலனையின் அடிப்படையில், பெண்களுக்கு இரவு வேலை அனுமதிக்கப்பட்டிருந்த போதிலும் இரவு வேலை ஆண், பெண் ஆகிய இருபாலாரின் உடல் நலத்துக்கும் பாதகமானதென்ற ஏகோபித்த வைத்திய அபிப்பிராயம் நிச்சயமாக இருந்து வருகிறது.

வேலை வசதிகள் ஒருபுறமிருக்க சு. வ. வலயத்தின் இன்னோர் அம்சம் வெளிநாட்டுத் தொழில்நுட்பவியலின் கவர்ச்சியாகும். உயர் தொழில்நுட்ப முறைகள் கையாளப்படும் ஒரு சில கைத்தொழில்களை இதுவரை வலயத்துக்குள் வந்துள்ளன. வேற்றிடங்களில் ஏறக்குறைய ஒரு தசாப்தத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திர வர்த்தக வலயங்களில் மின்னணுவியல் (இலத்திரனியல்) இதுவரை விசேட துறையாக விளங்கி வந்துள்ளது. எனினும், இத்தகைய இடங்களில்கூட தொழில்நுட்ப முறைகளின் இடமாற்றம் பெருமளவுக்கு எந்திரப் பகுதிகளை ஒன்று சேர்க்கும் மிகச் சாதாரண செய்முறையையும் பூதக்கண்ணாடிகளின் கீழ் கூறுகளை உற்பத்தி செய்யும் முறையையும் மாறுவதாகவே இருந்து வந்திருக்கிறது. ஒரு கைத்தொழிலின் வடிவமைப்பிலோ அல்லது முழு உற்பத்தி முறையிலோ கையாளப்படும் தொழில்நுட்ப உத்திகள் அபூர்வமாகவே இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளன.

இது, இரண்டாவது உலக மகா யுத்தத்துக்குப் பின் கைத்தொழில்களை ஏற்றுமதித் திசைவழிப்படுத்தும் ஜப்பானிய முறைகளுக்கு எதிரிடையாகும் என்பது இங்கு மீண்டும் வற்புறுத்தப்பட வேண்டியதவசியமாகும். பிற்கூறிய முறை ஜப்பானியர்கள் தங்கள் சொந்த நிபந்தனைகளின் பேரில் தொழில்நுட்ப உத்திகளை விலைக்கு வாங்கி, அந்த உத்திகள் உதயமான அதே சந்தைகளில் அவற்றைச

சாமர்த்தியமாகச் சந்தைப்படுத்துவதை அடிப்படையாகக் கொணடது. சு. வ. வலயத்தில் நடைபெற்றுள்ள தொழில்நுட்ப முறைகளின் 'மாற்றம்' பெருமளவுக்குக குறைவான தொழில்நுட்ப முறைகள் கையாளப்படும் ஆடைத் துறையிலே நடந்துள்ளது. இத் துறையில் இலங்கைக்கு ஏற்கெனவே போதிய பாண்டித்தியம் உண்டு. ஆதலால், இவ்விஷயத்தில் இலங்கை கைக்கொண்ட உபாயம் சற்றும் தேர்திறனைக் காட்டுவதாயில்லை என்பதோடு அது அநேகமாகக் கற்றுக்குட்டிகள் செய்த தெரிவாகவும் இருநதுள்ளது. வெளிநாட்டு முதலீட்டு உபாயங்களுடன் வழக்கமாக நெருங்கிய தொடர்புள்ள ஸ்தாபனமொன்று இலங்கையின் காரியசாதனைகளைப் பற்றி வெளியிட்டுள்ள ஒரு முக்கிய ஆவணம் கூறுவதை இங்கு கவனிப்போம்:

"பா. கொ. பொ. கமிஷனின் உபாயம் அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளின் விஷயத்தில் மிதமிஞ்சிப் பாகுபாடு காட்டுவதாயிருக்கவில்லை. அல்லது பொருளாதாரத்துக்கு இன்னும் அதிகமாக உதவத் தயாராயிருந்த முதலீட்டாளர்கள் அதிக துணிவு காட்டியோரின் ஆரம்ப அனுபவங்கள் உற்றுக் கவனிப்பதற்காகப் பின்வாங்கி உள்ளனர். குறைவான பாகுபாடு காட்டும் இந்த மனநிலைக்கு இலங்கை ஒரு விலை கொடுத்துள்ளதென்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக, வெளிநாட்டு ஆடைக் கம்பெனிகள் செய்த ஏறறுமதிகளில் சில, இலங்கை ஆடைக் கம்பெனிகள் செய்திருக்ககூடிய ஏற்றுமதிகளின் செலவில் ஏறறுமதி செய்யப்பட்டிருக்கலாம். 1977 ஆம் ஆண்டில், குறிப்பாக முக்கியமான அமெரிக்கச் சநதையில் 'கோட்டா' சம்பந்தமாகச் சுதந்திரமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள இலங்கைக்குப் போதிய இடமிருந்தது. இநதக் 'கோட்டா'வைப் பயன்படுத்திக் கொள்வதில் புதிய கம்பெனிகள் (இவற்றில் பெரும்பாலும் வேற்றிடங்களில் தொழிற்சாலைகளைக் கொண்டிருந்த தொழில் முயற்சியாளர்களே அடங்கியிருந்தனர்) சிரத்தை கொண்டிருந்தன. எனினும், அவற்றின் உற்பத்தி விரிவடைந்தபோது, புதிய 'கோட்டா' கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. இந்தக் 'கோட்டா'க்கள் பா. கொ. பொ. க. பிரதேசத்தில் உள்ள பெரும்பாலும் வெளிநாட்டாருக்குச் சொந்தமான கம்பெனிகளுக்கும் வெளியேயுள்ள பெரும்பாலும் இலங்கையரின் கம்பெனிகளுக்குமிடையே ஐம்பதுக்கைம்பது என்ற அடிப்படையில் பகிரப்பட்டன. பா. கொ. பொ. க. பகுதியிலுள்ள கம்பெனிகள் குறிப்பான ஏற்றுமதிக் கட்டளைகள் சம்பந்தமாக விலையைக் குறைத்து, இலங்கையரின் கம்பெனிகளுக்குப் பாதகம் இழைத்தன. இது புதிய ஆடை உற்பத்தி முயற்சிகளுக்கு அங்கீகாரம் வழங்குவது சம்பந்தமாக நன்காராய்ந்து தெரிவு செய்யும் ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்க 1979 ஆம் ஆண்டு மத்தியில் பா. கொ. பொ. கமிஷனைத் தூண்டியது. இப்பொழுது சாதாரண நிலைமைகளில் மட்டுமே புதிய ஆடைக் கைத்தொழில் திட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்படுகிறது. அதுவும் உடுதுணிக் கைத்தொழில் அமைச்சுடன் நெருக்கமாகக் கலந்தாலோசித்த பின்னரே வழங்கப்படுகிறது. எனவே, ஆடைகளின் ஏற்றுமதிகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியில் சிறிதளவு எப்படியும், பா. கொ. பொ. கமிஷனின் ஊக்கிகளின்றியே ஏற்பட்டிருக்கும் என்றே நாம் முடிவு செய்ய வேண்டும்.

"இப்பொழுது முதலாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாலும், வெளிநாட்டு முதலீடுகள் சம்பந்தமாக இலங்கையின் மனப்பாங்கு பிரசித்தமடைந்துவிட்டதாலும், பா. கொ. பொ. க. பிரதேசத்தில் புதிதாக முதலீடு செய்ய வருவோர் சம்பந்தமாக அதிகம் பாகுபாடு காட்டும் ஒரு

பா. கொ. பொ. கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்களிலும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட திட்டங்களிலும் மதிப்பிடப்பட்ட வேலை வசதிகள் 1978—1982

| இனம் | அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்களில் எதிர்பார்க்கப்பட்ட வேலை வசதிகள் (தொகைகள்) | | | | ஒப்பந்தம் செய்யப்பட்ட கைத்தொழில்களில் எதிர்பார்க்கப்பட்ட வேலை வசதிகள் (தொகைகள்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 78 | 79 | 80 | 81 | 78 | 79 | 80 | 81 |
| 1. உணவும் பானங்களும் புகையிலையும் | 56 | 351 | 1782 | 1651 | 56 | — | — | — |
| 2. நெசவுத்துணிகளும் உடுதுணிகளும் தோல்பொருள்களும் | 14301 | 7837 | 6457 | 4008 | 13662 | 2782 | 6164 | 1793 |
| 3. மரமும் மரப்பொருள்களும் | — | 44 | 780 | 47 | — | — | 250 | — |
| 4. கடதாசியும் கடதாசிப் பொருள்களும் | 222 | 163 | — | — | — | — | — | — |
| 5. இரசாயனப் பொருள்களும பெற்றோலியமும் நிலக்கரியும் ரப்பரும் பிளாஸ்திக் பொருள்களும் | 9681 | 1061 | 1512 | 315 | 740 | — | 1023 | 450 |
| 6. உலோகமல்லாத கனிப் பொருள்கள் | 832 | 157 | — | 649 | — | 655 | — | 649 |
| 7. அடிப்படை உலோகப் பொருள்கள் | 555 | 1585 | 4116 | 592 | 395 | 275 | 3520 | 175 |
| 8. வார்த்த உலோகப் பொருளகளும் போக்குவரத்துச் சாதனங்களும் | 848 | 1971 | 3282 | 2209 | 689 | — | 2702 | 273 |
| 9. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் என்.ஈ.எஸ். | — | — | 378 | 334 | — | — | 378 | 334 |
| 10. மொத்தம் | 26495 | 13169 | 18607 | 9805 | 15542 | 3719 | 13987 | 3638 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பாங்கு மேற்கொள்ளப்படுவது சாத்தியம்...”

சு. வ. வலயத்தின் மற்றும் முக்கியமான குறிக்கோள் ஏற்றுமதிச் சம்பாத்தியமாகும். ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது போல, ஏற்றுமதிச் சம்பாத்தியத்தில் மிகப் பெரிய பகுதி—அதாவது ஆடைத் துறையில் பெறப்படுவது — இப்பொறுப்பைச் சுலபமாக நிறைவேற்றியிருக்கக்கூடிய உள்நாட்டுக் கைத்தொழில் அதிபர்களின் செலவிலேயே சம்பாதிக்கப்படுகிறது. மேலும், தற்சமயம் இதுபற்றிப் போதிய ஆராய்ச்சிகள் நடத்தப்படாததால், குறிப்பாக ஆடைக் கைத்தொழில்களில் பெறுமதி கூட்டப்படும் பிரச்சினை ஒரு சங்கடமான நிலையாகவே இருந்துவருவதாகத் தோன்றுகிறது. மொத்தத்தில் இந்தப் பெறுமதி கூட்டும் விஷயம் எதிர்மறையான பலனைத் தருவதாகவே சில அதீத மதிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றன. அதேவேளையில் அது ஆக்ககாமான பலனைத் தருவதாகவும் எடுத்துக் காட்டப்படுகிறது. எனினும், இதுபற்றி மேலும்ஆராய்ச்சி செய்யப்பட வேண்டியது அவசியமாகும்.

சுருங்கக் கூறுவதாயின், சு. வ. வலயம் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டு நாலு வருடங்களுக்குப் பின், அது தனது பெறுமதியை இன்னும் நிரூபித்துக் காட்டவில்லை. நாடு அனுகூலமடைவதற்காக முதலீடுகளை இடமாற்றஞ் செய்வதே குறிக்கோள் எனில், கண்ணை மூடிக்கொண்டு சந்தர்ப்பங்களைத் திறந்துவிட்டால், அது கைகூடாதா என்று கேள்விகள் எழுப்பப்படலாம். சமூகத் துறைக்கெதிராகத் தனியார் துறைக்கு ஊக்கமளிப்பதே நோக்கமெனில், அதேவேலையை உள்நாட்டுக் கைத்தொழில் அதிபர்கள் மிகத் திறமையாகச் செய்திருக்க முடியாதா? அல்லது வெளிநாட்டு முதலீடுகளே இன்று தேவைப்படுகின்றனவென்றால், வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக் கமிட்டி அதைச் சிறப்பாகச் செய்திருக்க முடியாதா

சிங்கப்பூர், தைவான் போன்ற சுதந்திர வர்த்தக வலயங்களில் நல்ல சாதனைகளை நிலைநாட்டியுள்ளதாக வெளித் தோன்றும் நாடுகள், மேற்கத்திய நாடுகளிலும் மற்றும் சந்தைகளை அடைய ஒப்பியல் ரீதியாகக் கட்டுப்பாடற்ற வசதிகளையும் கொண்டிருந்த நாடுகளிலும் தற்போது நிலவும் பொருளாதாரப் பிணி தோன்றுவதற்கு முன்பு சு. வ. வலயங்களை ஆரம்பித்துவிட்ட நாடுகளாகும். இலங்கை போன்ற நாடுகளுக்குச் சந்தைகள் இன்னும் மூடப்படவில்லை. உதாரணமாக ஜப்பானில் அதன் எம். ஐ. ரி. ஐ. ஸ்தாபனத்தின் கீழ் செய்யப்படுவதுபோல், தைரியமாகவும் சுறுசுறுப்பாகவும் உறுதியான அறிவுடனும் சந்தைகளைப் பிடிக்க முயற்சிகளை மேற்கொண்டால். சந்தைகளை அடையக்கூடிய சாத்தியக்கூறுகள் உண்டு.



இலங்கையில் பெரும் முதலீடு செய்துள்ளவர்கள் உயர் தொழில் நுட்பவியலைக் கொண்ட பல்தேசியக் கம்பெனிகளல்ல; ஆனால் இங்கு கிடைக்கக் கூடியதாயுள்ள ‘கோட்டாக்’களைப் பயன்படுத்த வரும் ஹொங்கொங், தைவான் ஆகிய நாடுகளும் மற்றும் கம்பெனிகளுமாகும். ‘கோட்டா’ காரணங்களுக்காகவே மற்றும் நாடுகளைச் சேர்ந்த கைத்தொழில் அதிபர்கள் இங்கு வந்திருக்கலாம்.

நாம் முகவுரையில் குறிப்பிட்டது போல, சுதந்திர வர்த்தக வலயம் பற்றிய இந்த விசேஷ அறிக்கை ஒரு பூர்வாங்க அறிக்கையேயாகும். இது துண்டுதுண்டாய்ச் சேர்த்ததாகக்கூடக் காணப்படுகிறது. கிடைக்கக்கூடியதாயுள்ள புள்ளி விவரங்கள் போதாதனவாயிருப்பது இதற்கு ஓரளவு காரணமாகும். இந்த அறிக்கையில் நாங்கள் பதிலளிக்க முயலாத சுவாரஸ்யமான கேள்விகளும் இருக்கின்றன. பதிவேட்டில் குறிக்கப்படுவதற்காக அவற்றை இங்கு தருகிறோம்:

சு. வ. வலயத்தின் கூட்டுமுயற்சிகளில் செய்யப்படும் முதலீடுகளின் உள்நாட்டுக் கூறு சமூகத் துறையிலிருந்துதான் வரவேண்டுமா? சுதந்திர வர்த்தக வலயத்துக்கு ஓர் உதாரணமாக உள்நாட்டுப் பத்திரிகைகளில் அடிக்கடி எடுத்துக் காட்டப்படும் சீனாவில் உள்ளது போல், தனியார் துறையிலிருந்து வரக்கூடாதா? தற்போது மேற்கு நாடுகளில் நிலவும் வர்த்தக மந்தம் தோற்றுவித்துள்ள ஏற்றுமதி நோக்குள்ள கைத்தொழில் முயற்சிகளிலிருந்து நாம் கற்கவேண்டிய படிப்பினைகளும் இங்கு விவரமாக ஆராயப்படவில்லை. போலந்தில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார — சமூகப் பிரச்சினைகள் இதைத் தத்ரூபமாகத் திருஷ்டாந்தப்படுத்துகின்றன. சுதந்திர வர்த்தக வலயம் இலங்கையில் உள்ள உருவத்தில் நாட்டின் இறைமையை மீறுகிறதா? என்பதைப்பற்றிச் சில வட்டாரங்களில் எழுப்பப்பட்டுள்ள அரசியலமைப்பைப் பொறுத்த காரணிகளையும் நாம் ஆராயவில்லை. இப்பிரச்சினைகளில் சில இந்த அறிக்கையின் நோக்கத்துக்கு அப்பாற்பட்டவை; அத்துடன், அறிக்கைக்கு நாம் ஒதுக்கியுள்ள இடத்துக்குள் அவற்றை ஆராய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா. கொ. பொ. கமிஷனுக்காக வேலையும் பயிற்சியும்

எஸ்.பி. விஜேநாயக்க (சிரேஷ்ட முகாமையாளர் - ஆளணி, பா. கொ. பொ. க.

1981ஆம் ஆண்டில் புதிதாக நியமிக்கப்பட்ட கமிஷனின் (பாரிய கொழுபபு பொருளாதார ஆணைக் குழு) பிரதம கடமைகளில் ஒன்று, அதன் முதலாவது சுதந்திர வர்த்தக வலயத்தை ஸ்தாபிப்பதற்காக கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு எதிரில் ஏறக்குறைய 500 ஏக்கர் காணியைப் பெறுவதாயிருந்தது. மின்சாரம், நீர் விநியோகம், கழிகான்கள், தந்திப் போக்குவரத்து, சாலைகள் முதலியன போன்ற அத்தியாவசிய வசதிகளைக் கொண்ட ஒரு கைத்தொழில் பேட்டையாக இக்காணியை மாற்றும் நோக்கத்துடன், அதைப் பண்படுத்தும் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தபோது, கமிஷன் 1978ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்கும் நாளது வரைக்குமிடையேயுள்ள காலத்தில் 5,150,983 மில்லியன் ரூபா மொத்த முதலீடு சம்பந்தப்பட்ட 151 திட்டங்களை அங்கீகரித்துள்ளது. இத் திட்டங்களில் ஏறக்குறைய 61,000 பேருக்கு வேலை வாய்ப்புகள் உண்டு. இவற்றில் 37 திட்டங்கள் நூற்றுக்கு நூறு வெளிநாட்டவருக்குச் சொந்தம். அவை வெளிநாட்டு நாணயத்தில் ஏறக்குறைய 2,100 மில்லியன் ரூபா முதலீட்டை நாட்டுக்குள் கொண்டுவருகின்றன. 151 திட்டங்களில் எஞ்சியவை உள்நாட்டு உடனுழைப்புடன் கட்டுண்டிருக்கின்றன. ஒப்பந்தங்களைக் கைச்சாத்திட்டுள்ள 82 திட்டங்களில் 47 திட்டங்கள் வர்த்தக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. 1982ஆம் ஆண்டு மே மாதத்தில் இருந்தவாறு, 22,000 பேருக்கு அவை வேலைகளை வழங்கியுள்ளன.

இதுவரை கட்டுநாயக்காவிலுள்ள சுதந்திர வர்த்தக வலயத்தில் முதலீடு செய்துள்ள நாடுகளில், சிங்கப்பூர், ஹொங்கொங், கொரியா, தைவான், அமெரிக்கா, பிரிட்டன், நோர்வே, இந்தியா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி ஆகியன சிலவாகும். முற்றிலும் ஏற்றுமதிச் சந்தைக்காக இம் முயற்சிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களில் கார்டிகன் (முன்திறப்புக் கம்பளி மேற்சட்டை) போன்ற பின்னல் உடைகள், கால்மேசுகள், மேலிழுவைக் கம்பளியணிகள் ((புல்—ஓவர்), உட்படத் தைத்த உடைகள், மீன்பிடி உபகரணங்கள், பருத்தியாலான கையுறைகள், உணவுக் கலவைக் கருவிகள் தலைமயிர் உலர்த்திகள், மரத்தாலான விளையாட்டுச் சாமான்கள், பொலிபுரொப்ளிறீன், தேயிலைப் பைகள், ரப்பரினாலாய பொருள்கள், தூரிகைகள் முதலியன அடங்கும். மின்னணுவியல் (இலத்திரனியல்) கைத்தொழில் அமைந்துள்ள இடம் மிகவும் பெருமைப்படத்தக்க பகுதியாகும். கமிஷன் ஆரம்பத்திலிருந்தே தனது கவனத்தை இதில் செலுத்தியுள்ளது. வர்த்தக வலயத்தில் தங்களுடைய வசதிகளை நிறுவ உலகிலுள்ள பெரிய மின்னணுவியல் கம்பெனிகள் விண்ணப்பித்துள்ளன. இத்துறையிலுள்ள ஒரு பெரிய உற்பத்தி நிறுவனம் அடுத்த சில மாதங்களில் கட்டுநாயக்காவில் தனது தொழிற்சாலையை அமைக்கவிருக்கிறது. இதில் 2000 பேருக்கு மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பிருக்கும். மட்டிங் கம்பளங்கள், பதப்படுத்திய உணவு, தள ஓடுகள், குடைகள், பைசிக்கிள்கள், நீர்ப்பாசன பம்புகள் கொண்டையணிகள், இரசாயனப் பொருள்கள், நகைகள் முதலியன போன்ற பொருள்களின் உற்பத்தியில் சம்பந்தப்பட்டுள்ள மேலும் அநேக நிறுவனங்கள் கூடிய விரைவில் உற்பத்தி வரிசையில் சேரவிருக்கின்றன. பியகமவில் இரண்டாவது முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தை அமைக்கவும் கமிஷன் நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந் நோக்கத்துக்காக ஏறக்குறைய 450 ஏக்கர் காணி ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. புதிய வலயத்தின் பொது உள்ளமைப்பை நிர்மாணிப்பதில் அக்கறை கொண்ட காணி பண்படுத்துவோருடன் பா. கொ. பொ. கமிஷன் பேச்சுவார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்றகிது. கனகர கைத்தொழில்களையும் பெருமளவில் நீர் தேவைப்படும் கைத்தொழில்களையும் வளர்க்கும் நோக்கத்துடன் பியகம வலயம் களனியாற்றுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ளது.

வலயத்தில் இம் முயற்சிகள் அமைக்கப்படுவதுடன் 1981 டிசம்பர் முடிவுக்கு முன்பு 20,000 பேருக்கு மேற்பட்டோர் நேரடி வேலைகளில் அமர்ந்திருப்பார்களென்று பா. கொ. பொ. கமிஷன் எதிர்பார்த்தது. 1982ஆம் ஆண்டு முடிவில் நேரடி வேலையிலிருப்போரின் தொகை ஏறக் குறைய 35 000 ஆக இருக்குமென்றும், 1983ஆம் ஆண்டு முடிவில் இவர்களின் தொகை 50,000க்கு மேலிருக்குமென்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

உற்பத்தி அணியிலுள்ள தொழிற்சாலைகளில் நேரடியாக வேலைக்கமர்வதற்கான மேற்சொன்ன வழிகள் ஒருபுறமிருக்க, கட்டடங்கட்டும் துறையில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் மறைமுகமாக வேலை பெறுவதற்கான வழிகளையும் வலயம் திறந்துவிட்டுள்ளது. இதனால் கொத்தர்கள், தச்சர்கள், குழாய்க்கம்மாளர் மின்சார வேலையாட்கள், தேர்ச்சியற்ற தொழிலாளர் போன்றவர்களுக்குப் பெரும் கிராக்கி தோன்றியுள்ளது.

மின் வேலையாட்கள், பொறியியலாளர் (மெக்கானிக்), இயந்திர வேலையாட்கள், தச்சர்கள், கொத்தர்கள், சாரதிகள், பொருத்துநர்கள் போன்ற சாதாரண தேர்ச்சியுள்ளவர்களைத் தவிர, வலய முயற்சிகளுக்குத் தேவையான விசேடித்த தேர்ச்சி பெற்றோர் பிரதானமாக இத்தகைய நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் நிறைவுப் பொருள்களின் தன்மையைப் பொறுத்தே தேவைப்படுவர். உற்பத்தி அணி சம்பந்தமாகத் தேவைப்படும் தையல் எந்திர இயக்குநர்கள், துணி வெட்டுவோர், வடிவமைப்பாளர் தரக்கட்டுப்பாட்டாளர், மேற்பார்வையாளர் முதலியோர் போன்ற தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களுக்கு மேலதிகமாக, ஆட்கள் வேலைக்குவரும் வேளையைக் குறித்துவைப்போர், இறக்குமதி—ஏற்றுமதி வேலைகளில் அனுபவமுள்ள இலிகிதர்கள், சம்பளப் பட்டியல் குமாஸ்தாக்கள், பண்டசாலை காப்போர், ஆங்கில சுருக்கெழுத்தாளர், ஆங்கில தட்டச்செழுத்தாளர் முதலியோர் போன்ற எழுது வினைஞர்களுக்கும் இந் நிறுவனங்களில் பெரும் கிராக்கி இருந்து வருகிறது. இப் பகுதியில் வேலை தேடிவருவோருக்கு இருக்கவேண்டிய ஓர் அத்தியாவசியத் தகுதி என்னவென்றால், ஆங்கில மொழியில் உயர் தேர்ச்சி பெற்றிருத்தலாகும்.

குடியிருப்பு — போக்குவரத்து வசதிகளையொட்டிய பிரச்சினைகள் இருந்துவருவதை முன்னிட்டு, கடந்த காலத்தில் வலய முயற்சிகளில் வேலை செய்வதற்குத் திரட்டப்பட்ட ஆட்களில் பெரும்பாலோர் கட்டுநாயக்காவுக்குப் பக்கத்திலுள்ள பகுதிகளிலிருந்தே திரட்டப்பட்டுள்ளனர். கமிஷன் தனது அதிகாரப் பகுதிக்கு வெளியே லைசென்ஸ் பெற்ற திட்டங்களின் உருவில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்கு உதவியாகச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. ஆனால் இத்தகைய பகுதிகளில் குறைந்தபட்ச உள்ளமைப்பு வசதிகள் இருத்தல் வேண்டும் என்பது ஒரு நிபந்தனை. பா. கொ. பொ. க. சட்டத்தில் இத் திருத்தம் செய்யப்பட்டதன் நோக்கம், வேலை வசதிகளுக்காக அதிகமதிகமான வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை உண்டாக்குவதில் வர்த்தக வலயக் கருதுகோளின் நன்மைகளை நாட்டுக்குள்ளேயிருக்கும் மற்றும் பகுதிகளும் அனுபவிக்கச் செய்வதாகும். இத்தகைய லைசென்ஸ் பெற்ற திட்டங்கள் மூன்று ஏற்கெனவே களுத்துறை, ஹோமகம, நாத்தாண்டி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

வேலை வங்கி

முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்காக, பா. கொ. பொ. கமிஷனுடன் ஒரு தொழில் நிறுவனம் கைச்சாத்திடும் ஒப்பந்தத்தின்படி, கமிஷனில் பதிவு செய்யப்பட்டுள்ள ஆட்களையே அத்தொழில் நிறுவனம் வேலைக்கமர்த்தவேண்டும் என்பது ஓர் அத்தியாவசிய நிபந்தனை. தொழில் நிறுவனம் சலிப்பை உண்டாக்கக் கூடிய விளம்பரம் செய்திட்டத்தின் தொல்லைக்கு உள்ளாகாமல் ஆகக் குறுகிய காலத்துக்குள்ளே தேவைப்படும் சரியான வகை வினைத்திறன்களுள்ள ஆட்களைப் பெற அத் தொழில் நிறுவனத்துக்கு உதவி செய்வதும், அதே வேளையில் வேலை தேடுவோருக்கு அவர்கள் பெற்றுள்ள கல்விக்கும் அவர்களுடைய உளச் சார்புக்கும் தாம் தேடும் வேலை சம்பந்தமாக அவர்களுக்குள்ள அறிவுக்கும் ஏற்ற வேலைகளைப் பெற்றுக் கொடுத்து, நாட்டின் நலன்களைக் கவனித்துக் கொள்வதுமே இந்த நிபந்தனையின் முக்கிய நோக்கம். வலயத்திலுள்ள தொழில் நிறுவனங்களுக்கு அவர்களுடைய தேவைகளின் அடிப்படையில் ஆட்களைத் திரட்டித் தரும் வேலைகளைக் கவனிப்பதற்காக, பா. கொ. பொ. கமிஷனில் ஒரு விசேஷ நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது ஒரு வேலை வங்கியாகப் பணியாற்றி வருகிறது. இவ் வேலை வங்கி விண்ணப்பதாரர்களை அவர்கள் ஆணு அல்லது பெண்ணு, அவர்களுடைய வயது, அவர்கள் பெற்றுள்ள கல்வி, அவர்கள் பெற்றுள்ள பயிற்சி ஆகியவற்றிற்கொப்ப வகைப்படுத்தி வைக்கின்றது. இப் பகுதியில் பொருத்தமான தகவல்கள் தொடர்ந்து நாளதுவரையானதாகப் புதுப்பிக்கப்படுகின்றன. இந்த வேலை வங்கியில் தங்களைப் பதிவு செய்து கொண்டுள்ளவர்களில் பெரும்பாலோர் 18 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்ட, பாடசாலைப் படிப்பை முடித்து வெளியேறிய இளைஞர்களாவர்.

தேர்ச்சிபெற்ற தொழிலாளர்கள் மத்திய கிழக்குக்குப்போய் விட்டதனாலும் புதிய வினைத்திறனாளர்களுக்குக் கிராக்கி அதிகரித்துள்ளதனாலும் சில குறிப்பிட்ட துறைகளில் பயிற்சி வசதிகளை விரிவாக்க வேண்டிய அவசரத் தேவை தோன்றியுள்ளது. வலயத்திலுள்ள தொழில் முயற்சிகளில் தேர்ச்சி பெற்றோருக்குரிய கோரிக்கை அதிகரித்துள்ளதனால் அதைப் பூர்த்தி செய்வதற்காகக் கீழ்க்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(அ) கட்டுநாயக்காவில் பயிற்சி நிலையம்— இது 8 மில்லியன் ரூபா செலவில் ஏறக்குறைய 15,000 சதுர அடி கொண்ட தள இடவசதியுடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந் நிலையம் தேசியப் பயிலுநர் சபையினதும் பாரிய கொழும்பு பொருளாதாரக் கமிஷனினதும் ஒரு கூட்டு முயற்சியாகச் செயல்படுகிறது. நடுத்தர தொழில்நுட்பவியலாளர்களுக்கு அடிப்படைப் பயிற்சி வசதிகளை வழங்குவதற்காக இக் கட்டடத்தின் ஒரு பிரிவில் நிரந்தர வேலைக்களமொன்று அமைக்கப்பட்டுவருகிறது. இக்கட்டடத்தின் மற்றப் பிரிவு, வலயத்திலுள்ள தொழில் நிறுவனங்களின் தொழிற்சாலைகள் கட்டப்படும் வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது குறுகிய காலப் பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்காக அந் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. 1981ஆம் வருடம் பெப்ரவரி மாதத்தில் இப் பிரிவு திறக்கப்பட்டது. அது திறக்கப்பட்ட காலத்திலிருந்தே அதற்குப் புதிய முதலீட்டாளர்களிடையே பெரும் கோரிக்கை இருந்து வந்துள்ளது.

(ஆ) வெளிநாட்டு உதவியுடன் கட்டுநாயக்காவில் ஒரு பல் தொழில்நுட்பப் பாடசாலையை அமைக்கத் தேசியப் பயிலுநர் சபை ஏற்பாடுகளைச் செய்துவருகிறது; இது மேற்சொன்ன பயிற்சி நிலையத்தையடுத்துள்ள வளவில் அமைக்கப்படும்.

(இ) ஆடை உற்பத்திக் கைத்தொழில்களில் எழும் தேவைகள் கீழ்க்கண்ட ஏற்பாடுகளால் தக்கவாறு பூர்த்தி செய்யப்படுகின்றன.

(1) கொச்சிக்கடையிலுள்ள தேசியப் பயிலுநர் சபையின் பயிற்சி நிலையம். இந் நிலையத்தில் ஏறக்குறைய 200 பயிற்சியாளர்கள் ஒரே சமயத்தில் பயிற்சிபெற இடவசதியுண்டு;

(11) கட்டானையிலுள்ள ஜுக்கி இயந்திரப் பயிற்சி நிலையம் உடுதுணிக் கைத்தொழில் அமைச்சினுல் நடத்தப்படுகிறது.

(111) சிறிய அளவிலான தனியார்துறை ஸ்தாபனங்கள்;

(1v) உடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிட்டத்தட்ட எல்லாத் தொழில் நிறுவனங்களும் ஏற்படுத்தியுள்ள உட்சேவைப் பயிற்சித் திட்டங்கள்;

(v) ஜா-எலையிலுள்ள தொழில் திணைக்களத்தின் பயிற்சி நிலையம்;

(ஈ) தேவையான துறைகளில் பயிலுநர்களை மேலதிகமாகச் சேர்த்துக் கொள்ள, தேசியப் பயிலுநர் சபையுடன் செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள்;

(உ) பற்றாக்குறைகளைச் சமாளிப்பதற்காகக் கற்கை நெறிகளைத் திருத்தியமைத்துக் கொள்ளும்படி தொழில்நுட்பக் கல்லூரிகளையும் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரிகளையும் கேட்டுக் கொள்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கிடைக்கும் பயிற்சி வசதிகள் அறவே போதாதிருக்கும் ஒரு துறை, மின்னணுவியல் (இலத்திரனியல்) துறையாகும். இத்துறையில் உற்பத்தியாளர்கள் காட்டியுள்ள சிரத்தையை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, விரைவில் கட்டங் கட்டமாக பா. கொ. பொ. கமிஷனுக்கு இயக்குநர் மட்டத்தில் ஏறக்குறைய 5,000 பேரும் (பிரதானமாகப் பெண்கள்) தொழில்நுட்பவியலாளர் மட்டத்தில் இத்தொகையில் சுமார் 5 விகிதத்தினரும் (250 பேர்) தேவைப்படுவர். ஆதலால், இந்த மேலதிகக் கோரிக்கை (தேவை)யைப் பூர்த்தி செய்யக் கூடிய விகிதத்தில் தொழில்நுட்பவியலாளர் மட்டத்திலும் கைவினைஞர் மட்டத்தி பயிற்சிக்குச் சேர்க்கப்படும் பயிலுநர்களின் தொகையை அதிகரிக்கவேண்டியதவசியமாகும். தேவையான பின்னணி அறிவுடனும் அனுபவத்தோடும் எழுதுவினைஞர் தரத்திலும் அதனுடன் தொடர்புள்ள தரத்திலும் அதிகமானோருக்குப் பலத்த கோரிக்கை இருந்து வருகிறது. பா. கொ. பொ. க. வேலை வங்கியில் நூற்கல்வித் தகைமையுள்ளோர் பெருந்தொகையில் கிடைக்கக் கூடியதாயிருந்தபோதிலும், இவ் விண்ணப்பதார்களில் பெரும்பாலோருக்கு ஆங்கில மொழியில் குறைந்த தேர்ச்சியே உள்ளதன் காரணமாக, இவர்கள் எழுதுவினைஞர் மட்டத்தில் வலயத் தொழில் நிறுவனங்களில் வேலை பார்க்கப் பொருத்தமற்றவர்களாயிருக்கிறுர்கள். ஆதலால், ஆங்கில மொழியில் தேவையான அளவுக்குத் தேர்ச்சியடைவதற்காக, ஜி. சி. ஈ. (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தி பெற்றுள்ளவர்களுக்குக் கட்டுநாயக்காவுக்கும் பியகமவுக்கும் அருகிலுள்ள இடங்களில் ஆங்கிலமொழிப் பயிற்சி வகுப்புக்களை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வது விரும்பத்தக்கது.

# சுதந்திர வர்த்தகவலயத் தொழிலாளர் பற்றிய ஒரு சமூக வரைவு

சுதந்திர வர்த்தக வலயம் உருவாக்கப்பட்டதற்கான முக்கிய காரணங்களிலொன்று அதன் வேலைவாய்ப்பளிக்கும் வளமாகும். பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட புள்ளிவிவரங்களின் படி 1981ம் ஆண்டு டிசம்பர் இறுதி வரை மொத்தம் 19,921 பேர் இந்த வலயத்தில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். உத்தேச அல்லது திட்டமிடப்பட்ட வேலைவாய்ப்பு எண்ணிக்கையை விட இது குறைவாக இருந்தாலும் எண்ணிக்கையில் கணிசமானதே. சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளோரின் சமூக வரைவு பற்றியும் இதிலிருந்து வரக்கூடிய முக்கியத்துவம் பற்றியும் அறிய இங்கு ஆய்வு முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வலயத்தில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ள தொழிலாளர்கள் பற்றிய சமூக, பொருளாதாரத் தரவுகள் போதியளவு கிடைக்காத காரணத்தால் இந்த வரைவு ஒரு சுருக்கமாக அமையலாமென ஆரம்பத்திலேயே கூறவேண்டியுள்ளது. உத்தியோகபூர்வமான புள்ளிவிவரங்களின் உதவியுடனும், சுதந்திர வர்த்தக வலயம் அதன் தொழிலாளர் ஆகியவை சம்பந்தமான சமூக ஆய்விலும் சமூக நடவடிக்கைத் திட்டங்களிலும் அக்கறைகொண்டோர் நடத்திய சில ஆராய்வுகளையும் துணையாகக் கொண்டே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுதந்திர வர்த்தக வலயத்தில் பெண் தொழிலாளர்களே எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது மிக முக்கியமான அம்சங்களிலொன்றாகும். கட்டுநாயக்காவிலுள்ள இந்த வலயத்தில் வேலை செய்யும் தொழிலாளரில் 85 சதவீதத்துக்கு மேலானோர் பெண்களாவர். மூன்றாம் உலக நாடுகளிலுள்ள, குறிப்பாக ஆசியாவிலுள்ள சகல சுதந்திர வர்த்தக வலயங்களிலும் இதுவே வழமையான அம்சமாகும். தொழிலாளர்களில் கணிசமான அளவு பெண்களைச் சேர்த்துக்கொள்ளும் குணம்சம் உருவாகி உள்ளது இந்த அம்சத்தின் முக்கியத்துவம் பற்றி ஆராய முனைவதற்கு முன்னர், ஆசியாவிலுள்ள பெரும்பாலான மற்றைய சுதந்திர வர்த்தக வலயங்களில் பொதுவாகவும் இலங்கை சுதந்திர வர்த்தக வலயத்தின் குணம்சங்களாகவும் விளங்கும் மற்றிரு விடயங்களைப் பற்றிக் குறிப்பிடுவது பயனுள்ளதாகும். தொழிலாளர்களின் குறிப்பாகப் பெண்களின் வயது திருமணமானவர்களா இல்லையா என்ற அவர்களின் சமூக அந்தஸ்து ஆகியவையே இந்த இரண்டுமாகும்.

ஒரு கணிசமான தொகையினர் கிட்டத்தட்ட 75, 80 சதவீதத்தினர் 25 வயதுக்குக் கீழானவர்களாக இருப்பது இங்குள்ள உழைப்புச் சக்தியின் வயது அமைப்புப் பற்றிக் குறிப்பிடத்தக்க விடயமாகும். கிட்டத்தட்டச் சகலரும் தனித்தவர்களாகவோ அல்லது திருமணம் புரியாதவர்களாகவோ இருப்பது அதேயளவு முக்கியத்துவத்துடன் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும். மூன்றாம் உலக நாடுகளின் சுதந்திர வர்த்தக வலயங்களை நிரப்பும் புதிய தொழில்துறைத் தொழிலாளி வர்க்கமாக இளம் பெண்களைச் சிலர் வர்ணிப்பதற்கு இத்தகைய குணம்சங்களின் கூட்டே தூண்டியுள்ளது. மலிவான மூன்றாம் உலகநாட்டு உழைப்புச் சக்தியிலேயே மிகவும் மலிவானதாகப் பெண்கள் உள்ளார்களென்பது பொருளாதார தாக்கம் போல் தோற்றுகிறது. மூன்றாம் உலக நாடுகளில் இருக்கும் இளம் பெண்களின் பெருந்தொகை எண்ணிக்கையும் வேலை வேண்டுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பும் அவர்களை எந்த நேரமும் வேலைக்கு அழைக்கக்கூடிய பெரும் தொழில்துறைத் தயார் நிலைப் படையாக மாற்றியுள்ளது.

இதுவே வெளிப்படையான முக்கியத்துவமாகவுள்ளது. அதே வேளையில் இலங்கை சுதந்திர வர்த்தக வலயத்தில் சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வும் மற்றும் சில ஆசிய நாடுகளில் மகளிர் குழுக்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் ஆண்களுக்குப் பதிலாக பெண்கள் ஏன் விரும்பப்படுகிறார்களென்பதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிட்டுள்ளது. ஆசிய நாட்டுப் பெண்களிடையேயுள்ள சமூக, கலாசாரச் சூழ்நிலைகள் அவர்களைப் பணிவானவர்களாக ஆக்கியுள்ளது. அதேவேளை பெருமளவிலான எதிர்ப்பு எதுவுமின்றி ஊக்கமற்ற, சோர்வான தொழில் ஊக்குவிப்பு வேலைகளைச் செய்யக் கூடியவர்களாகவும் அவர்கள் உள்ளார்கள். இந்த ஆராய்வுகள் புலப்படுத்தும் ஒரு விடயம் இதுவாகும். இதே வேலை நிலைகளுக்கு ஆண்கள் ஆட்படுத்தப்பட்டால் அவர்கள் பொறுமையற்றவர்களாக, கிளர்ச்சியாளர்களாகத் தமது எதிர்ப்புகளை தொழிற்சங்க இயக்கங்கள் போன்றவற்றினூடாக மேற்கொள்ளக் கூடியவர்களாக இருப்பார்களெனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இளம் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் பொருளாதார தர்க்கத்தைவிட இரண்டாவது, மூன்றாவது அம்சங்களும் அம்பலப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான சுதந்திர வர்த்தக வலயங்களின் குணாதிசயமாக விளங்கும் தொழில் ஊக்குவிப்பு வேலைகளுக்கு மிகவும் உகந்தவர்களாகப் பெண்கள் உள்ளனர். இவர்களை அந்தத் தன்மைக்கு மாற்றும் சமூக, கலாசார சூழ்நிலைகள் இரண்டாவது அம்சமாகும். கடந்த சில தசாப்தங்களாக அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு மற்றைய நாடுகளிலிருந்து தொழிலாளர்களை இறக்குமதி செய்வதன் மூலம் உழைப்புச் சக்தி இறக்குமதி செய்யப்பட்டு வந்தது. இதற்குப் பதிலாக இப்போது ஆசியாவிலுள்ள சுதந்திர வர்த்தக வலயங்களில் சர்வதேச மூலதனம் முதலிடப்படுவதன் மூலம் மூலதன ஏற்றுமதி இடம்பெறுகிறது. உற்பத்தித் தன்மையின் காரணத்தால் அல்லது சிறு கூறுகளான மூலதனத் தன்மையின் காரணத்தால் சில தொழிற்சாலைகள் இயங்க முடியாமலிருப்பதே இவ்வாறு மூலதன ஏற்றுமதி இப்போது இடம்பெறுவதற்கான ஒரு முக்கிய காரணியாகும். இயங்க முடியாமை என்பதன் அர்த்தம் அபிவிருத்தியடைந்த நாடுகளில் மிகவும் செலவுமிக்கதான கைவினைத் தொழிலாளரைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்துவதால் இலாப விகிதாசாரத்தில் வீழ்ச்சி ஏற்படுகிறது என்பதாகும். இதனை மூலதனமிடுவோர் விரும்ப மாட்டார்கள். இதன் விளைவாகவே சுதந்திர வர்த்தக வலயங்களில் இத்தன்மையதான தொழிற்றுறைகள் நிர்மாணிக்கப்படுகின்றன. ஆடை, எலக்ரோனிக் தொழிற்சாலைகள் உருவாக்கப்படுவது இதற்கு அருமையான உதாரணங்களாகும். சுதந்திர வர்த்தக வலயங்களில் தொழில் ஊக்குப்புத் தொழில் துறைகள் மட்டுமே முதலிடுமானால் அவை மலிவான, சுறுசுறுப்பற்ற, புறம்பான தொழில் ஊக்குவிப்பு வேலைக்கு உகந்த தன்மையானவற்றையே தேர்ந்தெடுக்கும்.

ஆசியப் பெண்களின் பணிவான குணம்சம் மூன்றாவது தன்மையாகும். பால் ரீதியாகப் பல நூற்றாண்டுகளாகவே பெண்கள் அடக்கப்பட்டு வந்த பாங்கும் ஆண்பால், பெண்பால் என்ற தொழில் பாகுபாட்டால் வீட்டு மற்றும் விவசாய வேலைகளில் அவள் வகித்து வந்த பாத்திரமும் அடங்கிப் போகின்ற பணிவான ஆளுமையை ஏற்படுத்தக்கூடிய சமூக, கலாசார அமைப்புக்கு அவளைத் தள்ளியது. சர்வதேச முதலீட்டாளர்களுக்கு இது கவர்ச்சிகரமானதாக இருந்தது. ஏனெனில் பெரும்பாலான சுதந்திர வர்த்தக வலயத் தொழில் துறைகள் விரும்பும் சலிப்பான சுறுசுறுப்பற்ற தொழில் ஊக்கு

விப்பு வேலைகளைப் பொறுத்தவரை இத்தகைய பெண்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதென்பது பெரும்பாலும் நடைபெறாத ஒன்றே.

உண்மையில் கடந்த பத்து ஆண்டுகளில் மேற்கு ஐரோப்பிய மூலதனம் அந்நியத் தொழிலாளர்களைக் கொண்டுவரும் உழைப்புச் சக்தி இறக்குமதிக்குப் பயன்படுத்தப்பட்டபோது தொழில் ஸ்தாபனங்களே இல்லாத நிலையில் வெளிநாடுகளிலிருந்து வந்த தொழிலாளர்களின் சட்ட—அரசியல் அந்தஸ்தை உழைப்புக்கு அது பயன்படுத்தியது. இதைப் போன்றே ஆசியாவிலும் மற்றும் மூன்று முலக நாடுகளிலுமுள்ள சுதந்திர வர்த்தக வலயங்களுக்கு சர்வதேச மூலதனம் தன்னை ஏற்றுமதி செய்வதன் மூலம் இத்தகைய நாடுகளின் சமூக கலாசாரப் பெறுமதிகளைச் சுரண்டுகிறது.

உழைக்கும் அணியின் வயதமைப்பும் கலியாணமானவர்களா இல்லையா என்ற நிலையும் குறிப்பாகப் பெண்களிடையே இந்த விவகாரம் குறிப்பிடத்தக்க தன்மைகளைக் கொண்டுள்ளதென்பதை நாம் கவனித்தோம். இவர்கள் எல்லாருமே தனியானவர்களாகவும் பெரும்பாலோர் இருபத்தைந்து வயதுக்குக் குறைந்தவர்களாகவுமே காணப்படுகின்றனர். சுகாதாரச் சூழ்நிலைகள் சிறந்ததாக இருக்கும் நாட்டின் மகளிர் ஜனத்தொகைப் பகுதியிலிருந்து உழைப்பாளிகளைத் தேர்ந்தெடுத்திருப்பதே இதன் தாக்கமாகும். இளவயதுடையவர்களையும் திருமணமாகாதவர்களையும் மட்டுமே பரந்த அளவில் வேலைக்குச் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதுடன் தொழிலாளர் திருமணம் புரிவதை நிர்வாகம் விரும்பவில்லையென்பதையும் இலங்கையிலும் மற்றும் ஆசிய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. 'உழைக்கும் மனைவியர்க்கும் தாய்மார்களுக்கும் எதிராகப் பலமான கலாசார வெறுப்புணர்வு நிலவுவதை" மலேசியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்று சுட்டிக்காட்டுகிறது. அல்லாவிட்டால் "திருமணம் புரியும்பட்சத்தில் இராஜினாமாச் செய்வோமென உறுதி செய்யும் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுமாறு சில சந்தர்ப்பங்களில் தொழிற்சாலைகள் கன்னியரைக் கோருகின்றன" என்பதையும் அந்த ஆய்வு சுட்டிக்காட்டியது. இளைய திருமணமாகாத பெண்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்வதில் பெரும் ஆர்வம் காட்டப்படுவதையும் வேலையிலிருக்கும்போது அவர்கள் திருமணம் புரியாமல் இருப்பதை உத்தரவாதப்படுத்தக் கூடிய தொழிற்சாலை அமைப்புகள் இருப்பதையும் இலங்கைச் சுதந்திர வர்த்தக வலயம் பற்றிய சமீபத்திய ஆய்வொன்று உறுதிப்படுத்துகிறது போல் தோற்றுகிறது. எனினும் இலங்கையில் பெண் தொழிலாளர்கள் தாம் வேலையிலிருக்கும் போது திருமணம் புரியக் கூடாது என்பதை உறுதிப்படுத்தும் ஒப்பந்தங்களைச் செய்துகொள்ளவேண்டும் என்பதற்கான எவ்வித ஆதாரங்களையும் இலங்கைச் சுதந்திர வர்த்தக வலயம் பற்றி மேற்கொள்ளப்பட்ட எந்த ஆய்வும் கண்டுபிடிக்கவில்லை.

உழைப்புச் சக்தியின் வயது, திருமணமானவர்களா இல்லையா என்பவற்றைக் கவனிப்பதின் முக்கியத்துவம் வெறுமனே ஜனத்தொகையின் ஆரோக்கியமான பிரிவை வேலைக்குச் சேர்த்துக் கொள்வது மட்டுமல்ல; இதன் மூலம் இளமையும், தனிமையும், ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டுமே தொடர்ந்தும் வேலையிலிருப்பதையும் இது உறுதி செய்கிறது. அணிவகுத்துச் சென்று இறுதியில் தூக்கியெறியப்படும் ஒருவித அணிவகுப்புப் படையாக உழைப்பாளர் சக்தியை, முதலிடப்படும் பெரும்தொகை மாற்றிவிடுகிறது. இவற்றின் மூலம் தொழிற்சாலைகளுக்கு நல்லாரோக்கியமும் வேலை செய்யும் திறமையும் கொண்ட உழைப்பாளர்கள் கிடைப்பதோடு அவர்களுக்கு குறைந்த ஒரு வேதனத்தை அளிக்கவும் வழிகிடைக்கிறது. முதலிடப்படும் தொகை அதிகமாகவிருக்கும்போது விற்று வரும் முதல் எப்போதுமே மீண்டும் முதலிடப்படுகிறது. ஆனால், அதற்கேற்ப வேதன அதிகரிப்புப் பகுதிபகுதியாகக் கிடைப்பதில்லை. இவ்வாறே தொழிலாளர் குறைந்த வேதனத்தில் வைத்துக்கொள்ளப்படுகிறார்கள். வேதனத்தைக் குறைந்த மட்டத்தில் வைத்துக் கொள்வதற்கு இது ஒரு வழியாகும். இரண்டாவதாகப் பெண்கள் திருமணமாகாமல் தனித்தவர்களாகவும் இளமையானவர்களாகவும் இருப்பதாலும் அவர்கள் பெற்றோருடனேயே வாழ்கிறார்கள். எனவே இவர்கள் உழைத்துப் பெறும் வருமானம் ஒன்றில் அவர்களின் சொந்தத் தேவைக்கோ அல்லது பெரும்பாலும் குடும்ப அமைப்பின் பிரதி வருமானமாகவோதான் இருக்கிறது. இதுவும் குறைந்த வேதனம் கிடைக்க வழிவகுக்கிறது. ஏனெனில் திருமணமான தொழிலாளரைப் பொறுத்தவரை அவர்கள் வளர்ந்துவரும் குடும்பத்தைப் பராமரிக்க வேண்டியவர்களாக இருப்பார்கள். அத்துடன் இவர்களுக்கு பிரசவ வசதிகளையும் சலுகைகளையும் நிர்வாகம் அளிக்க வேண்டும். திருமணமாகாத பெண்களைப் பொறுத்தவரை இந்தப் பிரச்சினை நிர்வாகத்துக்கு இல்லை.

கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள உழைப்பாளர் அணியின் சமூக பொருளாதாரப் பின்னணி பற்றிக் கிடைத்திருக்கக் கூடிய தரவுகள், இவர்களில் பெரும்பாலோர் சமுதாயத்தில் பொருளாதார ரீதியாகப் பின்தள்ளப்பட்ட பிரிவுகளிலிருந்து வந்திருப்பதை எடுத்துக்காட்டுகின்றன. மாதாந்தம் 500 ரூபாவுக்குக் கீழ் வருமானம் பெறும் குடும்பங்களிலிருந்து பெரும்பாலான தொழிலாளர் வந்திருப்பதையே ஒன்றுக்கு மேற்பட்ட ஆய்வுகள் சுட்டிக்காட்டியுள்ளன. அதாவது 500 ரூபாவுக்குக் கீழே மாதாந்த வருமானம் பெறுபவர்கள் என்று கூறும் போது, சமகால வாழ்க்கைச் செலவைக் கணிப்பிடுகையில் வறுமைக் கோட்டின் எல்லைக்குள் இவர்களும் அடங்குகின்றனர். சமூக வர்க்கப் பின்னணி பற்றியும் சில ஆய்வுகள் அறிய முனைந்துள்ளன. உழைப்புச் சக்திகளைப் பொறுத்தவரை அதிகமாகவுள்ள சமூக வர்க்கப் பின்னணி பற்றி ஒருமித்த கருத்திருப்பதாகத் தெரியவில்லை. பல்வேறு வர்க்கங்கள் பற்றி அளிக்கப்படும் வித்தியாசமான வரைவிலக்கணங்களும் உழைப்பாளர் சக்தியைப் பல்வேறு வர்க்கத் தட்டுகளாகப் பகுப்பதற்கு வித்தியாசமான அளவீடுகள் பயன்படுத்தப்படுவதும் இதற்கு ஓரளவு காரணமாக இருக்கலாம். எனினும் கணிசமான தொழிலாளர்கள், தொழிலாளி வர்க்கப் பின்னணியைக் கொண்டவர்களாகவோ அல்லது குட்டி வர்த்தக அல்லது குட்டி நுகர்பொருள் உற்பத்திப் பின்னணியைக் கொண்டவர்களாகவோ இருப்பதாகத் தோற்றுகிறது. இந்த எல்லாக் குழுக்களுமே பொதுவாகப் பட்டினப் பின்னணியைக் கொண்டவை.

இது சுவாரஷ்யமானது. ஏனெனில் ஆசியாவிலுள்ள சில சுதந்திர வர்த்தக வலயங்களில் இந்த அம்சம் மிகவும் அதிகமாகக் காணப்படுவதில்லை. உண்மையில் உழைப்புப் பற்றிய புதிய சர்வதேசப் பிரிவுகள் தொடர்பான தமது ஆய்வுகளில் புரொபலும் மற்றவர்களும், சில ஆசிய நாடுகளிலேற்பட்ட பசுமைப் புரட்சி உபரியான கிராமிய உழைப்புச் சக்தியை விடுவித்திருக்குமெனவும் இந்தச் சக்திகள் சுதந்திர வர்த்தக வலயத்துள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்குமெனவும் வாதிடுகின்றனர். இலங்கையில் விவசாய அரங்கிலிருந்து கிராமிய மக்கள் சுதந்திர வர்த்தக வலயத்துக்கு ஒரு ஸ்திரமான தன்மையில் சென்றிருக்கிறார்களென்பதற்கு இதுகாலவரை ஆதாரம் இருந்ததாகத் தெரியவில்லை. பாரிய கொழும்புப் பிராந்தியத்துக்கு உள்ளும் சுற்றியுமுள்ள பட்டினக் குடியிருப்புகளுக்கு வெகு அண்மித்ததாகக் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயமிருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதிப் பிரதியீட்டிலிருந்து ஏற்றுமதி அபிவிருத்திக்கு மாறுதல்: ஒரு நோக்கு

பிரேமச்சந்திர அத்துக்கோரளை

அறிமுகம்

பொருளாதார அபிவிருத்திப் போக்கைப் பாதிக்கும் சகல புறச் சக்திகளுள்ளும் மிக முக்கியமானவற்றுள் அந்நிய வர்த்தகத் தன்மையும் அடங்கும். எனவே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்குப் பொருத்தமான வர்த்தகக் கொள்கை பற்றிய பொதுப் பிரச்சினை தேசிய சர்வதேச அபிவிருத்திக் கொள்கைக் கலந்துரையாடல்களில் எடுத்துக்கொள்ளப்படும் விடயமாக இருந்து வருகிறது. இறக்குமதிப் பிரதியீட்டு உபாயத்துக்கும் (உள்முகப் பார்வை) ஏற்றுமதி அபிவிருத்தி உபாயத்துக்கும் (வெளிப்புறப் பார்வை) இடையிலொன்றைத் தேர்ந்தெடுக்கும் ஒன்றாகவே இந்தப் பிரச்சினை இருந்து வந்துள்ளது.

ஏற்றுமதி உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் உள்ளூர்ப் பொருளாதார நடவடிக்கைகளை ஒப்பீட்டளவில் இலாபகரமானதாக்குவதன் மூலம் தற்போதைய இறக்குமதிக்குப் பதிலாகப் பிரதியீடான பொருட்களை உற்பத்தி செய்யக்கூடியதான உள்ளூர்ப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதே இறக்குமதிப் பிரதியீட்டு உபாயத்தின் சாராம்சமாகும். அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் இறக்குமதிகள், பெருமளவில் தொழில்துறை உற்பத்திப் பொருட்களாக இருப்பதால் இந்த உபாயம் சில வேளைகளில் “இறக்குமதிப் பிரதியீட்டுத் தொழில்துறைமயமாக்கம்” என அழைக்கப்படுகிறது. உற்பத்திப் பொருட்களின் இறக்குமதி அளவில் கட்டுப்பாடு அல்லது உயர்ந்த வரி விதித்தல் அல்லது இவையிரண்டும் மேற்கொள்ளப்படல்; முதலீட்டிலும் மத்தியதரப் பொருட்களிலும் குறைந்த வரி விதித்தல் அல்லது வரியே விதிக்காது விடல்; இறக்குமதியாகும் உதிரிப்பாகங்களை உள்ளூரில் பொருத்துவதற்குக் குறைந்த வட்டி விகிதத்தின் மூலம் மானியமளித்தல்—இலகுவாகக் கடன்பெற வழி சமைத்தல்; அந்நியச் செலாவணி அலவன்சுகளும் மற்றும் சாதகமான வரி அலவன்சுகளும்; இறக்குமதிப் பிரதியீட்டு நடவடிக்கைகளை மேலும் இலாபகரமானதாக்கக் கூடியதாக பெறுமதி அதிகரித்த செலாவணி விகிதத்தை நிலைநிறுத்தல் ஆகியவை இந்த உபாயத்தின் கீழ் பரந்த அளவில் பயன்படுத்தப்படும் கொள்கைக் கருவிகளில் அடங்குகின்றன. இறக்குமதிப் பொருட்களை உள்ளூரில் உற்பத்தி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் நடவடிக்கைகளிலும் பார்க்க வெளிநாட்டு வர்த்தகத்தினூடாக அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. ஏற்றுமதி அபிவிருத்தி உபாயத்தின் கீழ் இது செய்யப்படுகிறது. யதார்த்தமாகன ஒருமுகப்படுத்தப்பட்ட செலாவணி விகிதத்தை வைத்திருத்தல், இறக்குமதிக் கோட்டாக்களைத் தாராளமயப்படுத்தல், ஏற்றுமதி உற்பத்திக்கென இறக்குமதி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படும் பொருட்கள் மீதான சுங்கத் தீர்வை இறக்குமதி வரி ஆகியவற்றில் கழிவு, ஏற்றுமதி முயற்சியில் அந்நிய மூலதனப் பங்குபற்றலை ஊக்குவிக்க சுங்கத் தீர்வையற்ற (சுதந்திர வர்த்தக) வலயங்களை உருவாக்கல், குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி மற்றும் ஏற்றுமதிக் காப்புறுதி போன்ற மற்றும் பல்வகை ஏற்றுமதி ஊக்குவிப்புப் போன்றவை ஏற்றுமதி அபிவிருத்திக்குப் பொதுவாகக் கடைப்பிடிக்கப்படும் கொள்கைகளில் சிலவாகும்.

யுத்தத்துக்குப் பிந்திய ஆரம்ப காலகட்டங்களில் இறக்குமதிப் பிரதியீடே அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் பொருளாதார அபிவிருத்திக்கான அடிப்படை உத்தியோகபூர்வ சித்தாந்தமாக இருந்தது. இந்த உபாயத்தின் வெற்றி திருப்திகரமற்ற காரணத்தால் 1960ம் ஆண்டுகளின் ஆரம்ப கால வருடங்களில் திட்டமிட்ட முறையில் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதற்கான பரந்த அளவிலான கொள்கை மாற்றம் நிகழ்ந்தது. ஸ்பெய்ன், தாய்வான், தென் கொரியா, யூகோஸ்லாவியா, கிறீஸ், இஸ்ரவேல், போத்துக்கல் ஆகிய நாடுகளில் முதலில் இந்தக் கொள்கை மாற்றங்கள் நிகழ்ந்தன. 1960ம் ஆண்டுகளின் பிற்பகுதியில் பிரேஸில், மெக்ஸிகோ, சிங்கப்பூர் ஆகிய நாடுகளும் ஒரு குறைந்த அளவில் கொலம்பியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளும் அதே மார்க்கத்தில் கொள்கைகளை மாற்றின. 1970ம் ஆண்டுகளின்போது ஆர்ஜன்டீனா, உருகுவே, சிலி, மலேசியா, இலங்கை, டூனீசியா, மொரோக்கோ, ஹயிதி, டொமினிக்கன் குடியரசு, எகிப்து, துருக்கி, சைப்பிரஸ், மோல்டா, மொரீஷியஸ், இந்தோனேசியா மற்றும் சில மத்திய அமெரிக்கக் குடியரசுகளின் குறிப்பாகவும், மற்றும் பல நாடுகளிலும் பொருளாதார அபிவிருத்திக் கொள்கைகளில் ஏற்றுமதி ஊக்குவிப்புக்கான வெறுப்பு காணப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

இறக்குமதிப் பிரதியீட்டு உபாய வரையறைகளில் கவனம் செலுத்தி அடிக்கடி ஏற்றுமதி அபிவிருத்தி உபாயத்தின் ஒப்பீட்டு மேன்மைகளை வெளிப்படுத்தும் இந்த முக்கிய கொள்கை மாற்றத்தின் பின்னணியில் இருக்கக்கூடிய நியாயத்தை வெளிப்படுத்துவதற்கு, இக் குறிப்பின் பிற்பகுதி முனைகிறது. ஏற்றுமதி அபிவிருத்தி இயக்கத்தில் இதுகாலவரை பெற்ற சாதனைகள் மற்றும் அதன் எதிர்கால சாத்தியங்கள் பற்றிச் சில கருத்துக்களுடன் இந்தக் குறிப்பு முடிவடைகிறது. குறிப்பாக இலங்கை அனுபவம் பற்றி இக் குறிப்பில் கூறப்படவில்லை. எனினும் இங்கு தரப்பட்டுள்ள பரந்த விளக்கம், இலங்கையில் சமீப காலத்தில் நிகழ்ந்த கொள்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றங்களை ஆராய்ந்தறிவதற்கான அடித்தளத்தை வாசகனுக்கு அளிக்கிறது.

### இறக்குமதிப் பிரதியீட்டு உபாயமும் அவற்றின் வரையறைகளும்

யுத்தத்துக்குப் பிந்திய உடனடிக் காலங்களில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அரசாங்கங்கள் இரண்டு சாதாரணமான, நேரடிக் காரணங்களுககாக இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கைகளுக்கு நடைமுறையில் மாறின. தொழில்துறைமயமாக்கத்தின் இலக்கை அடைவதற்கும் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவுமே இந்த மாற்றங்கள் நிகழ்ந்தன.

காலனித்துவ காலத்திலிருந்து தொடர்ந்து வந்த ஏற்றத்தாழ்வான பொருளாதாரத்தை மீளமைப்பதற்கான முக்கிய உபாயம் தொழில்துறைமயமாக்கம் என்பதை ஏற்றுக்கொண்டு, இந்த இலக்கை அடைவதற்கான தர்க்கரீதியான மார்க்கம் இறக்குமதிப் பிரதியீடே என அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் கருதின. முதலில் காலனித்துவ எஜமானர்களிடமிருந்து (அபிவிருத்தியடைந்த நாடுகள்) பெருமளவு பொருளாதார சுதந்திரத்தைப் பெறும் அரசியல் இலக்குடன் இது வெகுவாக ஒத்துப் போகிறது. இரண்டாவதாக ஏற்றுமதி அபிவிருத்தி ஒரு வரையறை செய்யப்பட்ட உயர்ந்த, தெரிந்தெடுக்கப்பட்ட தொழில்துறைமயமாக்கத்தையே உறுதி செய்கிறது. ஆனல் மறுபுறத்தில் ஆரம்ப கால இறக்குமதிப் பிரதியீட்டு வேலைத் திட்டங்கள் பரந்த அளவில் தொழில்துறைகள் உருவாக வழி சமைத்தன. மூன்றாவதாக இறக்குமதிப் பிரதியீட்டினூடாக தொழில்துறைமயமாக்க வேலைத் திட்டங்களுககு நிதியளித்தல் கூட கணிசமான அளவு மேலும் அரசியல் கவர்ச்சியைக் கொடுக்கக் கூடியதாகும். சரக்கு வரிகளாக, கோட்டாக்களாக, செலாவணிக் கட்டுப்பாடு போன்ற மற்றும் இத்தியாதி அம்சங்களூடாக ஒருமித்து அளிக்கப்படும் பாதுகாப்பு ஒரு மறைமுகமான முறையில் மக்கள் மீது வரியாகப் போய் விழுகிறது.

ஒரு குறுகிய காலமே நிலவிய கொரிய வரப்பிரசாத காலத்தைத் தவிர, யுத்தத்துக்குப் பிந்திய காலகட்டம் முழுவதும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் அதிகரித்து வந்த இறக்குமதித் தேவைகளுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதிகள் மெதுவாகவே வளர்ச்சி பெற்று வந்தன. இது சர்வதேச வர்த்தக உறவுகளில் தாக்கத்துக்குரிய ஒரு அம்சமாகும். இதன் விளைவாக ஏற்படும் சென்மதி நிலுவை இடைவெளியின் காரணத்தால் இத்தகைய நாடுகளுக்கு இறக்குமதிப் பிரதியீட்டில் ஒரு மாபெரும் கோரிக்கை விடுக்கப்படுகிறது. உள்நாட்டு உற்பத்தி, படிப்படியாக நுகர்பொருள் இறக்குமதித் தேவையைக் குறைக்கிறதென்ற பொதுவான நம்பிக்கையின் அடிப்படையில் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுகிறது.

உண்மையில் இறக்குமதிப் பிரதியீட்டு உபாயம் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் உள்ளூர்ப் பொருளாதார அமைப்புகளில் குறிப்பிடத்தக்க, முக்கியத்துவம் மிக்க மாற்றங்களைக் கொண்டு வந்தது. தொழில் துறைமயமாக்கத்தின் 'வழமையான வரிசைத் தொடரின்' கீழ் தொழிற்சாலைகள் தோற்றுவதிலும் பார்க்க, மிக முன்னதாகவே அவை தோன்றுவதற்கு இது காரணமாகியது. தொழில்துறை உற்பத்திப் பொருட்களின் வளர்ச்சியைத் (தற்காலிகமாகவேனும்) இது துரிதப்படுத்தியது. இதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்தி அமைப்பில் விவசாயத்தின் ஒப்பீட்டு முக்கியத்துவத்தைப் படிப்படியாகக் குறைக்க இது வழிசெய்தது. இந்த மாற்றங்கள் ஏற்பட்டபோதும் இறக்குமதிப் பிரதியீட்டு நடைமுறை அதன் ஆரம்ப இலக்குகளை செயலிழக்கச் செய்தது. இதற்குப் பதிலாக பல அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பல சாதகமற்ற பக்க விளைவுகளை ஏற்படுத்தியது.(1)

சென்மதி நிலுவை சம்பந்தமானவை எப்போதும் ஏமாற்றகரமானதாகவே அமைந்திருந்தன. ஒருபுறத்தில் இறக்குமதி மாற்றுக்குக் கொள்கைகள் உதவியளித்த அதேவேளை ஏற்றுமதி அபிவிருத்திகளை அவை தடைசெய்தன. தற்பாதுகாப்பு நடவடிக்கைகளின் காரணமாக உயர் உறபத்திச் செலவுகள், பெறுமதி அதிகரித்த செலாவணி விகிதம் ஆகியவற்றல் பாதிக்கப்பட்ட ஏற்றுமதியாளர்களைப் பலியிட்டே பிரதானமாக தொழில்துறை உறபத்தியாளர்களுக்கு நலன்கள் ஏற்படுத்தப்பட்டன. மறுபுறத்தில் உள்ளூர் இறக்குமதிக்கான உற்பத்திப் பிரதியீட்டின் அந்நியச் செலாவணிச் சேமிப்புகள் எப்போதுமே குறைவாக இருந்துள்ளன. குறிப்பாக மிகவும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் சந்தையைப் போன்று இயந்திர இறக்குமதிகள் பெரும் சுமையாக அழுத்தின

இறக்குமதிப் பிரதியீட்டின் கீழ் செலாவணிக் கட்டுப்பாட்டு அமைப்பு மூலவளப் பங்கிடலில் திறமையீனத்தை ஏற்படுத்தியதாகவே என்றும் அமைந்திருந்தது. மூலப் பொருள் இறக்குமதிக்கான உதவிகளும் ஸ்திரமான உள்பரிமாண அடிப்படையில் மத்தியதரப் பொருட்களுக்கான இறக்குமதிப் பத்திரங்களைப் பகிர்ந்தளிக்கும் பொது நடைமுறையும் மேலதிக உள்பரிமாண நிர்மாணத்தை ஊக்குவித்தன. எனவே அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பார்க்க குறைந்த ஊக்கத்துடன் தொழில்துறை உட்பரிமாணம் செயல்பட்டுள்ளமைக்குச் சில ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இந்த அம்சமும் அத்துடன் தொழிற்றுறை உற்பத்தியின் ஒவ்வொரு பிரிவுக்கும் பாதுகாப்பளிக்கும் வழமையான நடைமுறையும் இறுதி உற்பத்திப் பொருளின் பெறுமதியிலும் பார்க்கக் கூடிய உற்பத்திச் செலவு ஏற்பட வழிகோலியது. 'எதிர்மறைப் பெறுமானம் சேர்க்கப்பட்டிருக்கும்' அம்சங்களை இறுதியில் அவதானிக்கலாம். அதாவது உலக விலையில் மூலதனச் செலவுப் பெறுமதி, உற்பத்திப் பெறுமதியைவிட சில வேளைகளில் அதிகரிக்கும்.

இறக்குமதி மாற்றுத் தொழிற்றுறைப் பிரிவில் வேலைவாய்ப்பு எதிர்பார்த்த அளவு இடம்பெறவில்லை. வேலையற்ற அல்லது போதிய வேலையற்ற கிராமியத் தொழிலாளரை, விரிவடைந்துவரும் தொழில்துறையால் பூரணமாகச் சேர்த்துக்கொள்ள முடியவில்லை. நாம் ஏற்கனவே குறிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிட்டதைப் போன்று இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கை பொதுவாகத் தொழில் ஊக்குவிப்பு உற்பத்தியைப் பலியிட்டு மூலதன ஊக்குவிப்பு உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதே இதற்குக் காரணமாகும்.

நவீன துறையின் பிடிப்புக்குள் இறக்குமதிப் பிரதியீட்டு நடவடிக்கை தொடர்ந்திருந்தது. தட்டுப்பாடான பொருளாதார வளங்களை பாரபட்சமாக நவீனதுறை பெறுகிறது. நவீனதுறைக்குச சாதகமாகப் பாரபட்சமாக நடக்கும் அரசின் கொள்கைகளும் இதனை மேலும் மோசமாககுகிறது. இதன்விளைவாக உள் ஒருங்கிணைப்புப் பற்றுக்குறையும் பொருளாதாரத்தில் காணப்படும் இரட்டைத் தன்மையும் அடிககடி மோசமடைகிறது.

இறுதியாக, இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கை சமூக ரீதியாகத் திறமையற்றதும் கூட. மிக உயர்ந்த தற்பாதுகாப்புக் கொள்கைகளின் கீழ் ஒரு குறிப்பிட்ட கால பொருளாதார அபிவிருத்திக்குப் பின், சமத்துவமற்ற வருமானப் பங்கீட்டுப் பிரச்சினைகள் முன்பிருந்ததைவிட மேலும் பாரதூரமாகின்றன என்பது வெளிப்படையாக்கப்பட்டுள்ளது. மானியப் பயன்பாடு, அதிகரித்த பெறுமதிமிக்க செலாவணி விகிதங்கள், விலைகுறைந்த இறக்குமதி அனுமதிப் பத்திரங்களின் பங்கீடு, எதிரிடையான வட்டி விகிதத்தில் அளிக்கப்படும் கடன்கள் மற்றும் பல்வகை வரி ஊக்குவிப்புகள பாதுகாப்பான துறையில் இலாபத்தை அதிகரித்து வருமானப் பங்கிடலில் நிலவும் சமத்துவமின்மையை மேலும் மோசமடையச செய்கிறது. (2)

ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கை

இறக்குமதிப் பிரதியீட்டு உபாய வரையறைகள் பற்றி மேலே கூறப்பட்டவை, ஏற்றுமதி அபிவிருத்திக்கூடாகச் சாத்தியமான அபிவிருத்தியில் முக்கியகவனம்செலுத்தும் கொள்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கும் மாற்றம் ஏனெடுக்கப்பட்டன என்பதற்கு விளக்கம் தருகிறது. பாரம்பரிய மற்ற பொருட்கள், பதனிடப்பட்ட ஆரம்ப உற்பத்திப் பொருட்கள், அரை உற்பத்திப் பொருட்கள்,உற்பத்திப் பொருட்கள் என்பனவே பிரதானமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கையின் கீழ் ஏறபடும் வளர்ச்சி, அபிவிருத்தி ஆகியவற்றிலும் பார்க்க ஏற்றுமதி ஊக்குவிப்புக் கொள்கையின் கீழ் ஏற்படும் வளர்ச்சியும் அபிவிருத்தியும் உயர்வானது என்பதே புதியகொள்கை மாற்றத்தின் பின்னணியிலிருக்கும் நம்பிக்கையாகும். ஏற்றுமதி அபிவிருத்தி உபாயத்தின் வளர்ச்சியைத் தூண்டும் அம்சங்கள் பல வகைகளில் தோற்றமளிக்கின்றன என்றும் நம்பப்படுகிறது.

முதலில், ஏற்றுமதி அபிவிருத்தி வெளிப்படையான உலகக் கேள்வியில் தங்கியிருப்பதால் அதன் மூலமான தொழில்துறைமயமாக்கப் போக்கு, ஒரு குறுகிய உள்நாட்டுச் சந்தைக்குள் மட்டுப்படுத்தப் படுத்தும் பாதகமான தன்மையைக் கொண்டிருக்கவில்லை. மறுபுறத்தில் ஏற்றுமதிச் சந்தைக்குள் புகுவதன் மூலம் ஏற்படும் சந்தை அதிகரிப்பு, பரந்த அளவில் பொருளாதாரத்தைத் தேட வழி வகுக்கிறது. சிறிய நாடொன்றுக்குத் தெளிவாகவே இந்த வாதம் மிக முக்கியத்துவமானதொன்றாகும்.

இரண்டாவதாக, ஏற்றுமதித் தொழில்துறைகள் சர்வதேசச் சந்தையில் திருப்திகரமாகப் போட்டியிட வேண்டும். இது திறமையை அதிகரிக்கச் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுவதால் உற்பத்தியாளர்களை மூலதனத்தில் அக்கறை கொள்ளவும் பாவனையாளர் தேவையைக் கணித்துச் செயல்படவும் தூண்டுகிறது.

மூன்றாவதாக வளர்ச்சிக்குக் குந்தகமான தாக்கங்களை ஏற்படுதக் கூடிய அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதற்கு ஏற்றுமதி அபிவிருத்திக் கொள்கை பங்களிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. வரைவிலக்கணத்தைப் பொறுத்தவரை 'முன்னணி வளர்ச்சித் துறை' ஆகக் கூடிய அந்நியச் செலாவணி ஈட்டும் நடவடிக்கைகளில் வளர்ச்சி உபாயம் தங்கியுள்ளது. திருப்திகரமான ஏற்றுமதி வளர்ச்சி வசதியான அந்நியச் சேமிப்பு நிலைக்கு இட்டுச் செல்லலாம். இதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட சென்மதி நிலையில் எதிர்பாராமல் ஏற்படும் விலகல்களை சேமிப்பிலிருந்து நிதியளித்துச் சமாளிக்கலாம். அத்துடன திருப்திகரமான ஏற்றுமதி வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்தும் நிலைநிறுத்துவதானது பொருளாதாரத்தின் கடன் வலுவை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் எத்த[illegible] சென்மதி நிலுவைகளைச் சமாளிக்க வேண்டிய தேவையிருந்தாலும் அதனை ஒழுங்காக்க ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனைகளின் கீழ் கடன் பெற வழி கிடைக்கும். இந்த உபாயத்துக்கு உதவக்கூடியதாக அந்நிய மூலதனம் நாட்டுக்குள் கொண்டுவரப்படின் சென்மதி நிலுவை நிலை மேலும் ஸ்திரமாக்கப்படலாமென்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.

இறுதியாக, இப்போது முக்கியத்துவம் மிக்க பெருந்தொகை வேலைவாய்ப்பு இலக்குக்கு இறக்குமதிப் பிரதியீட்டை விட ஏற்றுமதி அபிவிருத்தி கூடிய பங்களிக்கிறதென நம்பப்படுகிறது. இறக்குமதிப் பிரதியீட்டு உற்பத்திக்குப் பயன்படும் தொழிலாளர்களைவிட ஏற்றுமதி உற்பத்தி பொதுவாகத் தொழிலாளர்களை மேலும் கூடுதலாகப் பயன்படுத்துகிறது. அந்நியச் செலாவணிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவதன்மூலம் ஏற்றுமதி விஸ்தரிப்பு, தொழில்துறைப் பிரிவில் ஒரு இரண்டாந்தர விஸ்தரிப்புக்கு ஆதரவளிக்க முடியும். இதன் மூலம் மேலதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த முடியும்.

சமீபத்திய அனுபவங்களும்
எதிர்காலச் சாத்தியங்களும்

ஏற்றுமதி அபிவிருத்தியை நோக்கிச் சமீபத்தில் செய்துகொள்ளப்பட்ட கொள்கை மாற்றம், உண்மையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதி முறைமையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டு வந்தன. 1960ம் ஆண்டுகளின் மத்தி வரை உலக ஏற்றுமதியில் இந்த நாடுகளின் பங்கு குறைந்துகொண்டே வந்தது. கடந்த இருதசாப்தங்களிலும் இந்த முறைமை மிகக் கூடியளவுக்கு மாறி இந்தப் பங்களிப்பில் கிட்டத்தட்ட மூப்பது சதவீத அதிகரிப்புக்கு வழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருத்தது. 1960ம் ஆண்டிலிருந்து 1975 வரை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலிருந்து உற்பத்திப் பொருள் ஏற்றுமதிகள் வருடாந்தம் 12 சத வீதத்துக்கு மேலான ரீதியில் விருத்தியடைந்து வந்தன.(3) 1973ம் ஆண்டிலிருந்து உலக பொருளாதாரம், பெரும் பின்னடைவால் அவதியுற்ற வேளையிலும் 1960ம் ஆண்டுகளின் பிற்பகுதியிலும் 1970ன் ஆரம்ப காலங்களிலும் இந்த வளர்ச்சி துரிதமடைந்தது.

மேலே கூறப்பட்டது போல் ஏற்றுமதி அபிவிருத்தி முயற்சியின் அனுபவங்கள் ஊக்கமளிப்பவையாக இருந்தபோதும் கூட உற்பத்தியாளர்களுக்கான உலகச் சந்தை எதிர்காலத்தில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதித் தேவைகளை ஆதரிக்குமா என்பது இன்னமும் கேள்விக் குறியாகவே உள்ளது. விநியோகம், கேள்விப் பகுதிகளிரண்டிலும் வரையறைகள் உண்டு.

கூடிய தொழில் ஊக்குவிப்பு உற்பத்திப் பொருட்களுக்கான சுங்க வரி விகிதம் ஒப்பீட்டளவில் அதிகமாக இருக்கும். அபிவிருத்தியடைந்த நாடுகளின் கட்டுப்பாடான வர்த்தகக் கொள்கைகளினால் கேள்வித் தரப்பைப் பொறுத்த வரையில் இடையூறுகளுள்ளன. குறிப்பாக ஆடை, ஜவுளி, பாதணி ஆகியவற்றின் மீதான சுங்க வரி விகிதங்கள் அதிகமானதாகும். இந்தப் பொருட்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு அனுப்பும் உற்பத்தி செய்யப்பட்ட ஏற்றுமதிப் பொருட்களில் நாலிலொன்றுக்கும் அதிகமானதாகும். அத்துடன் குறிப்பாக இலங்கை போன்ற வறிய, குறைந்த தொழில் துறைகளைக் கொண்ட நாடுகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

விநியோகத் தரப்பைப் பொறுத்த வரையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் ஏற்றுமதிகள் சில உற்பத்திகளின் மீதே கவனஞ் செலுத்துகின்றன. உதாரணத்துக்கு 1975ம் ஆண்டு ஜவுளி வகைகளும் ஆடைகளும் கிட்டத்தட்ட இந்த ஏற்றுமதிகளின் 30 சதவீதத்துக்குப் பங்களித்தன. ஏற்கனவே கட்டுப்படுத்தப்பட்டுள்ள கொள்வனவாளர்களுக்கு அதே பொருட்களை மேலும் திணிப்பது விலைகளைக் குறைக்கக் கூடும் என்பதுடன் அரசியல் எதிர்ப்பையும் சந்திக்க வேண்டிய ஆபத்துமுண்டு.

வர்த்தகத்துக்கு இப்போதிருக்கக் கூடிய தடைகளைக் குறைப்பதற்கும் புதிய தடைகளைத் தவிர்ப்பதற்குமான இலக்குகளுடன் சர்வதேசக் கூட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். புதிய அரைத் தொழில்துறை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளான ஸ்பெய்ன், கொரியா, மெக்ஸிகோ, பிரேஸில், யூகோஸ்லாவியா ஆகியவற்றைப் படிப்படியாக கனரகத் தொழில்துறை ஏற்றுமதி நாடுகளாக ஆக்குவதன் மூலம் சாதாரண தொழில் ஊக்குவிப்பு ஏற்றுமதி உற்பத்தித் துறைகளுக்கு "புதியவர்கள்" வருவதற்கு வசதிகள் செய்யப்படவேண்டும். ஏற்றுமதி அபிவிருத்தியூடாக பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கான எதிர்காலச் சாத்தியங்கள் மேற்கூறப்பட்டவற்றிலேயே சாராம்சத்தில் தங்கியுள்ளன.

மேற்கூறப்பட்ட திசையில் திருப்திகரமான கொள்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலும் கூட ஏற்றுமதி அபிவிருத்தி உபாயத்தைத் தேர்ந்தெடுக்கும் நாடொன்றுக்கு கட்டாயமாக வெற்றி உறுதிப்படுத்தப்பட மாட்டாது. பாரம்பரியமான ஆரம்ப உற்பத்திப் பொருட்களைப் போலன்றி ஏற்றுமதி உற்பத்தியில் பெறப்படும் வெற்றி, பெருமளவில் வினைத்திறனுடைய, கடின உழைப்புள்ள தொழிற்சக்தியூடாகவும்; பல்வேறு அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் காணப்படும் பிரதான வேறுபாடுகளின்றி உள்ளூர் உற்பத்தியாளர்கள் அளிக்கும் சிறந்த விநியோகத்தின் மூலமாகவும், ஒரு உறுதியான திறமையான அபிவிருத்திக் கொள்கை மூலமாகவுமே கிடைக்கிறது என்பதைப் புதிதாகத் தொழில்துறை அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் அனுபவம் காட்டுகிறது.

குறிப்புகள்

1. இறக்குமதிப் பிரதியீட்டினதும் ஏற்றுமதி அபிவிருத்தியினதும் ஒப்பீட்டுத் திறமைகளும் வரையறைகளும் வர்த்தக, அபிவிருத்தி நூல்களில் நன்கு விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இவற்றுள மிகவும் பயன்மிக்க முறையில் எடுத்தாளப்பட்டவை, லிட்டில். ஸ்கிட்டோவ்ஸ்கி, ஸ்கொட் (1970), ஹக்வதி (1978), குரூகர் (1978). இந்த அறிக்கையின் அனுபந்தம் இத்தகைய ஆய்வுகளிலிருந்து பெரிதும் எடுத்தாண்டுள்ளது.

2. இலங்கையில் இறக்குமதிப் பிரதியீட்டுச் சகாப்தத்தின்போது வருமான சமத்துவமின்மையின் அளவில் வீழ்ச்சியொன்று காணப்பட்டது. எனினும் இந்தப் பகுதியிலுள்ள வாதத்தை இது மறுதலிக்கவில்லை. இறக்குமதிப் பிரதியீட்டுக் கொள்கையிலுள்ள சமத்துவமின்மை நெருக்கடிக்குப் பெரிதும் ஈடாகக்கூடிய சமூக நலன்புரி நடவடிக்கைகளின் விளைவாகவே சமத்துவத்தை நோக்கிய இந்தப் போக்கு பிரதானமாக ஏற்பட்டிருக்கும்.

3. இங்கு பயன்படுத்தப்பட்ட புள்ளி விவரங்கள் செனரி அற் எல்லிலிருந்து எடுக்கப்பட்டவை (1979).

எடுத்தாளகை

ஹக்வதி ஜே. என். (1978), அந்நிய வர்த்தக பரிபாலனங்களும் பொருளாதார அபிவிருத்தியும்; அந்நியச் செலாவணிப் பரிபாலனங்களின் விளைவுகளும் உள்ளீட்டு ஆராய்ச்சியும், நியூயோர்க்: பொருளாதார ஆய்வுக்கான தேசியப் பணியகம்.

க்ரூகர், ஏ. ஓ. (1978), அந்நிய வர்த்தகப் பரிபாலனங்களும் பொருளாதார அபிவிருத்தியும்; தாராளமயமாக்க முயற்சிகளும் விளைவுகளும், நியூயோர்க்: பொருளாதார ஆய்வுக்கான தேசியப் பணியகம்.

லிட்டில், ஐ.ரி. ஸ்கிட்டொவ்ஸ்கி, எம். ஸ்கொட் (1970), சில அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தொழில்துறையும் வர்த்தகமும்—ஓர் ஒப்பீட்டு ஆய்வு, ஒக்ஸ்போர்ட்: ஒக்ஸ்போர்ட் யூனிவேர்சிட்டி பிரஸ்.

செனெரி, எச். பி. எல் அல் (1979) அபிவிருத்தியடைந்து வரும் நாட்டு ஏற்றுமதிகளின் மாறிவரும் அமைப்பு, உலக வங்கிச் செயலறிக்கை இல. 314.

# உள்நாட்டுக் கைத்தொழில் உற்பத்திக்கு இருந்துவரும் கட்டுப்பாடுகளும் அதன் எதிர்கால வாய்ப்புகளும்.

அரசாங்கத்துறை, தனியார் துறை ஆகிய இரண்டிலும் கைத்தொழில் உற்பத்தி வளர்ச்சி விகிதம் கடந்த ஆண்டில் குறைந்ததெனினும், 1982 ஆம் ஆண்டில் நிலைமை அபிவிருத்தியடையும் எனக் கைத்தொழில் அமைச்சு எதிர்பார்க்கின்றது. அமைச்சின் முன்னேற்ற மீளாய்வுப் பகுதியிலிருந்து வெளிவந்த பிரசுரமொன்றுக்கு அமைச்சுக் காரியதரிசி ஜஸ்டின் டயஸ் அளித்துள்ள முன்னுரையில், அமைச்சின் அதிகார எல்லைக்குட்பட்ட அரசாங்கததுறை கைத்தொழில்கள் சம்பநதமாக 1982 ஆம் ஆண்டில் சுமார் 10 சதவிகித வளர்ச்சி விகிதம் எதிர்பார்க்கப்படுவதாகக் கூறுகிறார்.

1980 ஆம் ஆண்டில் கைத்தொழில் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு முந்திய வருடத்தின் 4 சதவிகிதத்துடன் ஒப்பிடுகையில், 6 சதவிகிதமாயிருக்மென மதிப்பிடப்பட்டது. 1980 ஆம் வருட வளர்ச்சி விகிதம், ஒரு நியாயமான பொருளாதார வளர்ச்சி விகிதத்தை எய்துவதற்கு நாட்டுக்கு உதவப் போதியதாக இல்லை எனக் கருதப்பட்டது; இந்த இலக்கை அடைய ஏறக்குறைய 12 சதவிகித வளர்ச்சி விகிதம் தேவையாயிருந்தது. இந்நிலைமையை முன்னிட்டு, 1981 ஆம் ஆண்டில் உற்பத்திப் பெருக்க வாய்ப்பு "சற்றே கவலைதருவதாக" இருக்கிறதென வர்ணிக்கப்பட்டது. 1981 ஆம் ஆண்டில் (பெற்றோலியம் கூட்டுத்தாபனம் நீங்கலாக) அரசாங்கத் துறை முயற்சிகளின் மொத்த உற்பத்தி ஓரளவு அதிகரித்த போதிலும், உண்மையில் கடந்த வருடம் அரசாங்கத் துறை கைத்தொழில் முயற்சிகளின் கூட்டு மொத்த உற்பத்தி, 1980 ஆம் வருட உற்பத்தி மட்டங்களுடன் ஒப்பிடுகையில், 1 சதவிகிதக் குறைவைப் பதிவு செய்துள்ளதாக மதிப்பிடப்படுகிறது. இதற்குப் பிரதான காரணம் பெற்றோலியம் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி கணிசமான அளவில் குறைந்ததேயாகும். அதன் வடிசாலை பழுதுபார்க்கப்படுவதற்காக 1981 பெப்ரவரியில் மூடப்பட்டுவிட்டது.

1980 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1981 ஆம் ஆண்டில் உற்பத்தியில் வீழ்ச்சி கண்ட மற்றும் கைத்தொழில் துறைகளும் உள்ளன. மத்திய வங்கி வைத்திருக்கும் ஒரு குறியீட்டெண் அட்டவணைப்படி, வார்ப்பு உலோகப் பொருள்களின் உற்பத்தியில் 29 சதவிகித வீழ்ச்சி ஏற்பட்டது. அடிப்படை உலோகப் பொருள்கள், மரங்கள், மரப்பொருள்கள் ஆகிய துறைகளின் உற்பத்தியில் 14 சதவிகித வீழ்ச்சி ஏற்பட்டது; உணவுப் பொருள்கள், குடிபானங்கள், புகையிலைப் பொருள்கள் ஆகியனவற்றின் உற்பத்தி 7 சதவிகிதமும் இரசாயனப் பொருளகளின் உற்பத்தி 5 சதவிகிதமும் குறைந்தன.

கைத்தொழில்துறையில் உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு 1981-ம் ஆண்டின் முற்பகுதியில் உற்பத்திக் கைத்தொழில்கள் "முன்னெப்போதுமில்லாதவாறு" மின் சக்தி விநியோகத்தில் இடைநிறுத்தங்களை அனுபவிக்கவேண்டியிருந்ததே காரணம் என உத்தியோக பூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், பாதிக்கப்பட்ட அநேக கைத்தொழில்கள் நிலைமையை அனுசரித்து, தேவைப்பட்டபோது பிரயோகிப்பதற்கென மின்பிறப்பாக்கிகளை (ஜெனரேட்டர்கள்) உடனடியாக அமைத்துக் கொண்டதனாலும் தங்களுடைய முறைக்கட்டமை ஏற்பாட்டில் தேவையான திருத்தங்களைச் செய்துகொண்டதனாலும், தடைப்பட்ட மின்சக்தி வழங்கலின் விளைவு குறைக்கப்பட்டது.

வங்கிகள் கடன் கொடுப்பதன் மீதும் ஒரு கட்டுப்பாடு இருந்தது. அதன் விளைவாகப் பணம் பெறுவது அதிக செலவை உண்டாக்கும் ஒரு காரியமாகிவிட்டது; பணம் கிடைப்பது கடினமாகிவிட்டது. இத்துறைக்கு வங்கிகளால், வழங்கப்பட்ட முற்பணங்கள், 1981 ஆம் ஆண்டின் முதற்பாதியில் வளர்ச்சி விகிதம் முந்திய வருடத்தின் நேரொத்த காலத்துடன் ஒப்பிடுகையில் கணிசமான மந்தகதியை அடைந்துவிட்டதென எடுத்துக்காட்டின. இக்காலத்தில் உடுதுணிக் கைத்தொழிலுக்கும் தோல் கைத்தொழிலுக்கும் வழங்கப்பட்ட முற்பணங்களில் 105 மில்லியன் ரூபா குறைந்துவிட்டது. (1981 ஜூன் மாத முடிவுவரை உற்பத்திக் கைத்தொழில்களுக்கு வழங்கப்பட்ட மொத்த வங்கி முற்பணத் தொகை 3,324 மில்லியன் ரூபாவாகும்.) தங்களுடைய முற்பணங்களில் குறைவுகளைப் பதிவுசெய்த மற்றும் கைத்தொழில் துறைகள்: அடிப்படை உலோகப் பொருள்கள் (6 மில்லியன் ரூபா), வார்ப்பு உலோகப் பொருள்கள், இயந்திர சாதனங்கள், போக்குவரத்துச் சாதனங்கள் (50 மில்லியன் ரூபா), ரப்பர், பிளாஸ்டிக் பொருள்கள் (36 மில்லியன் ரூபா).

கைத்தொழில்கள் சுமுகமாக நடப்பதைப் பாதிக்கத் தொடங்கிய மற்றொரு குறிப்பிடத்தக்க காரணி யாதெனில், முக்கியமான தேர்ச்சித் திறன்கள் படைத்தோர் படிப்படியாக நாட்டிலிருந்து அகன்றதாகும். விஞ்ஞானத் தேர்ச்சி பெற்றோரும் வினைத்திறமைபடைத்தோரும் குறைவாயிருந்ததால் விஞ்ஞான, கைத்தொழில் ஸதாபனங்கள் பாதிக்கப்பட்டன. கணக்கறிஞர்கள், சில வகை எஞ்சினியர்கள், சந்தைப்படுத்தும் கலையில் தேர்ச்சி பெற்றோர் போன்ற மற்றும் முகாமைத் திறன் படைத்தோருக்கும் தொடர்ந்து தட்டுப்பாடு இருந்துவந்தது. 1981 ஆம் ஆண்டளவில் நடுத்தர தேர்ச்சிபெற்ற ஊழியர்களுக்குக் கூட தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டதென அவதானிக்கப்பட்டது. நுட்பமான தேர்ச்சி தேவைப்பட்ட வேலைகளைச் செய்யக்கூடிய ஆட்களுக்கும், ஏன்,



Appropriate Technology Services
121, POINT-P... O ROAD
NALLUR, JAFFNA
No.......
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருக்கி ஒட்டுபவர்கள் (வெல்டர்), மரத்தச்சர்கள், கொத்தர்கள், மின்னியலாளர், மோட்டார் சாரதிகள் போன்றவர்களுக்குங்கூட பெருந் தட்டுப்பாடு நிலவியது. இதனால் மூலதனத் திட்டங்களைத் துரிதமாகப் பூர்த்தி செய்வது பாதிக்கப்பட்டது; சில சமயங்களில் வழமையான உற்பத்திகூட தடைப்பட்டது.

எனினும், அடிக்கடி எழுப்பபபடும் கேள்வி ஒன்று உண்டு. தாராளமாக்கப்பட்ட இறக்குமதிக் கொள்கைகள் எவ்வளவு தூரம் குறிப்பிட்ட கைத்தொழில் துறைகளைப் பாதித்தன? ஏற்கனவே எடுத்துக்காட்டப்பட்ட அந்தக் குறிப்பிட்ட பொருள்களில் (இவற்றின் உற்பத்தியில் குறைவுகள் பதிவு செய்யபபட்டன) பெரும்பாலானவற்றைப் பொறுத்தவரை, அவற்றை நேரடி இறக்குமதி செய்து, விநியோகிப்பது எவ்வளவோ அதிக இலாபந் தருவதாயுள்ளதென்பது நிரூபணமாகியிருக்கிறது. அரசாங்கத்துறையில், கடதாசி, தோல்பொருள்கள், வெண்மட்பாண்டங்கள், உருக்குப் பொருள்கள், வன்பொருள்கள் ஆகியன இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களிடமிருந்து பலத்த போட்டியை எதிர்நோக்கின. உதாரணமாக, இறக்குமதி செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருள்களிலிருந்து செய்யப்பட்ட மிக மலிவான பாதணி வகைகளிடமிருந்து தோன்றிய போட்டியை எதிர்நோக்குவது இலங்கை தோல் பொருள்கள் கூட்டுத்தாபனத்துக்குக் கடினமாயிருந்தது. மேலும், நாட்டுக்குள் மிக மலிவான கடதாசி வகைகள் இறக்குமதி செய்யப்பட்டதன் காரணமாக தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனமும் தனது உற்பத்திப் பொருள்களைச் சந்தைப்படுத்துவதில் கஷ்டங்களை எதிர்நோக்கியது. தெரிய வந்துள்ள இன்னொரு தெளிவான உதாரணம், கண்ணாடியாகும். இலங்கை கண்ணாடி கம்பெனி (ஓர் அரசாங்கக் கம்பெனி)யின் தலைவர் அண்மையில் நடைபெற்ற அதன் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இறக்குமதிகள் கம்பெனியை மிகப் பாரதூரமாகப் பாதித்துள்ளனவென்று தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. கையிருப்பில் உள்ள 79,000 குரோஸ் கண்ணாடிப் பொருள்கள் விற்கப்படாமல் கிடந்தன. இதனால் 1981 ஆம் ஆண்டுக்குரிய நஷ்டம் 14 மில்லியன் ரூபா. இதன் விளைவாக, கம்பெனியின் இரு தொழிற்சாலைகள் ஆறு மாதகாலத்துக்குத் தற்காலிகமாக மூடப்பட்டன.

குறைந்த விலை குறிக்கப்பட்ட பொருள்கள் (தரக்குறைவானவை கூட) பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டிருப்பது சாத்தியமெனக் கைத்தொழில் அமைச்சின் காரியதரிசி கடந்த ஆண்டு முடிவில் கூறினார். ஏனென்றால், சில நாடுகள் தங்கள் நாட்டில் உபரியாயுள்ள பொருள்கள் தாராளமாக்கப்பட்ட இறக்குமதிக் கொள்கைகளைக் கொண்ட எங்கள் நாட்டைப் போன்ற நாடுகளுக்குத் தங்குதடையின்றி ஏறறுமதி செய்யப்படுவதற்கு உதவியாக விசேஷ ஏற்றுமதி ஊக்குவிப்புகளை அளிக்கின்றனவென்று அவர் குறிப்பிட்டார். எனினும், "1982 ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்படும் நிறைவுப் பொருள்கள் சம்பந்தமாகத் தற்போதுள்ள நிலையில் சில திட்டமான மாற்றங்கள் செய்யப்படுமென நம்பப்படுகிறது. ஏனென்ஏறுல், இறுப்புப் பட்டியலில் (தீர்வைமுறை) செய்யப்படும் மாற்றங்களுடன், இறக்குமதிகளோடு நியாயமாகப் போட்டியிடுவதற்கு அனுமதிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது" என்று அவர் கூறினார். 1982 ஆம் ஆண்டில் அரசாங்கத் துறைக் கைத்தொழில்களில் 10 சதவிகித வளர்ச்சி ஏற்படுமென அவர் வெளியிட்ட மூற்கணிப்பு இந்த எதிர்பார்ப்பை அடிப்படையாகக் கொண்டதென்றே தோன்றுகிறது.

தாராளமாக்கிய கொள்கைகள் சில அம்சங்களில் கைத்தொழில் துறைக்கு நன்மை செய்திருப்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. உதாரணமாக, உற்பத்தியாளர்கள் தங்களுடைய பொருள்களின் தர்த்தை உயர்த்திவைத்துக் கொண்டு, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுடன் சந்தை

முயன்றுள்ளார்கள். புதிய இயந்திர சாதனங்கள், புதிய தொழில்நுட்ப முறைகள், உயர்தர மூலப் பொருள்கள் யாவும் மிகத் தாராளமாகக் கிடைக்கின்றன. எறக்குறைய 1978 ஆம் ஆண்டிலிருந்து சில கைத்தொழில் அதிபர்களிடம் ஒரு புதிய உற்சாகம் காணப்படுகிறது. துணிகள், உலோகப் பொருள்கள் போன்ற உள்நாட்டுக் கைத்தொழில் துறைகளில் பொதுவாக விருத்தி செய்யப்பட்டுள்ள உற்பத்தித் தரங்களிலும் நிறைவுத் தன்மையிலும் இதன் பயன்களைக் காணக்கூடியதாயிருக்கிறது.

இந்த நிலைமையில் ஒரு முரண்பாடும் காணப்படுகிறது. சில கைத்தொழில்கள் தாராளமாக்கிய பொருளாதாரக் கொள்கைகளின் நன்மைகளை அனுபவித்து, சர்வதேச தரங்களைக் கொண்ட பொருள்களுடன் போட்டியிடுவதற்கேற்ற முறையில் தங்களைத் திருத்தி அமைத்துக் கொண்டுள்ள அதே வேளையில், மற்றும் பலகைத் தொழில்கள் தங்களுடைய வளர்ச்சிக்கு இந்தக் கொள்கைகள் பெருந் தடங்களாயிருப்பதைக் கண்டுள்ளன. (1978 ஆம் ஆண்டில் உள்நாட்டுக் கைத்தொழில்களில் 50 சதவிகிதத்துக்குச் சற்று மேற்பட்டவையே புதிய தாராளமாக்கப்பட்ட கொள்கைகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டன என்பதை மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி நடத்திய பரிசீலனை ஒன்று எடுத்துக்காட்டியது.) (ஆதலால், அடுத்து எடுக்கப்பட வேண்டிய தர்க்கரீதியான நடவடிக்கை என்னவென்றால், உள்நாட்டுக் கைத்தொழில்களின் விஸ்தரிப்பையும் தர உயர்வையும் தூண்டுவதற்குச் சாதகமான ஒரு சூழ்நிலையைச் சிருஷ்டிப்பதாகும். அதே சமயத்தில் உள்நாட்டுக் கைத்தொழில்கள் இப்பொழுது எதிர்நோக்கும் கட்டுப்பாடுகள் படிப்படியாக அகறறப்பட வேண்டும். இறக்குமதிகளை முற்றாகக் கட்டுப் [illegible] படுத்துவதோ அல்லது விலைக் கட்டுப்பாடுகளை முற்றாக அகற்றுவதோ இதுவரை உதவவில்லை. இறக்குமதிகளை அடியோடு கட்டுப்படுத்தியதன் விளைவாகச் சந்தைக்குப் பாதுகாப்புக் கிடைதது, நுகர்வோருக்குப் பயனற்ற கீழ்க்தரமான பொருள்கள் மட்டுமே கிடைத்துள்ளன; விலைக் கட்டுப்பாட்டின் விளைவாக நுகர்வோரின் செலவில் உற்பத்தியாளர்கள் மனசசாட்சிக்கு விரோதமாக அநியாயமான இலாபங்களையே பெற்றுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபாற் கந்தோரில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

# பொருளியல் நோக்கு

மக்கள் வங்கி ஒரு சமூகப்பணித் திட்டமாக "பொருளியல் நோக்கை" வெளியிடுகின்றது. பாரபட்சமற்ற பரிசீலனைகள், கருத்தாழமிக்க கலந்துரையாடல்கள் என்பன மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்திப் படிமுறையிலும் ஆர்வத்தினை உண்டாக்கி அறிவினை வளர்ப்பதே எமது குறிக்கோளாகும். நாட்டின் மிக முக்கியமான சமூக, கலாசாரத் தேவைகள் குறித்து வங்கியின் வளங்கள் பயன்படுத்தப்படும் பல்வேறுபட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

மேலும், மக்கள் வங்கி, நாடெங்கணும் சிதறிக் காணப்படும் 200 க்கும் அதிகமான அதன் கிளைகள் மூலமும், சுமார் 550 கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் மூலமும், கடற்றொழில் வங்கிகள் மூலமும் விரிவான சகல வங்கிச் சேவைகளையும் வழங்கி வருகின்றது. உலகெங்கணுமிருக்கும் முகவர்கள், பிரதிநிதிகள் என்போரின் உதவியுடன் சர்வதேச வர்த்தகம், கொடுப்பனவுகள் என்பன குறித்த சகல அம்சங்களையும் வங்கி மேற்கொண்டு வருகின்றது.

வருடாந்த விலை விபரம்

ஸ்ரீலங்கா— ரூ. 32/-
தெற்கு ஆசியா—டொலர் 16/-
தென்கிழக்காசியா—டொலர் 18/-
ஆபிரிக்கா— டொலர் 18/-
ஜப்பான்— டொலர் 20/-
மத்தியகிழக்கு டொலர் 20/-
உலகின் ஏனைய நாடுகள்— டொலர் 22/-

ஒரு பிரதி விலை—
உள்நாட்டு— ரூபா 2/50.
வெளிநாட்டு— டொலர் 2/



## மக்கள் வங்கியின் ஆராய்ச்சிப் பகுதி வெளியீடு

அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒவ் சிலோன் லிமிட்டெட் கம்பனியாரால் கொழும்பு டி. ஆர். விஜயவர்த்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் அச்சிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org